# மனித வியாபாரக் குற்றத்தை இலங்கையினுள் தடுப்பதற்கான பயிற்றுவிப்பு வழிகாட்டல் கையேடு

மனித வியாபாரத்தை தடுப்பதற்கான தேசிய மனித வியாபார தடுப்பு படையணியில் அங்கத்துவம் வகிக்கும் நிறுவனங்களின் உத்தியோகத்தர்களது பாவனைக்கானது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித வியாபாரக் குற்றத்தை இலங்கையினுள் தடுப்பதற்கான பயிற்றுவிப்பு வழிகாட்டல் கையேடு

மனித வியாபாரத்தை தடுப்பதற்கான தேசிய மனித வியாபார தடுப்பு படையணியில் அங்கத்துவம் வகிக்கும் நிறுவனங்களின் உத்தியோகத்தர்களது பாவணைக்கானது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மனித வியாபாரக் குற்றத்தை இலங்கையினுள் தடுப்பதற்கான பயிற்றுவிப்பு வழிகாட்டல் கையேடு**

செப்டெம்பர் 2017

ISBN 978-955-0152-09-4

IOM மனிதாபிமானமிக்கதும் ஒழுங்கானதுமான புலம்பெயர்வு புலம்பெயர்வோருக்கும் சமூகத்திற்கும் நன்மையளிக்கின்றது என்ற தத்துவத்தில் உறுதி பூண்டுள்ளது. அரசாங்கங்களுக்கிடையிலான அமைப்பு என்ற வகையில் IOM நிறுவனம் தனது சர்வதேச சமூகத்தின் பங்காளிகளுடன் இணைந்து பின்வரும் முறைகளில் செயற்படுகின்றது: புலம்பெயர்வின் செயன்முறை சவால்களுக்கு முகம் கொடுப்பதில் உதவுதல், புலம்பெயர்வுப் பிரச்சினைகள் பற்றிய புரிதலை மேம்படுத்தல், புலம்பெயர்வுக்கூடாக சமூக பொருளாதார அபிவிருத்திகளை ஊக்குவித்தல், புலம்பெயர்வோரின் கௌரவத்தையும் நலனையும் நிலைநிறுத்துதல்.

இவ்வழிகாட்டி ஏட்டின் அத்தியாயங்களில் வெளிப்படுத்தப்படும் அபிப்பிராயங்கள் அதனை ஆக்கியவர்களுடையவையே அன்றி IOMஇன் கருத்துக்களை பிரதிபலிக்க வேண்டுமென்ற அவசியமில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளடக்கம்


முன்னுரை i

மாண்புமிகு நீதி அமைச்சரின் செய்தி iii

மாண்புமிகு பிரதி அமைச்சரின் செய்தி v

செயலாளரின் செய்தி vii

1. மனித வியாபாரத்தை புரிந்து கொள்ளல் 1

- 1.1 அறிமுகம் 2
- 1.2 இலங்கையில் மனித வியாபாரம் தொடர்பான நிலைமைகள் 3
- 1.3 மனிதர்களுக்கிடையிலான மனித வியாபாரம் தொடர்பான வரைவிலக்கணம் 4
- 1.4 மனித வியாபாரத்தின் மூன்று முக்கிய பகுதிகள் 6
- 1.5 சிறுவர்களின் மனித வியாபாரம் 6
- 1.6 நினைவிற் கொள்ளவும் - பாதிக்கப்பட்டவரின் சம்மதம் 7
- 1.7 ஆட்கடத்தல் 7
- 1.8 மனித வியாபாரத்துக்கும் ஆட்கடத்தலுக்கும் இடையிலான பிரதான வேறுபாடுகளை அறிந்துக்கொள்ளல் 8

2. சட்ட நடைமுறை 11

- 2.1 அறிமுகம் 12
- 2.2 நாடுகளுக்கிடையில் கிரமமான முறையில் இடம்பெறும் குற்றங்களுக்கெதிரான ஐக்கிய நாடுகள் சபையின் மாநாடு பற்றிய பொதுவான பார்வை (UNTOC) 12
  - 2.2.1 விசேடமாக பெண்கள் சிறுவர்கள் மீதான மனித வியாபாரத்தை தடுத்தல், இல்லாதொழித்தல், தண்டனை வழங்குதல் தொடர்பான ஐக்கிய நாடுகள் சபையின் அரசியற் கொள்கை 13
  - 2.2.2 தரை, கடல் ஆகாய வழியாக புலம் பெயர்தல் தொடர்பான ஆட்கடத்தலுக்கு எதிரான அரசியற் கொள்கை 14
- 2.3 ஆட்கடத்தல் 15
- 2.4 பிராந்திய சட்ட நடைமுறை 15
- 2.5 தேசிய சட்ட நடைமுறை 16
  - 2.5.1 மனித வியாபாரம் தொடர்பான இலங்கையின் சட்ட நடைமுறைகள். 16
  - 2.5.2 கொள்முதல் / வாங்குதல் 17
  - 2.5.3 ஆட்கடத்தல் தொடர்பான இலங்கைச் சட்டம் 18



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. மனித வியாபாரத்தால் பாதிக்கப்பட்ட நபர்களை இனங்காணுதல் 19

3.1 பாதிக்கப்பட்ட நபர்களை இனங்காணுவதன் முக்கியத்துவம் 20

3.2 பாதிக்கப்பட்டவர்களை இனங்காணக்கூடிய சுட்டிகள். 23

3.3 மனித வியாபாரத்தால் பாதிக்கப்பட்ட சிறுவர்களை இனங்காணுதல். 26

3.4 பாதிக்கப்பட்ட நபர்களை யாரால் இனங்காண முடியும்? 26

4. பாதிக்கப்பட்ட நபர்களை நேர்காணல் 27

4.1 பாதிக்கப்பட்ட நபர்களை நேர்காணல் 28

4.2 நேர்காணலுக்கான முன்னேற்பாடுகளை செய்தல் 29

4.3 பாதிப்புக்குள்ளாகக்கூடிய நபரை நேர்காணலுக்கு உட்படுத்தும்போது எதிர்கொள்ளக்கூடிய முக்கிய பிரச்சினைகள். 29

4.4 நேர்காணல் நிலைமைகள் 30

4.5 மனித வியாபாரத்தால் பாதிக்கப்பட்ட நபரை நேர்காணலுக்கு உட்படுத்தல் செய்யக்கூடியவையும் செய்ய முடியாதவையும் 32

5. பாதிக்கப்பட்டவரின் பாதுகாப்பு 35

5.1 பாதிக்கப்பட்டவரின் பாதுகாப்பு தொடர்பான முக்கியத்துவம் 36

5.2 பாதிக்கப்பட்டவரின் பாதுகாப்புத் தேவையை புரிந்துக் கொள்ளுதல் 36

5.3 உரிமை தொடர்பான அணுகுமுறை 37

5.3.1 மனித உரிமை தொடர்பான பாதுகாப்பும் மதிப்பளித்தலும். 37

5.3.2 குற்றத்தால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகளுக்கு வழங்கப்படக்கூடிய உதவியும் பாதுகாப்பும். 40

5.3.3 OHCHR (The office of the United Nations High Commissioner For Human Rights) மனித உரிமைகள் தொடர்பான ஐக்கிய நாடுகள் தாபனத்தின் உயர் ஸ்தானிகர் அலுவலகம் 41

6. பங்களிப்பும் பொறுப்புக்களும் 43

பங்களிப்பும் பொறுப்புக்களும் 44

காவற்துறையினர் (பொலிஸ்) 44

குடிவரவு அதிகார சபை 45

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் (SLBFE) 46

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை 47

விடய ஆய்வுகள் 50

பின்னிணைப்பு 1 54

பின்னிணைப்பு 2 55

பின்னிணைப்பு 3 58

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

மனித வியாபாரம் எனப்படுவது எல்லைகளையும் சட்ட வரம்புகளையும் தாண்டி நிகழும் ஒரு ஒழுங்குபடுத்தப்பட்ட பெரும் குற்றமாகும். இது இலங்கையில் 2006ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க தண்டனைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டத்தின் கீழ் தண்டனைக்குரிய குற்றமாகும்.

இப்பயிற்றுவிப்புக் கையேடானது மனித வியாபாரம் சம்பந்தப்பட்ட சர்வதேச சட்ட வரையறைகள் மற்றும் பாதிப்புற்றோரை இனங்காணல், பாதுகாத்தல் பற்றிய ஏற்றுக்கொள்ளப்பட்ட கொள்கைகள், தேசிய மனித வியாபார தடுப்புப் படையணியின் கருத்துக்கள் என்பவற்றை கருத்திற் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது. இது விடயத்தில் கருமமாற்றி பாதிக்கப்பட்டவர்களை சந்திக்க நேரிடும் பங்குதாரர்களிடத்தில் மனித வியாபார நிகழ்வு பற்றிய விழிப்புணர்வை அதிகரிக்கும் ஒட்டுமொத்த முயற்சியின் ஒரு அங்கமாகவே தேசிய மனித வியாபார தடுப்புப் படையணி இதனை செய்துள்ளது. படையணியின் அங்கத்தவர்கள் தமது நிறுவனங்களுக்குள்ளும், இன்னும் பரந்தளவில் மத்திய அல்லது பிராந்திய அரசாங்க உத்தியோகத்தர்களுக்கும் மற்றும் இலங்கையின் தூதரகங்களில் பணிபுரியும் அதிகாரிகளுக்கும் பயிற்றுவிப்புக்களை மேற்கொள்ளவும் ஒரு கருவியாய இக்கையேடு உபயோகப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாண்புமிகு நீதி அமைச்சரின் செய்தி

மனித வியாபாரம் ஒழுங்குசெய்யப்பட்ட ஒரு குற்றம் என்பதனாலும் தேச எல்லைகளை விஞ்சி பரவுவதனாலும் மனித வியாபாரத்தில் பலியாக்கப்பட்டோர்கள் முகம்கொடுக்கும் பிரச்சினைகளை தீர்ப்பதற்காக பல்துறை மற்றும் ஒருங்கிணைப்பு அணுகுதலொன்றைத் தயார் செய்வது அத்தியாவசியமாகிறது. இலங்கை அரசாங்கத்தால் எடுக்கப்பட்ட முற்போக்கான வழிமுறைகளின் காரணமாக ஐக்கிய அமெரிக்க ,ராச்சியத்தின் அரசாங்கத் திணைக்களத்தால் தொடர்ச்சியான 4 ஆண்டுகளாக, இலங்கை 2 ஆம் வரிசை கண்காணிப்புப் பட்டியலில் இருந்து 2 ஆம் வரிசைக்கு உயர்த்தப்பட்டுள்ளது. மனித வியாபாரம் பற்றிய 2017 ஆண்டின் அறிக்கையின்படி இலங்கை அரசாங்கம் மேலும் ஒரு முன்னேற்றப்படியை வைத்து எதிர்காலத்தில் 1 ஆம் மட்டத்தை அடைவதற்கு 2017 ஆண்டினுள் பெற்றுக் கொண்ட முன்னேற்றம் உதவும் என காணக்கூடியதாக உள்ளது.

மனித வியாபாரத்தை தடுப்பதற்காக சம்பந்தப்பட்ட அனைத்து அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் ஒழுங்கமைப்புக்கள் உள்ளடங்கிய கூட்டிணைப்புப் பொறிமுறையொன்றை உருவாக்குவதற்காக வியாபாரத்திற்கு எதிரான தேசிய செயலணியொன்றைத் தாபிப்பதற்கு எனது அமைச்சு பூர்வாங்க நடவடிக்கைகளை மேற்கொண்டு மனித வியாபாரம் பற்றிய நிகழ்வுகள் நடைபெறுவதை தடுப்பதற்கு அத்துடன் இத்தகைய குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோர்களைப் பாதுகாப்பதற்காகவும் இச் செயலணியால் முற்போக்கான மற்றும் கூட்டான வழிமுறை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மனித வியாபாரம் பற்றிய ஒழுங்கு செய்யப்பட்ட குற்றங்கள் நடைபெறுவதை ,ல்லாதொழிப்பதற்காக அரசாங்க அலுவலர்களைப் பயிற்றுவிப்பதற்கு பயிற்சி கைநூலொன்றை மற்றும் துண்டுப் பிரசுரங்களை அபிவிருத்தி செய்வதற்காக தொழில்நுட்ப உதவியை வழங்கிய இச் செயலணியின் உறுப்பினர்கள் மற்றும் புலம்பெயர்தலுக்கான சர்வதேச அமைப்பு பாராட்டப்படுதல் வேண்டும். அத்துடன் மனித வியாபாரம் செய்யும் தவறை எதிர்ப்பதற்காக மற்றும் குற்றச்செயல்களில் பலியாக்கப்பட்டோர்களைப் பாதுகாப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட முற்போக்கான கருத்திட்டத்திற்காக அவுஸ்ரேலியா அரசாங்கத்தினூடாக அளிக்கப்பட்ட நிதி ஒத்துழைப்பையும் மிகவும் வரவேற்கிறேன்.

**தலதா அதுகோரல**
மாண்புமிகு நீதி அமைச்சர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாண்புமிகு பிரதி அமைச்சரின் செய்தி

ஐக்கிய அமெரிக்க ,ராச்சியத்தின் அரசாங்கத் திணைக்களத்தால் மனித வியாபாரம் பற்றிய 2017 ஆண்டில் வழங்கப்பட்ட அறிக்கையின்படி, அண்மைக் காலத்தில் இலங்கை 2 ஆம் வரிசை கண்காணிப்புப் பட்டியலில் இருந்து 2 ஆம் வரிசையை அடைந்திருப்பது இலங்கை அரசாங்கத்துக்கு கிடைத்த மாபெரும் வெற்றியாகும். மனித வியாபாரத்தை தடுத்தல் சம்பந்தமாக நீதி அமைச்சு தனது நெறிப்படுத்தலின் கீழ் இது பற்றி ஆர்வம் காட்டுகின்ற பங்குதாரர்களுடன் தலைமைத்துவம் வழங்கப்பட்ட தேசிய செயலணியால் மேற்கொள்ளப்பட்ட கூட்டு முயற்சிகளை மிகவும் வரவேற்கிறேன்.

1 ஆம் மட்டத்திற்கு உயர்வதற்காக அரசாங்கத்தால் மேற்கொள்ளப்படுகின்ற முயற்சிகளின் போது, மனித வியாபாரம் பற்றிய குற்றம் நிகழ்வதை இனங்காணுதல் மற்றும் மனித வியாபாரம் பற்றிய குற்றத்தில் பலியாக்கப்பட்டோரை இனங்காணுதல் சம்பந்தமாக அரசாங்க அலுவலர்களை பயிற்றுவித்தல் மற்றும் குடிபெயர்தல் சம்பந்தப்பட்ட பின்தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ளல் ஆகிய செயற்பாடுகள் இச் செயலணியால் நிறைவேற்றப்பட்டுள்ளன. மனித வியாபாரம் சம்பந்தப்பட்ட நிகழ்வுகளை இலங்கையினுள் குறைத்துக் கொள்வதற்காக இச் செயலணியின் அர்ப்பணிப்பை மிகவும் வரவேற்பதுடன், மனித வியாபாரத்தை எதிர்ப்பதற்காக இலங்கையினுள் மனித வியாபாரத்தை எதிர்த்தல் சம்பந்தமாக நடைமுறைப்படுத்தப்பட்ட பயனுள்ள நிகழ்ச்சித்திட்டங்களினூடாக மனித வியாபாரம் பற்றிய குற்றத்தில் பலியாக்கப்பட்டோரை பாதுகாப்பதை உறுதிப்படுத்துவதற்காக இத் தேசிய பணியில் உதவிய சகல பங்குதாரர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**துஷ்மந்த மித்திரபால**
மாண்புமிகு பிரதி நீதி அமைச்சர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செயலாளரின் செய்தி

மனித வியாபாரத்தை தடைசெய்த ஐக்கிய நாடுகளின் சமவாயத்திற்குச் சமாந்தரமாக செயல்பட்டு 2006 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க தண்டனைச் சட்டக் கோவைச் (திருத்தம்) சட்டத்தின் மூலம் மனித வியாபாரம் குற்றவியல் தவறொன்றாக ஆக்கப்பட்டது. இலங்கை அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளை மேலும் வலுப்படுத்துவதற்காக, நீதி அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட ஒரு நடவடிக்கையாக, மனித வியாபாரத்தை எதிர்க்கும் தேசிய செயலணி தாபிக்கப்பட்டதுடன், அதன் தலைவராகவும் செயலாற்றுகிறது. அவ்வாறான சு'ழ்நிலையினுள் இச் செய்தியை வழங்க முடிந்ததையிட்டு நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.

பொது மக்கள் அறிந்துள்ளவாறு, மனித வியாபாரம் பற்றி ஐக்கிய அமெரிக்க ராச்சியத்தின் அரசாங்கத் திணைக்களத்தால் 2017 ஆண்டில் வழங்கப்பட்ட அறிக்கையின்படி இலங்கை 2 ஆம் வரிசை கண்காணிப்புப் பட்டியலில் இருந்து 2 ஆம் மட்டத்திற்கு உயர்வு பெற்றமை இலங்கை கைப்பற்றிக்கொண்ட ஒரு வெற்றியாகும். இலங்கையில் நடைபெறுகின்ற மனித வியாபாரத்தை எதிர்ப்பதில் அரசாங்க அலுவலர்களுக்காக பயிற்சி அமர்வுகளை அறிமுகப்படுத்தலினூடாக மனித வியாபாரத்தை எதிர்க்கும் செயலணியால் மேற்கொள்ளப்பட்ட கூட்டு முயற்சி மேலும் வலுப்படுத்தப்பட்டது.

இக்கருத்திட்டத்திற்காக தொழில்நுட்ப உதவியைப் பெற்றுக் கொடுப்பதற்காக புலம்பெயர்தலுக்கான சர்வதேச அமைப்பினால் ஏற்படுத்தப்பட்ட தொழில்நுட்ப உதவிக்காக மற்றும் மனித வியாபாரத்தை இலங்கையினுள் எதிர்த்தல் சம்பந்தப்பட்ட அலுவல்களின் போது மனித வியாபாரத்தை எதிர்க்கும் தேசிய செயலணிக்கு வழங்கப்பட்ட தொடர்ச்சியான ஒத்துழைப்புக்காக அவ்வொழுங்கமைப்புக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், இக்கருத்திட்டத்தை வெற்றிபெறச் செய்து கொள்வதற்காக அவுஸ்திரேலியா அரசாங்கத்தால் பெற்றுக் கொடுக்கப்பட்ட ஒத்துழைப்பை வரவேற்பதுடன், இக்கருத்திட்டத்தை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்துவதற்காக செயலணியின் உறுப்பினர்கள் உட்பட பலவிதத்தில் பங்கேற்பை வழங்கிய அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**பத்மசிறி ஜயமான்ன**
செயலாளர்
நீதி அமைச்சு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1. மனித வியாபாரத்தை புரிந்து கொள்ளல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பாட நோக்கங்கள்

- ✓ 'மனித வியாபாரம்' தொடர்பான வரைவிலக்கணத்தை புரிந்துக்கொள்ள உதவி செய்தல்.
- ✓ இலங்கையில் இக்குற்றம் எவ்வாறு இடம்பெறுகின்றது என்பதை புரிந்து கொள்ளல்.
- ✓ மனித வியாபாரம் தொடர்பான முக்கிய மூன்று பகுதிகளை இனங்காணல்.
- ✓ ஆட்கடத்தலுக்கும் மனித வியாபாரத்துக்கும் இடையிலான பிரதான வேறுபாடுகளை புரிந்து கொள்ளல்.

## 1.1 அறிமுகம்

மிக விரைவான உலகமயமாக்கம் மற்றும் பொருளாதார, கலாச்சார அபிவிருத்தி காரணமாக உலகெங்கிலும் உள்ள நாடுகள் மக்களின் வாழ்க்கையில் நேர்மறையான மாற்றங்களை கொண்டுவரும் அதே வேளையில் சர்வதேச நாடுகளுக்கிடையிலான எதிர்மறையான தாக்கங்களாக பல்வேறு குற்றங்கள் அதிகரிக்கவும் பங்களிக்கின்றன. இதன் காரணமாவது அபிவிருத்தியில் ஏற்றத் தாழ்வான பகிர்ந்தளிப்பு, சந்தையில் நிலவும் கேள்விகள், சட்டத்திலுள்ள குறைபாடுகளும் அதனை நடைமுறைப்படுத்தும் முறைகளும் காரணமாக தனிநபர்கள் சாதாரண திருட்டு முதல் தமது இலாபத்துக்காக மனிதர்களை விற்பனை செய்வது வரையிலுமான குற்றங்களிலும் ஈடுபடுகின்றனர். சாதாரண மக்களின் பொருளாதார, சமூக அபாயத்துக்குள்ளாகும் நிலைமைகளை தமக்கு சாதகமாக்கிக் கொண்டு மக்களை தந்திரமாக ஏமாற்றி மோசடி செய்து, ஏமாற்றமான சூழ்நிலைக்குள் செல்ல மோசடிக்காரர் நிர்ப்பந்திக்கின்றனர். மனித வியாபாரமானது அவ்வகையான குற்றச்செயலொன்றாகும். இதில் மக்கள் பண்டங்களைப் போல் விற்கப்படுகின்றனர்.

மனித வியாபாரம் என்பது உலகெங்கிலும் எல்லா நாடுகளிலுமுள்ள ஆண்கள், பெண்கள் மற்றும் சிறுவர்களைப் பாதிக்கும் ஒரு குற்றச்செயலாகும். வரலாற்றில் இடம்பெற்ற நாமறிந்த அடிமைத்தனத்திற்கு இது சமமானதாகும். அடிமைத்துவமத்திற்கும் மனித வியாபாரத்திற்கும் இது போன்ற செயல்களான அடிமைச்சேவகம், நிர்ப்பந்திக்கப்பட்ட உழைப்பு, வேலைக்கு அல்லது வேறு சேவைகளைப்பெற ஏமாற்றி ஆள்சேர்த்தல், கடனடைப்பதற்கான பிணை, பாதிப்புற்றவருக்கும் குற்றவாளிக்குமிடையிலான உறவை தெளிவற்றதாக்கும் கட்டாயத்திருமணம் (இதன் விளைவாக பாதிப்புற்றவரின் தனிமனித சுதந்திரம் கட்டுப்படுத்தப்படும்) போன்றவற்றுக்கிடையில் தொடர்பிருக்கின்றது.

மேலும் மனித வியாபாரம் என்பது ஒரு சிக்கலான குற்றமாகும் என்பதை நினைவிற்கொள்ள வேண்டும். இதில் ஆண்கள், பெண்கள், சிறுவர்கள் மனித வியாபாரத்துக்குட்படுத்தப்பட்டு பல்வேறு வழிகளில் ஏமாற்றப்படுகின்றனர்; வீட்டுப் பணிப்பெண்கள், தொழிற்சாலை பணியாளர்கள், கட்டு நிர்மாணப் பணியாளர்கள், திருமணம் செய்யும் நோக்கம், பாலியல் அடிமைத்தனம், பிச்சை எடுத்தல், ஆபாசப் படமெடுத்தல், உடலுறுப்புக்களை அகற்றுதல் போன்ற பல சூழ்நிலைகளுக்குள்ளாக்கப்படுகின்றனர்.

மனித வியாபாரம் எனும் குற்றத்திற்குட்படுவோர் பெரும்பாலும் வேலைவாய்ப்பு அல்லது தரமான வாழ்க்கை தொடர்பான கனவுகளை வாக்குறுதிகளாக அளிக்கப்பட்டவர்களாக இருப்பதுடன் மனித வியாபாரிகளால் தாம் ஏமாற்றப்பட்டதை பிறகே அறிந்துக்கொள்வர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லது தூரத்து உறவினர்களாக இருப்பதுடன், பொய்யான வாக்குறுதிகளை வழங்கி, வாக்களிக்கப்பட்ட சந்தர்ப்பங்கள் உண்மையானவை என நம்பச் செய்து ஏமாற்றமான சூழ்நிலைக்கு ஆளாக்கப்படுகின்றனர். பொதுவாக ஏமாற்றப்படும் நபர் தொழில் வாக்குறுதி வழங்கும் நபரிடம் அவர்மீதான நம்பிக்கை, குறைந்த அறிவு அல்லது தனது நம்பிக்கையற்ற அழுத்தத்திற்குள்ளான சூழ்நிலை காரணமாக கேள்விகள் கேட்பதில்லை.

பாதிக்கப்பட்ட நபர் ஏமாற்றமான சூழ்நிலைக்குள் அகப்பட்டதும் அவரது நண்பர்கள், குடும்பத்தினரிடமிருந்து தனிமைப்படுத்தப்படுவார். அவர்கள் வன்முறைக்கு உட்படக்கூடியவர்களாக அல்லது தமக்கோ அல்லது தமது குடும்பத்துக்கோ வன்முறைக்கான அச்சுறுத்தலுக்குட்படுவதுடன், வலுக்கட்டாயப்படுத்தப்படுதல், தடுப்புக்காவல், போதைப்பொருள் பாவனை, அடையாள அட்டை மற்றும் பயண ஆவணங்களின் பறிமுதல் முதலிய அச்சுறுதல்களுக்குட்படுவர்.

பெரும் பாலும் நண்பர்களுடன் அல்லது குடும்பத்துடன் தொடர்பு கொள்ளும் முறைகள் கண்காணிக்கப்படும் அல்லது முற்றாகவே தொடர்பேற்படுத்த முடியாமல் இருக்கும். மேலும், சிலர் தமது நிலைமைக் குறித்து வெட்கத்துக்கு உள்ளாவதுடன் அல்லது குற்றவியல் செயன்முறைகள் தொடர்பாக பயமடைவதுடன், மனித வியாபாரிகளால் தாம் நாடுகடத்தப்படலாம் அல்லது பழிவாங்கப்படலாம் என்ற பயத்தினால் அதிகாரிகளிடம் முறைப்பாடு செய்ய தயக்கமடைகின்றனர்.

ஒரு தனி நபர் மனித வியாபாரம் மூலம் பாதிக்கப்பட்டுள்ளாரா என்பதை தீர்மானிக்க, மனித வியாபாரக் குற்றம் குறித்த சட்டப்பூர்வமான வரைவிலக்கணத்தை விளங்கிக்கொள்வது அவசியமாகும்.

மனித வியாபாரத்துக்கான சர்வதேச வரைவிலக்கணமானது ஐக்கிய நாடுகள் சபையினால் 2000ஆம் ஆண்டில் விசேடமாக பெண்கள் மற்றும் சிறுவர்களின் மனித வியாபாரத்தை தடுத்தல், கட்டுப்படுத்தல், மற்றும் தண்டனை வழங்குதல் தொடர்பான நடைமுறை ஆவணத்தில் வடிவமைக்கப்பட்டுள்ளது. (இக்கொள்கை பலெர்மோ கொள்கை என அழைக்கப்படுகிறது.) இலங்கையும் இந்த நடைமுறை ஆவணத்தில் கையொப்பமிட்டுள்ளதுடன் ஐ.நா. கொள்கையை உறுதிப்படுத்தி, அதற்கேற்ற வகையில் சட்ட திருத்தங்களை மெற்கொண்டுள்ளது. தண்டனை சட்டக்கோவையின் 360(C) பிரிவின் 2006ஆம் ஆண்டு (திருத்தம்) சட்ட இல. 16இல் இலங்கையின் சட்டத்தில் மனித வியாபாரம் தொடர்பான முன்னேற்பாடுகள் அறிமுகம் செய்யப்பட்டிருப்பதுடன், இக்குற்றம் தொடர்பாக ஆராய்தல், நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்தல் போன்ற நோக்கங்களுக்காக இக்குற்றம் வரைவிலக்கணம் செய்யப்பட்டுள்ளது.

மனித வியாபாரமானது, மிக விரைவில் வளர்ந்து வருவதும் மற்றும் அதிக பண வருமானத்தைப் பெற்றுத் தருவதுமான குற்றச்செயலாக உலகெங்கிலும் காணப்படுவதோடு, தனிப்பட்ட நாடுகளிலும் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

## 1.2 இலங்கையில் மனித வியாபாரம் தொடர்பான நிலைமைகள்

இலங்கையானது மனித வியாபாரத்துக்கு உட்படும் முக்கிய ஆரம்ப இடமாகவும், மேலும் மனித வியாபாரத்துக்கு நியமிக்கப்பட்ட இடமாகவும் காணப்படுகின்றது. தாய் நாடென்ற வகையில் இலங்கையிலிருந்து ஆண்களும், பெண்களும் சில மத்திய கிழக்கு நாடுகளுக்கும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறித்த சில ஆசிய நாடுகளுக்கும் (மலேசியா, சிங்கப்பூர்) வீட்டுப் பணிப்பெண்களாக, ஆடைத் தொழிற்சாலை மற்றும் கட்டு நிர்மாணப் பணியாளர்களாக புலம் பெயர்ந்து தொழில் புரிகின்றனர். இத்தகைய பணியாளர்களில் சிலர் சுரண்டலுக்குட்டபடுத்தப்பட்டு அடிமைத்தனம் போன்ற கட்டுப்பாடுகளுக்குட்படுகின்றனர். இலங்கை காவல் துறையினரிடமும் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்திடமும் (SLBFE) காணப்படும் கடந்த சில வருட புள்ளிவிவரங்களை பார்வையிடும் போது ஒரு சில உழைப்புச் சுரண்டல் மற்றும் மனித வியாபார முறைப்பாடுகளே செய்யப்பட்டுள்ளன. அத்தோடு சில் பெணகள் தென்கிழக்காசியா முன்னால் சோவியட் இராச்சியம் போன்ற இடங்களில் இருந்து இலங்கையினுள் வியாபார நோக்கிலான பாலியல் சுரண்டலுக்காக கடத்திவரப்பட்டுள்ளார்கள்.

ஒரு நாட்டினுள் பெண்களுக்கு நகர்புறங்களில் சுற்றுலாத் துறையிலும், அலங்காரநிலையங்களிலும், வீட்டுப்பணியாளர்களாகவும் தொழில் பெற்றுத்தருவதாக வாக்களிக்கப்பட்டு கட்டாய விபச்சாரத்திற்காக வேண்டி மனித வியாபாரத்திற்கு ஆட்படுகின்றனர். சிறு தொழிற்சாலைகளில் கட்டாய உழைப்பு அல்லது வீட்டுப் பணியாளர்களாக அல்லது கட்டாயமான ஏமாற்றப்பட்ட வியாபார ரீதியிலமைந்த பாலியல் சுரண்டல் போன்றவற்றுக்காக வேண்டி சிறுவர்கள் மனித வியாபாத்திற்கு ஆட்படுத்தப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

2016, 2017 ஆரம்ப காலப் பகுதிகளில் குற்றப்புலனாய்வுப் பிரிவு ஏழு மனித வியாபார முறைப்பாடுகளை பதிவு செய்துள்ளது. அந்த ஏழு பேரில் ஐவர் கட்டாய உழைப்பு சார்ந்ததாகவும் இருவர் பாலியல் சம்பந்தப்பட்டதாகவும் வகைப்படுத்தப்பட்டுள்ளனர். அதில் ஒருவர் உல்லாசப்பயணி ஒருவர் பாலியல் சுரண்டல் செய்வதற்காக வேண்டி 16 வயது ஆணொருவரை கொள்வனவு செய்ததாக குற்றம் சுமத்தப்பட்டார். மேற்கூறப்பட்ட காலப்பிரிவில் மனித வியாபாரம், கொள்முதல் சம்பந்தமான 35 விசாரணைகள் அரசாங்கத்தால் முடுக்கிவிடப்பட்டன.

இலங்கை அரசாங்கம் மனித வியாபாரத்திற்கெதிரான பல முன்னெடுப்புக்களை செய்துள்ளது. 2010ஆம் ஆண்டு 'தேசிய மனித வியாபார தடுப்பு படையணி உருவாக்கப்பட்டமை சம்பந்தப்பட்ட அரசாங்க அமைச்சுக்களுக்கிடையிலும் திணைக்களங்களிடையிலும் நிறுவனங்களிடையிலும் உறுதியான ஒரு ஒருங்கிணைப்புப் பொறிமுறையை ஏற்படுத்த உதவியாக அமைந்தது. இப்படையணி மனித வியாபாரத்தால் பாதிப்புற்றவர்களை இனங்காணல், பாதுகாத்தல் சம்பந்தப்பட்ட கொள்கைகளையும் செயற்பாடுகளையும் உருவாக்கி செயற்படுத்தியுள்ளது. அத்தோடு பெண்கள் மற்றும் சிறுவர் விவகார அமைச்சினால் நிர்வகிக்கப்படும் மனித வியாபாரத்தால் பாதிப்புற்ற பெண்களுக்கான அரசாங்க தங்குமிடம், பாதிப்புற்றவர்களை இனங்காணல் பாதுகாப்பு வழங்குதல், பரிந்துரை செய்தலுக்கான நியம செயற்படுமுறைகள் (SOP) போன்றவற்றையும் இப்படையணி செய்துள்ளது. தற்போது தடுத்தல், பாதுகாப்பு வழங்குதல், வழக்கு தொடருதல் தொடர்பான 5 வருட தேசிய செயல் திட்டமொன்று இத்தேசிய படையணி உறுப்பினர்களால் அமுல்படுத்தப்பட்டு வருகின்றது.

## 1.3 மனிதர்களுக்கிடையிலான மனித வியாபாரம் தொடர்பான வரைவிலக்கணம்

அறிமுகத்தில் நாம் பார்த்ததற்கு அமைய மனித வியாபாரம் என்பது ஒரு சிக்கலான நிகழ்வாகும். ஆண்கள், பெண்கள் மற்றும் சிறுவர்களும் பல வகையான நோக்கங்களுக்காக வேண்டி மனித வியாபாரத்திற்கு ஆட்படுத்தப்பட்டு வீட்டுப் பணியாளர்களாகவும், தொழிற்சாலைப் பணியாளர்களாகவும், கட்டு நிர்மாணப் பணியாளர்களாகவும், திருமணம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யும் நோக்குடனும், பாலியல் அடிமைகளாகவும், பிச்சை எடுக்கவும், ஆபாசப் படமெடுக்கவும். உடல் உறுப்புக்களை அகற்றவும் சிறுவர் படைவீரர்களாக பணியாற்றவும், பல சூழ்நிலைகளுக்குட்படுத்தப் படுகின்றனர்.

ஒரு தனி நபர் மனித வியாபாரம் மூலம் பாதிக்கப்பட்டுள்ளாரா என்பதை தீர்மானிக்க, மனித வியாபாரம் குறித்த சட்டப்பூர்வமான வரைவிலக்கணத்தை அறிந்துக்கொள்வது அவசியமாகும்.

சர்வதேச வரைவிலக்கணம் மற்றும் பரவலாக மனித வியாபார தொடர்பாடு ஏற்றுக்கொள்ளப்பட்டதுமான விளக்கமானது ஐக்கிய நாடுகள் சபையின் அரசியல் அறிக்கையில், விசேடமாக பெண்கள் மற்றும் பிள்ளைகளின் மனித வியாபாரத்தை தடுத்தல், கட்டுப்படுத்தல், மற்றும் வியாபாரத்தில் ஈடுபடுவோருக்கு தண்டனை வழங்கல், 2000 இடம்பெற்றுள்ளது.

இலங்கை சட்டத்தில் இவ்வரைவிலக்கணமானது, சர்வதேச வரைவிலக்கணத்துக்கு அமைய உருவாக்கப்பட்டுள்ளது.

**2006ஆம் ஆண்டு தண்டனைச்சட்டக் கோவை (திருத்தம்) சட்ட இல. 16இன் படி மனித வியாபாரம் என்ற குற்றச்செயலானது பின்வருமாறு விளக்கமாக கூறப்படுகிறது;**

**பிரிவு 360 C (1) குற்றங்கள் தொடர்பானவை;**

தண்டனை சட்டக்கோவையின் 360(C) பிரிவின் 2006ஆம் ஆண்டு (திருத்தம்) சட்ட இல. 16இன் படி மனித வியாபாரமானது சட்டத்தை மீறிய செயல் என்பதை தெளிவாக எடுத்துக்கூறுவதுடன் ஐக்கிய நாடுகள் கொள்கையின் வரைவிலக்கணத்தையும் பின்பற்றுகிறது. விசேடமாக பிரிவு 360 Cஇல் குற்றங்கள் சுருக்கமாகக் கூறப்படுகின்றன.

(a) கொள்வனவு செய்தல், விற்பனை செய்தல், பண்டமாற்று முறையில் வியாபாரம் செய்தல், செய்யத்தூண்டுதல் அல்லது கொள்வனவு செய்யவோ, விற்பனை செய்யவோ அல்லது பண்டமாற்று முறையில் வியாபாரம் செய்ய பணத்துக்காகவோ அல்லது வேறு தேவைகளுக்கோ ஊக்கமளித்தல்.

(b) வேலைக்கு சேர்த்துக்கொள்ளுதல், இடம்மாற்றுதல், வேறு இடத்திற்கு கொண்டு செல்லலல், கடல் கடந்து செல்லல், மக்களைக் கொண்டோ அல்லது பயமுறுத்தியோ, வற்புறுத்தியோ, மோசடி செய்தோ, ஏமாற்றியோ அல்லது ஏமாற்ற ஊக்குவித்தோ மற்றொரு நபரை வற்புறுத்தி பணியில் அல்லது சேவையில் ஈடுபடுத்துதல், அடிமைத்தனம், உடல் பாகமகற்றுதல், விபசாரம் அல்லது வேறு முறையிலான பாலியல் ரீதியான மோசடிகள் அல்லது வேறு செயற்பாடுகள் சட்டப்படி குற்றமாகும். அத்துடன்

(c) வேலைக்கு சேர்த்துக்கொள்ளுதல், இடமாற்றுதல், வேறு இடத்திற்கு கொண்டுச் செல்லுதல், கடல் கடந்து செல்லுதல் அல்லது பண வரவு பெறுவதற்காக பிள்ளையின் ஒப்புதலுடனோ அல்லது ஒப்புதலின்றியோ மேற்குறிப்பிட்ட ஏமாற்றும் நோக்கங்களுடன் செயற்படுதல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1.4 மனித வியாபாரத்தின் மூன்று முக்கிய பகுதிகள்

மனித வியாபாரமானது பன்முகங் கொண்ட குற்றமாகவும் ஏனைய பல குற்றங்களிலிருந்து வேறுபட்டதாகவும் காணப்படுகின்றது. மனித வியாபாரம் தொடர்பாகவும், அதன் பன்முகத்தன்மை தொடர்பாகவும் மேலும் புரிந்துக்கொள்ளும் வகையில் வரைவிலக்கணமானது ஒன்றுடனொன்று தொடர்புபட்டு மூன்று முக்கிய பகுதிகளாக பிரித்து நோக்கப்படுகிறது. அவையாவன:

- செயல்
- வழிமுறை
- நோக்கம்

| செயல் | வழிமுறை | நோக்கம் / ஏமாற்றும் நோக்கு |
|---|---|---|
| வேலைக்குச் சேர்த்துக் கொள்ளல். | பயமுறுத்தல் / நிர்ப்பந்திக்கப்படல். | விபச்சாரம் |
| வேறு இடத்திற்கு கொண்டு செல்லல். | கடத்தல். | பாலியல் ரீதியான வேறு மோசடிகள். |
| இடமாற்றம். | மோசடி. | வலுக்கட்டாய பணி அல்லது |
| கடல் கடந்து செல்லுதல். | ஏமாற்றம் | சேவை. |
| பணவரவை பெறல். | அதிகார துஷ்பிரயோகம் | அடிமைத்தனம் அல்லது அதற்கு ஒத்த முறைகள். |
| | அல்லது தீங்கிழைக்கக்கூடிய | உடல் பாகங்கள் அகற்றப்படுதல் முதலியன. |
| | பணமோ அல்லது அதற்கொத்த பலனை வரவோ அல்லது செலவோ செய்தல் மூலம் ஒரு நபரின் சம்மதத்தை பெற்று அவரை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருதல். | |

## 1.5 எப்போது மனித வியாபாரமாகும்?

- மூன்று பகுதிகளும் காணப்படும்போது (செயல், வழிமுறை, நோக்கம்)
- மூன்று பகுதிகளும் ஒன்றுடன் ஒன்று கட்டாயமாக தொடர்பு பட வேண்டும்.
- வழிமுறையானது ஏதாவது செயலின் மூலம் பெற்றுக்கொள்ளப்படு வதுடன், இரண்டு பகுதிகளும் ஏமாற்றும் நோக்கத்துடன் தொடர்புபட்டிருக்க வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1.6 சிறுவர்களின் மனித வியாபாரம்.

சிறுவர்கள் எனும் போது, வேலைக்கு சேர்த்துக்கொள்ளல், வேறு இடத்துக்கு கொண்டுச் செல்லல், இடமாற்றம் செய்தல், கடல் கடந்து செல்லல், அல்லது பண வரவை பெறும் நோக்குடன் செயற்படல் என்பனவற்றில் ஒன்றுமே பிள்ளையை ஏமாற்றும் நோக்குடன் செயலில் பயன்படுத்தப்படாவிட்டாலும் கூட அது மனித வியாபாரம் எனும் குற்றமாகவே கருதப்படும்.

## 1.6 நினைவிற் கொள்ளவும் - பாதிக்கப்பட்டவரின் சம்மதம்

பலெர்மோ அரசியல் அறிக்கையில் கட்டுரை 3(b) யில் (a) பந்தியில் கூறப்பட்ட விடயங்களான வஞ்சனை, மோசடி, பலாத்காரம், நிர்ப்பந்தித்தல் மூலம் செயலில் ஈடுபடுமுகமாக பாதிக்கப்பட்ட நபரின் ஒப்புதல் பெறப்பட்டு ஏமாற்றப்படும் போது, பாதிப்புற்றவரால் ஆரம்பத்தில் வழங்கப்பட்ட ஒப்புதல் செல்லுபடியாகாது என்பது மிகத்தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. மனித வியாபாரக் குற்றத்தில் ஈடுபடும் நபர்கள் பெரும்பாலும் எல்லா சந்தர்ப்பத்திலும் பாதிக்கப்பட்டவரின் ஒப்புதலைப் பெற்றிருப்பர் என்பதை நினைவில் கொள்ளுங்கள். இவர்கள் பெரும்பாலும் ஏதாவது ஒரு இடத்தில் தம் ஒப்புதலைத் தெரிவித்திருப்பர்ளூ உதாரணம் : வேலைக்காக புலம்பெயர்தல் இவ்வகையான ஒப்புதலை ஏற்றுக்கொள்ள முடியாது.

எவ்வாறெனினும் அரசியல் நெறிமுறை பற்றிய கூற்று தெளிவாகவே காணப்படுகிறது. சம்பவமொன்றில் மனித வியாபார குற்றம் இடம்பெற்றுள்ளதா என்பதை தீர்மானிப்பதில் பெறப்பட்ட ஒப்புதல் எப்போதுமே செல்லுபடியாகாது. அரசியல் கொள்கையில் குறிப்பிடப்பட்டுள்ள எந்தவொரு வழிமுறைகள் தொடர்பாகவும் பெறப்பட்ட பாதிக்கப்பட்டவரின் ஒப்புதல் செல்லுபடியாகாது.

**சுருக்கம்;**

**மனித வியாபாரம் தொடர்பான வரைவிலக்கணத்தில் காணப்படும் மூன்று முக்கிய பகுதிகளாவன.**

- **ஒரு நபரின் (செயல்)** வேலைக்குச் சேர்த்துக் கொள்ளல், வேறு இடத்திற்கு கொண்டுச் செல்லல், இடமாற்றம், கடல் கடந்து செல்லல், பண வரவைப் பெறல்.
- **செயல் இடம்பெற பயன்படுத்தப்படும் நுட்பங்கள் (வழிமுறை)** பயமுறுத்தல், கடத்தல், மோசடி, அதிகார துஷ்பிரயோகம், நிலைமையை துஷ்பிரயோகத்துக்குள்ளாக்கும் தன்மை அல்லது ஒரு நபரை வாங்குதல்.
- **மேற்குறிப்பிடப்பட்ட வழிமுறைகளுக்கான இலக்குகள் (நோக்கம்)** ஏமாற்றத்தின் எல்லா வகைகளும், அதாவது பாலியலுக்கென ஏமாற்றப்படுதல், வலுக்கட்டாய தொழில், அடிமைத்தனம், விபசாரம், உடல் பாகங்கள் அகற்றப்படுதல் முதலியன.

## 1.7 ஆட்கடத்தல்

தரை, கடல், மற்றும் ஆகாய வழி மூலம் புலம் பெயர்ந்து ஆட்கடத்தலில் ஈடுபடுவதற்கு எதிராக அரசியல் கொள்கை காணப்படுகின்றது. இது ஐக்கிய நாடுகள் சபையின் மாநாட்டில் நாடுகளுக்கிடையிலான ஒழுங்கமைக்கப்பட்ட குற்றமொன்றாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரை, கடல், ஆகாய வழி மூலம் இடம்பெறும் ஆட்கடத்தலை வினைத்திறனுள்ள முறையில் தடுத்து இல்லாதொழிக்க சர்வதேச அணுகுமுறைகளான, ஒத்துழைப்பு, தகவல் பரிமாற்றம் மற்றும் ஏனைய பொருத்தமான நடைமுறைகளான சமூக - பொருளாதார நடைமுறைகள் என்பன தேசிய, பிராந்திய மற்றும் சர்வதேச ரீதியில் முன்னெடுக்கப்பட வேண்டும் என்பதை அரசாங்கம் புரிந்து கொண்டுள்ளது.

**ஆட்கடத்தலுக்கான வரைவிலக்கணம்**

**கட்டுரை** 3

'புலம் பெயர்வாளர்களிடம் இடம்பெறும் ஆட்கடத்தல்' என்பது வழிமுறைகளை அடைய முயற்சி செய்யுமுகமாக நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ, பண அல்லது ஏனைய பண்டங்கள் மூலம் பெறும் ஆதாயம் மூலம், அந்நாட்டைச் சேர்ந்தவராகவோ நிரந்தர குறியிருப்பாளராகவோ அல்லாத ஒருவர் சட்டரீதியற்ற முறையில் ஒரு நாட்டிற்குள் கடந்துச் செல்வதாகும்.

கடந்த சில தசாப்தங்களில் அதிகரித்து வரும் ஒரு குற்றச்செயலாக மனித கடத்தல் (ஆட்கடத்தல்) காணப்படுகிறது. இன்று பெருந்தொகையான மக்கள் உலகெங்கிலும் உள்ள நாடுகளில் முறையற்ற புலம்பெயர்வாளர்களாகக் காணப்படுகின்றனர்.

ஆட்கடத்தல் என்பது பொதுவாக ஆட்கடத்தலுக்கு உட்படும் நபரின் அல்லது நபர்களின் சம்மதத்துடனேயே இடம்பெறுகிறது. மக்கள் ஆட்கடத்தலுக்கு உட்படுவதற்கான பொதுவான காரணங்களாக வேலை வாய்ப்பு, பொருளாதார சந்தர்ப்பம், தனிநபர் / குடும்பத்தின் வாழ்க்கை மேம்பாடு, துன்புறுத்தல் அல்லது முரண்பாடுகளில் இருந்து தப்பித்தல் போன்றவற்றை குறிப்பிடலாம்.

மனித வியாபாரத்தைப் போலன்றி ஆட்கடத்தலானது ஒப்பந்த இணக்கப்பாட்டின் அடிப்படையில் புலம் பெயர்வாளரின் சம்மதத்துடன் இடம்பெறும். ஆட்கடத்தலாளருக்கும் புலம்பெயர்பவருக்கும் இடையிலான உறவானது குறித்த நாட்டை அடைந்ததும் முற்றுப்பெறும் ஆட்கடத்தல் சந்தர்ப்பங்களின் போது மனித உரிமைகள் துஷ்பிரயோகம் செய்யப்பட்டு ஆட்கடத்தலுக்கு உட்படும் புலம்பெயர்ந்தவர் பயமுறுத்தல்கள், துஷ்பிரயோகம், துன்புறுத்தல் மேலும் மரணத்துக்கு உட்படும் நிலைமையும் கூட உருவாகலாம். கடத்தப்படும் நபர் பயணத்தின் இடைநடுவி மனித வியாபாரத்தாலும் பாதிக்கப்படலாம்.

## 1.8 மனித வியாபாரத்துக்கும் ஆட்கடத்தலுக்கும் இடையிலான பிரதான வேறுபாடுகளை அறிந்துக்கொள்ளல்

**மனித வியாபாரத்துக்கும் ஆட்கடத்தலுக்குமான ஐக்கிய நாடுகள் சபையின் வரைவிலக்கணம்.**

ஆட்கடத்தலும் மனித வியாபாரமும் பெரும்பாலும் சமமானதாகவே கொள்ளப்படுகிறது. எனினும் இவ்விரண்டும் வேறுபட்ட இரு குற்றங்களாகும். என்பது தெளிவாக வேறுபடுத்திக் காட்டப்பட வேண்டும். இவ்வேறுபாடானது அரசாங்க மற்றும் சட்ட நடைமுறை எண்ணக்கருத்துக்களுக்கும் உதவியாக அமையும். நாடுகளுக்கிடையில் கிரமமாக இடம்பெறும் குற்றங்களான ஆட்கடத்தல் மற்றும் மனித வியாபாரத்துக்கு எதிராக இடம்பெற்ற ஐக்கிய நாடுகள் சபையின் மாநாட்டின் போது இவற்றுக்கான இரண்டு அரசாங்க கொள்கைகள் கொண்டுவரப்பட்டன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரைவிலக்கணங்கள் தெளிவாகக் காணப்படுகின்ற புலம்பெயர்வாளர்களிடம் இடம்பெறும் ஆட்கடத்தலானது குறித்த நபருக்கு சட்டரீதியற்ற முறையில் நாட்டைக் கடந்து செல்ல உதவி புரிதலாகும். எனவே ஆட்கடத்தலானது சர்வதேச ரீதியில் நாடுகளைக் கடத்தலை முக்கியமாகக் கொண்டது. இது பிரதானமாக ஒரு அரசின் விருப்பத்திற்கு எதிராக வழிகாட்டுவதாக அமையும். தனிநபரின் விருப்பத்திற்கு எதிரானதல்ல, அதாவது ஆட்கடத்தலுக்கு உட்படும் நபர்.

மனித வியாபாரத்தில் ஈடுபட்டவர்களின் முக்கிய நோக்கமானது ஏமாற்றுதலாகும். மனித வியாபாரத்துக்குட்பட்ட நபர் ஏமாற்றப்படுவார். பாதிக்கப்பட்ட நபர் குறித்த இடத்தை வந்தடைந்ததும் மோசடிக்குட்படுத்தப்படுவார். மனித வியாபாரமானது, நாட்டின் எல்லைகளைக் கடத்தல், குறித்த நாட்டுக்கு சட்டரீதியாகவோ அல்லது சட்டரீதியற்ற முறையிலோ உட்செல்லுதல், அல்லது எல்லைகளைக் கடக்காமல் (நாட்டினுள்ளும்) இடம்பெறலாம்.

ஆட்கடத்தல் மற்றும் மனித வியாபாரம் தொடர்பாக சர்வதேச ரீதியில் கருத்தொருமிப்பு காணப்பட வேண்டியது ஒரு முக்கியமான அம்சமாகும். அரசாங்கங்களானது இவ்வெண்ணக்கருக்கள் தொடர்பான பொதுவான புரிந்துணர்வுடன் தம் நாட்டு தேசிய சட்டங்களில் புகுத்துவதுடன் வினைத்திறனுள்ள முறையில் கூட்டுறவுடன் செயற்பட்டு தரவு சேகரிப்பு மற்றும் பகுப்பாய்வு முறைகளிலுள்ள சிக்கல்களைத் தீர்த்துக் கொள்ளக் கூடியதாக இருக்க வேண்டும்.

மனித வியாபார செயற்பாட்டின் முக்கிய இலக்காவது மனித வியாபாரத்துக்குட்பட்ட நபரை ஏமாற்றுதலாகும். இதில் மனித உரிமைகள் கடுமையான முறையில் மீறப்படும். புலம்பெயர்வாளர்களிடம் இடம்பெறும் ஆட்கடத்தல் செயன்முறையானது புலம்பெயர்வாளர் குறித்த நாட்டிற்குச் செல்ல சட்டரீதியற்ற முறையில் உதவி புரிதலாகும்.

மனித வியாபாரத்திலிருந்து வேறுபடும் அம்சமாவது ஆட்கடத்தலுக்கு உட்பட்ட புலம்பெயர்வாளரின் சம்மதத்துடனேயே ஆட்கடத்தல் இடம்பெறும். ஆட்கடத்தல் செயன்முறையானது புலம் பெயர்வாளர் குறித்த இடத்தை சென்றடைந்ததும் நிறைவுபெறும். ஆனால் மனித வியாபாரமானது மனித வியாபாரிகளுக்கு சட்டரீதியற்ற முறையில் இலாபம் வழங்க ஒரு நபர் தொடர்ச்சியான மோசடிகளுக்குட்படுவதாகும்.

**புலம்பெயர்வாளர்களிடம் இடம்பெறும் ஆட்கடத்தல் தொடர்பான வரைவிலக்கணத்தில் இடம்பெறும் மூன்று முக்கிய பகுதிகளாவன.**

- **ஒரு நபரின் செயல்கள்**

  புலம்பெயர்வாளரின் சம்மதத்துடன் ஒரு நாட்டு எல்லையை கடந்து செல்லுதல்.

- **இவ்வாறான செயல்கள் இடம்பெற பின்பற்றப்படும் வழிமுறைகள்**

  மனிதாபிமானமற்ற முறையில் அல்லது அபாய நிலைகளின் கீழ் தரை, கடல், மற்றும் / அல்லது ஆகாய மார்க்கமாக சட்டவிரோதமாக பயணத்தில் ஈடுபடுதல்.

- **இலக்குகள்**

  சட்டரீதியற்ற முறையில் எல்லைகளைக் கடந்து தீர்மானிக்கப்பட்ட நாட்டினுள் செல்லுதல் (பெரும்பாலும் நாடுகளுக்கூடாக இடம்பெயர்தல்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனித வியாபாரமானது தனிப்பட்ட நபரின் மனித உரிமைகள் மீறும் ஒரு குற்றச் செயலாகக் காணப்படுவதுடன் ஆட்கடத்தலானது புலம்பெயர்தலுக்கான ஒரு நாட்டின் சட்டங்களுக்கு எதிராக செயற்படும் ஒரு நாட்டிற்கெதிரான குற்றமாகும்.

எவ்வாறெனினும், ஆட்கடத்தலுக்கு உட்படும் பெரும்பாலான நபர்களே மனித உரிமைகள் மீறப்படும் பாதிப்பு செயலுக்கு உட்படுகின்றனர். நடைமுறையில், மனித வியாபாரம் மற்றும் ஆட்கடத்தலுக்கிடையிலான வேறுபாடுகள் எப்போதும் தெளிவாக காணப்படாததோடு ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்டு காணப்படும். (கீழே வரைபடத்தில் குறிப்பிட்டுள்ளவாறு) உதாரணமாக, சட்டரீதியற்ற முறையில் வேறொரு நாட்டிற்குச் செல்ல விரும்பும் நபர், ஆட்கடத்தலில் ஈடுபடுபவர்களிடம் உதவி கேட்பதுடன், பயணத்தின் இறுதியில் மோசடிக்குட்படலாம். (உதாரணம்) ஆட்கடத்தலுக்கு உதவிய நபரின் நிதி நிலைமைகளை ஈடுசெய்ய அடிமைத்தனத்துக்கொப்பான நிலையில் தொழிலில் ஈடுபடுதல்.

இவ்வாறான நிலைமைகள் ஏற்பட காரணமாக சட்டவிரோத ரீதியில் புலம்பெயர்ந்தவரின் சூழ்நிலைகளான வலிதான வீசா அல்லது பிரயாண ஆவணமொன்றைக் கொண்டிராமை, சென்றடைந்த நாட்டின் மொழியை பேசத் தெரியாமை, வேலையொன்றை தேடிக்கொள்ளும் அவசர நிலைமை என்பவற்றைக் குறிப்பிடலாம். மனித வியாபாரத்தில் ஈடுபடுபவர்கள் இவ்வாறான நிலைமைகளை தமக்குச் சாதமாக்கிக் கொண்டு மனித வியாபாரத்துக்குட்படுத்துகின்றனர்.

**மனித வியாபாரம் மற்றும் ஆட்கடத்தல்; ஒற்றுமைகளும் வேற்றுமைகளும்**




படத்தின் மூலம்: புலம்பெயர்தலுக்கான சர்வதேச அமைப்பு (IOM)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2. சட்ட நடைமுறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பாட நோக்கங்கள்

- ✓ நாடுகளுக்கிடையில் கிரமமாக இடம்பெறும் குற்றங்களுக்கு எதிரான ஐக்கிய நாடுகள் சபையின் அரசியற் கொள்ளகைள் பற்றிய அறிவைப் பெறுதல்.
- ✓ இலங்கையில் மனித வியாபார சட்டம் தொடர்பான சட்டவிதிமுறைகள் மற்றும் அது தொடர்பான ஏனைய சட்டவிதிமுறைகளை அறிந்துகொள்ளுதல்.

## 2.1 அறிமுகம்

இப்பாடமானது மனித வியாபாரம் தொடர்பான சர்வதேச, பிராந்திய, தேசிய சட்ட நடவடிக்கைகள் மூலம் சட்ட அமுலாக்கம் மற்றும் குற்றத்தில் ஈடுபடுபவர்கள் சட்டங்களைப் பற்றி அறிந்து கொள்ளுமுகமாக வடிவமைக்கப்பட்டுள்ளது. எல்லா சட்டத் தொகுப்புக்களும், மாநாடுகளும், மற்றும் மனித வியாபாரம் தொடர்பான அரசியல் கொள்கைகளும் மனித வியாபாரத்தை தடுத்தல், குற்றவாளிகளுக்கு தண்டனை பெற்றுக் கொடுத்தல், மனித வியாபாரத்தால் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு அவசியமான மனித உரிமைகள் பாதுகாப்பு உள்ளடங்கலாக உதவிகளையும், பாதுகாப்பையும் வழங்குதல் தொடர்பாகவே அபிவிருத்தி செய்யப்பட்டு நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளதைப் பற்றி அறிந்துக் கொள்ளலாம்.

உள்நாட்டளவில் மற்றும் பிராந்திய அளவிலான சட்டக்கருவிகளானது மனித வியாபாரத்தை இல்லாதொழிப்பதை இலக்காகக் கொண்டு, மனித வியாபாரத்துக்கு எதிரான சர்வதேச உடன்படிக்கைகளினூடாக முன்னேற்பாடுகளை மேற்கொள்ளும் அதேவேளையில் அவற்றிலிருந்து பிராந்திய மட்டத்தில் அல்லது நாடளவில் அவசியமான கண்காணிப்பு மற்றும் அமுலாக்கத்திற்கு தேவையான விடயங்களை எடுத்துக்கொள்வதும் அவசியமாகும்.

## 2.2 நாடுகளுக்கிடையில் கிரமமான முறையில் இடம்பெறும் குற்றங்களுக்கெதிரான ஐக்கிய நாடுகள் சபையின் மாநாடு பற்றிய பொதுவான பார்வை (UNTOC)

நாடுகளுக்கிடையில் கிரமமான முறையில் இடம்பெறும் குற்றங்கள் தொடர்பான ஐக்கிய நாடு மாநாடானது டிசம்பர் 2000 இல் இத்தாலியின் பெலர்மோவில் கைச்சாத்திடப்பட்டது. நாடுகளுக்கிடையில் வினைத்திறனுள்ள முறையில் 'நாடுகளுக்கிடையில் கிரமமான முறையில்' இடம்பெறும் குற்றங்களை தடுத்தல் மற்றும் இல்லாதொழித்தல் தொடர்பாக கூட்டுறவை விருத்தி செய்வதே இதன் நோக்கமாகும். 29 செப்தெம்பர் 2003 இலிருந்து இது கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது.

செப்டம்பர் 4, 2017 வரையில் 147 அரசாங்கங்கள் கைச்சாத்திட்டிருப்பதுடன் 188 நாடுகள் அதனை உறுதிப்படுத்தியுள்ளன.

**இம்மாநாட்டின் மூன்று உதவிக் கொள்கைகள் காணப்படுகின்றன.**

(1) விசேடமாக பெண்கள் மற்றும் சிறுவர்களுகெதிரான மனித வியாபாரத்தை தடுத்தல், இல்லாதொழித்தல் மற்றும் குற்றவாளிகளுக்கு தண்டனை வழங்குதல் தொடர்பான அரசியல் கொள்கை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(2) தரை, கடல், மற்றும் ஆகாய வழி மூலமாக ஆட்கடத்தல் ரீதியில் புலம்பெயர்தலுக்கு எதிரான அரசியல் கொள்கை.

(3) சட்ட விரோதமாக உற்பத்தி செய்யப்படும் மற்றும் விற்கப்படும் போராயுதங்கள், அதன் பகுதிகள், இயந்திர அமைப்பின் பகுதிகள் மற்றும் வெடிமருந்து, வெடிகுண்டு போன்றவற்றுக்கு எதிரான அரசியல் கொள்கை.

*குறிப்பு : இக்கலைத்திட்டத்தில் முதல் இரு அரசியல் கொள்கைகளான மனித வியாபாரம் மற்றும் புலம் பெயர்வாளர்களின் ஆட்கடத்தல் பற்றி மாத்திரமே கவனம் செலுத்தப்படும்.

### 2.2.1 விசேடமாக பெண்கள் சிறுவர்கள் மீதான மனித வியாபாரத்தை தடுத்தல், இல்லாதொழித்தல், தண்டனை வழங்குதல் தொடர்பான ஐக்கிய நாடுகள் சபையின் அரசியற் கொள்கை.

ஏற்றுக்கொள்ளப்பட்ட அண்மையகால சர்வதேச அளவிலான மனித கடத்தலை தடுத்தல் மற்றும் வழக்கு தொடர்தல் பற்றிய வரைவிலக்கணம் ஐ.நா சபையின் நாடுகளிடையிலான ஒழுங்கமைக்கப்பட்ட குற்றமும் அது சார்ந்த நெறிமுறைகளுக்கான மாநாடாகும்: பெணகள் சிறுவர்கள் சாாந்த மனித கடத்தலை தண்டித்தல், தடுத்தல், ஒடுக்குதல் பற்றிய ஐ.நா சபையின் நெறிமுறை, இது பலெர்மோ நெறிமுறை எனப்படும்.

மனித வியாபாரம் தொடர்பான பலெர்மோ நெறிமுறை மற்ற ஒப்பந்தங்களை விட தனித்துவமானது. ஏனெனில் அது சட்ட அமுலாக்கல் சம்பந்தமாக உருவாக்கப்பட்ட ஒன்று. அது பிரிவுகள் பின்வருவன பற்றிப்பேசுகின்றன: மனித வியாபாரத்தை தண்டிக்க நடவடிக்கை எடுத்தல், மனித வியாபாரத்தால் பாதிப்புற்றவர்களை பாதுகாத்தல், பாதிப்புற்றவர்களுக்கு வந்தடைந்த நாட்டில் தற்காலிக அல்லது நிரந்தர வதிவிடம் வழங்குதல். ஆகவே மேற்கூறிய நெறிமுறையில் இணங்கியிருந்தால் இந்த விடயங்களுக்கு ஆதரவளிக்கும் சட்டங்களை இயற்றுவது அதன் மீது கடமையாகும்.

வரைவிலக்கணத்தை உள்ளடக்கிய அரசியல் நெறிமுறையே சட்டப்படியான கருவிகளைக் கொண்ட முதல் கொள்கையாகும். இவ்விரைவிலக்கணத்துக்குப் பின்னான நோக்கமாவது, சர்வதேச அணுகுமுறைகளை ஒன்று சேர்க்க உதவி புரிவதாகும். அதாவது உள்நாட்டு குற்றங்கள் தொடர்பான சட்டத்தை மீறிய செயல்கள் தொடர்பான சட்ட நிலைநிறுத்தங்கள் மூலம் மனித வியாபாரம் தொடர்பாக ஆராய்தல் மற்றும் வழக்குத் தொடுத்தல் தொடர்பான சர்வதேச கூட்டுறவுத்தன்மையை வினைத்திறனுள்ளதாக்க உதவி புரிதலாகும்.

**அரசியற் கொள்கையின் நிலை**

- தற்போது 117 அரசாங்கங்கள் அரசியல் கொள்கையில் கைச்சாத்திட்டிருப்பதுடன் 169 அரசாங்கங்கள் அதனை ஏற்றுக்கொண்டுள்ளன.
- டிசம்பர் மாதம் 25ம் திகதி 2003 முதல் கட்டாயமாக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

* **குறிப்பு :** இலங்கையும் இதில் கைச்சாத்திட்டுள்ளதுடன் இக்கொள்கையுடன் உடன்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கட்டுரை - 2 - கொள்கையின் நோக்கங்கள்;**

- மனித வியாபாரத்தை தடுத்தலும் இல்லாதொழித்தலும் விசேடமாக பெண்கள் சிறுவர்களுக்கென கரிசனையுடன் செயலாற்றுதல்.
- பாதிக்கப்பட்ட நபர்களை அவர்களுக்குரிய மனித உரிமையுடன் அணுகி பாதுகாத்தலும் உதவி வழங்கலும்.
- நாடுகளுக்கிடையே கூட்டுறவுத்தன்மையை விருத்தி செய்தல்.

**கட்டுரை 3a இன்படி மனித வியாபாரமானது பின்வருமாறு வரையறை செய்யப்படுகிறது;**

மனித வியாபாரம் என்பதன் கருத்தாவது பணிக்கு சேர்த்துக்கொள்ளுதல், வேறு இடத்துக்கு கொண்டுச் செல்லுதல், இடம் மாற்றுதல், கடல் கடந்து செல்லுதல் அல்லது மக்கள் மூலம் பண வரவு பெறுதல் போன்ற செயல்களை, பயமுறுத்தியோ அல்லது பலவந்தப்படுத்தியோ அல்லது வலுக்கட்டாயப்படுத்தியோ அல்லது கடத்தியோ அல்லது மோசடி செய்தோ அல்லது ஏமாற்றியோ அல்லது அதிகாரத்தை தவறாகப் பயன்படுத்தியோ அல்லது துன்புறுத்தியோ அல்லது பணத்தை அல்லது அதற்கொத்த பலனை வரவோ அல்லது செலவோ செய்து ஏமாற்றும் நோக்குடன் ஒரு நபரை ஒப்புதலளிக்கச் செய்து ஒரு நபர் பிறிதொரு நபர் மீது கட்டுப்பாட்டை வைத்திருத்தலாகும்.

ஏமாற்றும் நோக்கமென்பது, ஏமாற்றி விபச்சாரத்தில் ஈடுபடுத்துவது அல்லது பாலியல் ரீதியான வேறு முறைகளிலான மோசடிகள், வலுக்கட்டாய வேலை அல்லது சேவை செய்வித்தல், அடிமைத்தனம் அல்லது அடிமைத்தனத்தை ஒத்த முறைகள் அல்லது உடல் அங்கங்களை அகற்றுதல் என்பனவாகும்.

**ஐக்கிய நாடுகள் கொள்கை 3b யின் படி:**

கட்டுரை 3a இல் உபபந்தியிலுள்ள துஷ்பிரயோகங்கள் பாதிக்கப்பட்ட நபரின் அனுமதியுடன் இடம் பெற்றிருந்தாலும் கூட 3a உப பந்தியிலுள்ள செயல்கள் இடம் பெற்றிருந்தால் பெறப்பட்ட அனுமதி செல்லுபடியாகாது.

**பிள்ளைகளைக் குறித்து கட்டுரை 3c குறிப்பிடுவதாவது**

பணிக்கு சேர்த்துக்கொள்ளுதல், இடம்மாற்றுதல், வேறு இடத்திற்கு கொண்டுச் செல்லல், கடல் கடந்து செல்லல், அல்லது பண வரவு பெறுதல் மூலம் ஒரு பிள்ளையை ஏமாற்றும் நோக்குடன் செயற்படுதல் மனித வியாபாரம் என்று கருதப்படும். இக்கட்டுரையின் உபபந்தி (a) இல் கூறப்பட்ட செயல்கள் இடம்பெறாவிட்டாலும் கூட இது மனித வியாபாரமே ஆகும்.

* **குறிப்பு** : இக்கொள்கைக்கான இலக்காகவும் மற்றும் இலங்கையின் சட்டப்படியும் 'சிறுவர்' என்பவர் 18 வயதுக்குட்பட்ட எவராகவும் இருக்கலாம்.

### 2.2.2 தரை, கடல் ஆகாய வழியாக புலம் பெயர்தல் தொடர்பான ஆட்கடத்தலுக்கு எதிரான அரசியற் கொள்கை

- 28 ஜனவரி 2004 முதல் கட்டாயமாக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- இக்கொள்கையின் நோக்கமாவது புலம்பெயர்தல் தொடர்பான ஆட்கடத்தலை தடுத்தலும், இல்லாதொழித்தலும், அத்துடன் ஆட்கடத்தலுக்கு உட்பட்ட நபர்களின் உரிமைகளை பாதுகாப்பதுடன் நாடுகளுக்கிடையிலான கூட்டுறவுத்தன்மையை கடைசி வரையிலும் விருத்தி செய்தல் (கட்டுரை - 2)
- புலம் பெயர்வாளர்களை பேராபத்துக்கு உட்படுத்துவதுடன் குற்றவாளிகளுக்கு பேரளவில் ஆதாயத்தைப் பெற்றுத்தரும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக் குழுக்களால் ஆட்கடத்தலுக்கு உட்படுத்தப்படுதல் தொடர்பான வளர்ந்து வரும் பிரச்சினை தொடர்பாக செயலாற்றுதல்.

## 2.3 ஆட்கடத்தல்

தரை, கடல், மற்றும் ஆகாய வழி மூலம் புலம்பெயர்ந்து ஆட்கடத்தலில் ஈடுபடுவதற்கு எதிராக அரசியல் கொள்கை காணப்படுகின்றது. இது ஐக்கிய நாடுகள் சபையின் மாநாட்டில் நாடுகளுக்கிடையிலான ஒழுங்கமைக்கப்பட்ட குற்றமொன்றாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. தரை, கடல், ஆகாய வழி மூலம் இடம்பெறும் ஆட்கடத்தலை வினைத்திறனுள்ள முறையில் தடுத்து, இல்லாதொழிக்க சர்வதேச அணுகு முறைகளான, கூட்டுழைப்பு, தகவல் பரிமாற்றம் மற்றும் ஏனைய பொருத்தமான நடைமுறைகளான சமூக பொருளாதார நடைமுறைகள் தேசிய, பிராந்திய மற்றும் சர்வதேச ரீதியில் முன்னெடுக்கப்பட வேண்டும் என்பதை அரசாங்கம் புரிந்து கொண்டுள்ளது.

**ஆட்கடத்தலுக்கான வரைவிலக்கணம் கட்டுரை** 3

'புலம்பெயர்வாளர்களிடம் இடம்பெறும் ஆட்கடத்தல்' என்பது வழிமுறைகளை அடைய முயற்சி செய்யுமுகமாக, நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ, பண அல்லது ஏனைய பண்டங்கள் மூலம் பெறும் ஆதாயம் மூலம், அந்நாட்டைச் சேர்ந்தவராகவோ அல்லது நிரந்தர குறியிருப்பாளராகவோ அல்லாத ஒருவர் சட்டரீதியற்ற முறையில் ஒரு நாட்டிற்குள் உள்நுளைவதாகும்.

## 2.4 பிராந்திய சட்ட நடைமுறை

SAARC 2005 மாநாட்டில் விபசாரத்துக்காக பெண்கள் மற்றும் சிறுவர்களை மனித வியாபாரத்துக்கு உட்படுத்துவதை தடுப்பதும் இல்லாதொழிப்பதும் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இம்மாநாட்டின் இலக்காவது;

- வினைத்திறனுள்ள பல்வேறு வருமுன் தடுக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக அங்கத்துவ நாடுகளிடையே கூட்டுறவை விருத்தி செய்தல்.
- பெண்கள் மற்றும் சிறுவர்களை மனித வியாபாரத்துக்கு உட்படுத்துவதை தடுத்தலும், இல்லாதொழித்தலும்.
- மனித வியாபாரத்தால் பாதிக்கப்பட்ட நபர்களை ஈடுசெய்தலும், மீண்டும் பழைய நிலைமைக்கு கொண்டு வருதலும்.
- சர்வதேச வியாபார வலையமைப்புக்களில் பெண்கள், சிறுவர்களை பயன்படுத்துவதை தடுத்தல், விசேடமாக SAARC பிராந்திய நாடுகளில் ஆதார நாடு, சென்றடைந்த நாடு, செல்ல நியமிக்கப்பட்ட நாடு என்பன கருத்திற் கொள்ளப்படும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2002 ஜனவரி தெற்காசிய நாடுகளின் பிராந்திய கூட்டமைப்பு (SAARC) மாநாட்டில் கட்மண்டுவில் பிராந்திய ரீதியில் வினைத்திறனுள்ள முறையில் மனித வியாபாரத்தை இல்லாதொழிப்பது தொடர்பாக அங்கீகரிக்கப்பட்டது. அங்கத்துவ நாடுகள் ஏழினதும் அங்கீகரிப்பின் பின்னர், 2005 டிசம்பர் முதல், கட்டாயமாக கருத்துப் பரிமாற்றம் மூலம் செயற்பட்டு வினைத்திறனுள்ள முறைகளில் மனித வியாபாரம் குறித்து அறிவிக்க வேண்டுமென்ற ரீதியில் நடைமுறைப்படுத்தப்பட்டது.

தென் ஆசியாவில் மனித வியாபாரத்தை தடுப்பது மற்றும் இல்லாதொழிப்பதும் தொடர்பான முக்கிய அடையாளமாக வெற்றிகரமாக செய்து முடிக்கப்பட்டாலும் கூட, SAARC மாநாட்டுக்கான வரையறைகள் என்ற ரீதியில் பாதிக்கப்பட்ட மக்களின் உரிமைகள் மற்றும் சென்றதும் செல்லவேண்டியதுமான நாடுகள் தொடர்பான பகுதிகள் குறித்த பொறுப்புக்களுக்கான வரைவிலக்கணம், எல்லைகள் முதலியன காணப்படுகின்றன. சில முக்கிய வரையறைகளில் பின்வருவன உள்ளடங்குகின்றன. a) பாதிக்கப்பட்ட ஆண்கள் ஒதுக்கப்படல் b) சுரண்டும் விதங்கள் விபசாரத்துக்கு மட்டும் எல்லைப்படுத்தப்பட்டிருக்கும். இவ்வரையறைகள் ஏலவே காணப்படும் 'வெளித்தள்ளும் காரணிகளான்' - வறுமை, வேலையற்ற விகிதத்தினரின் அதிகரிப்பு முதலியன மற்றும் 'உள்ளிழுக்கும் காரணிகளான்' - மலிவான உழைப்புக்கான கேள்வி, நியமமுறையற்ற தொழில் துறைகள் என்பவற்றுடன் இணைந்துக் காணப்படுகின்றன. எனவே மனித வியாபாரம் குறித்த SAARC மாநாடு பற்றிய மீட்டலுக்கான அடையாளக் குறிப்பாக இது காணப்படுகிறது. தென் ஆசியாவில் மனித வியாபாரம் குறித்த பிராந்திய பொறிமுறை தொடர்பான புரிந்துணர்வு மற்றும் மாநாடு தொடர்பான சிபாரிசுகளை முன்வைத்து அபிவிருத்தி செய்யவென குடியியல் சமூகமும் அரச சார்பற்ற நிறுவனங்களும் மறுபரிசீலனைகளை முன்வைத்துள்ளன.

* **குறிப்பு** : இலங்கையில் 2005 SAARC மாநாட்டில் குறிப்பு இல. 30 இன்படி விபச்சாரத்துக்காக பெண்கள் மற்றும் சிறுவர்களை மனித வியாபாரத்துக்கு உட்படுத்துவதை தடுப்பதும் இல்லாதொழிப்பதும் பற்றி ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இந்த மாநாடானது நடைமுறைப்படுத்தப்படவில்லை, காரணம் கட்டளையிட்ட அமைச்சர் வெளியிட்ட சுற்றறிக்கையில், இம்மாநாட்டுக் கொள்கையானது இலங்கையில் கட்டாயமாக நடைமுறைப்படுத்தப்படும் தினம் குறித்து உறுதிப்படுத்தப்படவில்லை.

## 2.5 தேசிய சட்ட நடைமுறை

### 2.5.1 மனித வியாபாரம் தொடர்பான இலங்கையின் சட்ட நடைமுறைகள்.

2006ஆம் ஆண்டு தண்டனைச்சட்டக் கோவை (திருத்தம்) சட்ட இல. 16இன் படி மனித வியாபாரமானது சட்டத்தை மீறிய செயல் என்பதை தெளிவாக எடுத்துக்கூறுவதுடன் ஐக்கிய நாடுகள் கொள்கையின் வரைவிலக்கணத்தையும் பின்பற்றுகிறது. விசேடமாக பிரிவு 360(C) இல் குற்றங்கள் சுருக்கமாகக் கூறப்படுகின்றன.

(a) கொள்வனவு செய்தல், விற்பனை செய்தல், பண்டமாற்று முறையில் வியாபாரம் செய்தல், செய்யத்தூண்டுதல் அல்லது கொள்வனவு செய்யவோ, விற்பனை செய்யவோ அல்லது பண்டமாற்று முறையில் வியாபாரம் செய்ய பணத்துக்காகவோ அல்லது வேறு தேவைகளுக்கோ ஊக்கமளித்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(b) வேலைக்கு சேர்த்துக்கொள்ளுதல், இடம்மாற்றுதல், வேறு இடத்திற்கு கொண்டு செல்லல், கடல் கடந்து செல்லல், மக்களைக் கொண்டோ அல்லது பயமுறுத்தியோ, வற்புறுத்தியோ, மோசடி செய்தோ, ஏமாற்றியோ அல்லது ஏமாற்ற ஊக்குவித்தோ மற்றொரு நபரை வற்புறுத்தி பணியில் அல்லது சேவையில் ஈடுபடுத்துதல், அடிமைத்தனம், உடல் பாகமகற்றுதல், விபசாரம் அல்லது வேறு முறையிலான பாலியல் ரீதியான மோசடிகள் அல்லது வேறு செயற்பாடுகள் சட்டப்படி குற்றமாகும். அத்துடன்

(c) வேலைக்கு சேர்த்துக்கொள்ளுதல், இடமாற்றுதல், வேறு இடத்திற்கு கொண்டு செல்லுதல், கடல் கடந்து செல்லுதல் அல்லது பண வரவு பெறுவதற்காக பிள்ளையின் ஒப்புதலுடனோ அல்லது ஒப்புதலின்றியோ மேற்குறிப்பிட்ட ஏமாற்றும் நோக்கங்களுடன் செயற்படுதல்.

மனித வியாபாரம் தொடர்பான சட்டப்படியான தண்டனையாவது இரண்டு வருடங்களுக்கு குறையாத மற்றும் இருபது வருடங்களுக்கு மேற்படாத சிறைத்தண்டனையும், அபராதம் செலுத்துவதுமாகும். பகுதி 360 C (1) (i) இன்படி ஒரு பிள்ளையை மனித வியாபாரத்தில் ஈடுபடுத்தினால் அதாவது 18 வயதுக்கு குறைந்த நபர் எனின், ஆகக்குறைந்த சிறைத்தண்டனை மூன்று வருடங்களாகும். ஆகக்கூடிய சிறைத்தண்டனை 20 வருடங்களாகும். {360 C (2) மற்றும் (3) பிரிவுகள்}

### 2.5.2 கொள்முதல் / வாங்குதல்

சட்டம் பிரிவு 360 A தண்டனைக்குரிய சட்டத்தொகுப்பில் குற்றமொன்று இழைக்க முயற்சி செய்தலுடன் தொடர்பான முன்னேற்பாடுகள் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. மனித வியாபாரம் தொடர்பான வழக்குகள் விசாரணைக்குட்படுத்தப்பட்டு, தண்டனைகள் இதன் மூலமே பெற்றுக் கொடுக்கப்படுவதாக அநேகமானோர் ஊகிக்கின்றனர். இதில் 21 வயதுக்குட்பட்ட ஒரு பெண்ணை பாலியல் சேவை பெறும் நோக்கில் இலங்கையில் அல்லது இலங்கைக்கு வெளியில் சம்மதத்துடன் அல்லது சம்மதமின்றி அல்லது விபசார விடுதியொன்றில் உட்சேர்க்கும் நோக்கத்துடன் அல்லது பொதுவான விபசாரியாக அடைவதற்கு முயற்சி செய்திருப்பின் அது குற்றமாகவே கருதப்படும்.

1995 சட்ட இல. 22இன் படி, ஒரு ஆணோ அல்லது ஒரு பெண்ணோ எந்த வயதினராக இருந்தாலும், அவரின் சம்மதத்துடன் அல்லது சம்மதமின்றி விபச்சாரியாக அல்லது விபச்சார விடுதியில் பணியாற்றுபவராக இருப்பதற்காக வேண்டி ஒருவரால் வாங்க முயற்சி செய்வது 'வாங்குதல்' குற்றமாகும். இவ்வாறான குற்றத்துக்கென குறைந்தது 2 வருடம் முதல் கூடியது 10 வருடம் வரையிலுமான சிறைத்தண்டனை பரிந்துரைக்கப்பட்டுள்ளது. மனித வியாபாரத்தில் 'செயல், வழிவகை, நோக்கம் என்பன ஆராயப்பட்டு சான்றுகள் முன்வைக்கப்பட வேண்டும் என்பது போலன்றி பாலியல் வேலைக்கென அல்லது விபசார விடுதியில் தொழில் புரிய அல்லது பொதுவான விபசாரியாக செயற்பட வாங்கிய 'ஆண் அல்லது பெண்' தொடர்பான சான்றுகள் கிடைப்பின் அதில் ஈடுபடுத்தியவர் குற்றவாளி ஆவார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 2.5.3 ஆட்கடத்தல் தொடர்பான இலங்கைச் சட்டம்

மனித வியாபாரத்தைப் போலன்றி, ஆட்கடத்தல் தொடர்பான விசேட சட்டங்கள் எதுவும் இல்லை. 1948ஆம் ஆண்டு சட்ட இல. 20இன் குடிவரவு குடியகல்வு சட்டமானது மனித கடத்தல் என ஊகிக்கும் நபர்களை வழக்கு தொடர்வதற்கான சட்டவிதிகளை கொண்டுள்ளது.

நபர்கள் தொடர்பான ஆட்கடத்தல் தொடர்பாக வழக்கு தொடர்ப்படுவதற்கான பொருத்தமான முன்னேற்பாடுகள் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளன.

பிரிவு 45 A - சட்ட முன்னேற்பாடுகளுக்கு எதிராக தனி நபரொருவர் இலங்கைக்குள் பிரவேசிக்க வசதி அளித்தல், மறைத்து வைத்தல் அல்லது வேறு இடத்தில் வைத்திருத்தல் இலங்கைக்கு வந்திருப்பதையும், விதிமுறைகளை மீறி இலங்கையில் தங்கியிருப்பதையும் அறிந்தும் இவ்வாறான நபர்களை தொழிலுக்கு சேர்த்துக்கொள்ளவதும் ஆகும்.

பிரிவு 45 C - சட்ட முன்னேற்பாடுகளுக்கு எதிராக தனி நபர் ஒருவர் அல்லது ஒன்றிற்கு மேற்பட்டோர் ஏற்பாடு செய்து இலங்கையில் இருந்து வெளியேற வசதியளித்தல். ‘ஏற்பாடு செய்தல்’ என்பது போலி வாக்குறுதி என்பதை அறிந்தும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு தொடர்பாக வாக்களித்தல். இதன் நோக்கம் இலங்கையிலிருந்து ஒருவரை வெளியேற்றுவது ஆகும். இவ்விலக்குக்காக பணம் சார்ந்த நன்கொடைகளைப் பெறுதல், கடல், நிலம் மற்றும் வேறு வழியாக வலிதான பிரயாண ஆவணமின்றி மக்களை கொண்டுச் செல்லல், இலங்கையிலோ அல்லது வேறொரு நாட்டிலோ மக்களை ஏற்றுக்கொள்ளவோ, தங்கியிருக்கவோ செய்தல் என்பனவாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3. மனித வியாபாரத்தால் பாதிக்கப்பட்ட நபர்களை இனங்காணுதல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**பாட நோக்கங்கள்**

- ✓ பாதிக்கப்பட்ட நபர்களை இனங்காணுவதன் முக்கியத்துவத்தை புரிந்துக்கொள்ளல்.
- ✓ பாதிக்கப்பட்ட நபர்களை இனங்காணுவதற்கான நேரடி மற்றும் மறைமுகமான சுட்டிகள்.
- ✓ பாதிக்கப்பட்ட நபரை யார் இனங்காண முடியுமென்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுதல்.

## 3.1 பாதிக்கப்பட்ட நபர்களை இனங்காணுவதன் முக்கியத்துவம்

மனித வியாபாரத்தால் பாதிக்கப்பட்ட மற்றும் பாதிக்கப்பட்டவர்களென ஊகிக்கப்பட்டவர்களுக்கு மிகத்துல்லியமானதும் கவனமானதுமான இனங்காணல் செயன்முறை அவசியமானதாகும். இதன் மூலமே அவர்களது உடல் மற்றும் உரிமைகள் பாதுகாக்கப்படுவதுடன் மிக இன்றியமையாத சேவைகளைப் பெற்றுக்கொள்ள வழியேற்படுத்தப்பட்டமையையும் உறுதிப்படுத்திக் கொள்ள முடியுமாக அமையும். குற்றத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்கக்கூடிய வழிமுறைகளும் உறுதிப்படுத்தப்பட வேண்டும். மனித வியாபாரத்தில் ஈடுபடும் நபர்களை சரியாக இனங்காண்பதன் மூலம் குற்ற விசாரணைகளை அதிகளவில் முன்னெடுக்க வழிக்காட்டல்களைப்பெற முடிவதோடு ஏனைய குற்றங்களை தடுக்கவும் உதவியாக அமையலாம்.

மனித வியாபாரத்தால் பாதிக்கப்பட்டவர்களின் உரிமைகளை பாதுகாக்க அவசியமான கொள்கையாவது, பாதிக்கப்பட்ட கால கட்டத்தில் அல்லது மனித வியாபாரத்தில் அகப்பட்ட விளைவினால் செய்த குற்றங்களுக்காக வழக்குத் தொடரவோ அல்லது தண்டனை வழங்கவோ கூடாது. (இக்கொள்கையானது பாலியல் மோசடி நோக்கத்துக்காக மனித வியாபாரத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கும், அதாவது குறித்த நாட்டில் விபச்சாரம் சட்டரீதியாகவோ அல்லது சட்ட விரோதமாக காணப்பட்டாலும் கூட பொருத்தமாக அமையும்)

மனித வியாபாரம் குறித்த குறைந்த விழிப்புணர்வு மற்றும் அறிவு காரணமாக, அடிக்கடி மனித வியாபாரத்துக்குட்பட்ட நபர்கள் பாதிக்கப்பட்டவர்களாக அன்றி, குற்றவாளிகளாக இனங்காணப்படுகின்றனர். சென்றடைந்த அல்லது செல்லக் குறிக்கப்பட்ட நாடுகளில் பெரும்பாலும் பாதிக்கப்பட்டவர்களுக்கு எதிராக வழக்கு தொடரப்படுவதுடன், தடுத்து நிறுத்தப்பட அல்லது புலம்பெயர்ந்த இடங்களுக்கே பின்வரும் குற்றங்களுக்காக திருப்பி அனுப்பி வைக்கப்படுகின்றனர். சட்டரீதியற்ற புலம்பெயர்வு, தொழில் நிலைமை அல்லது சட்டவிரோத ஊழியர் பயிற்சிகள். தமது சொந்த நாட்டிற்கு திரும்பியதும் போலி ஆவணங்களை பயன்படுத்தியமை, சட்ட விரோதமாக நாட்டை விட்டு வெளியேறியமை, அல்லது பாலியல் ரீதியான தொழில் காரணமாக அவர்கள் மீது வழக்கு தொடரப்படுகின்றது. இந்த எல்லா வழக்குகளிலும் குற்றச்சாட்டானது அவர்களது நீதியைப்பெற்றுக்கொள்ளும் மற்றும் தேவையான உதவிகளைப் பெற்றுக்கொள்ளும் வழிமுறைகளை எல்லைப்படுத்துவதுடன் அதிகாரிகளிடம் முறையீட்டை மேற்கொள்வதற்கான விருப்பையும் தடுக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதிக்கப்பட்ட நபர்களை இனங்காணுவது பின்வரும் காரணிகளால் முக்கியத்துவம் பெறுகிறது.

1. அவர்கள் ஒழுங்கமைக்கப்பட்ட குற்மொன்றினால் பாதிக்கப்பட்டவர்கள், மற்றும்,

- தீவிர பாதுகாப்புக்கான தேவை காணப்படலாம்.
- விருப்பத்துடன் பகிர்ந்துக்கொள்ளக்கூடிய குற்றத்திலீடுபட்ட குழுக்கள் தொடர்பான தகவல்களை தம்மிடம் வைத்திருக்கலாம்.

2. அவசரமான உடல் மற்றும் உள ரீதியான விசேட பராமரிப்பு தேவையாயிருக்கலாம். அத்தோடு கொள்கை மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களுக்காக வழக்கு பற்றிய தரவுகளை கட்டியெழுப்புவது முக்கியமானதாகும்.

**பாதிக்கப்பட்டவர்களில் இரு வகையினர் காணப்படுகின்றனர்.**

1. பாதிப்புக்குட்படும் சாத்தியமுள்ள நபர்கள் - மனித வியாபாரத்துக்குட்படக்கூடிய அல்லது அதன் அபாய நிலைக்கு ஆளாகக்கூடியவர்கள்.
2. பாதிக்கப்பட்டவர்களென ஊகிக்கப்பட்டவர்கள் - அவர்கள் பாதிக்கப்பட்டவர்களாக இருக்கலாம் என்பதை காட்டும் சுட்டிகள் காணப்படும்.

**பாதிப்புக்குட்படும் சாத்தியமுள்ள நபர்கள்** - Potential Victims

மனித வியாபாரத்துக்கு உட்படக்கூடிய அல்லது அபாய நிலையிலுள்ளவர்களை இனங்காண்கின்றமையானது குற்றம் இடம்பெறாமல் தடுப்பதோடு மனித வியாபாரம் மனிதர்களிடையே இடம்பெறும் வழிமுறைகளை அறிந்துக்கொள்ளும் முன் செயலாகவும் அமைகிறது.

**பாதிக்கப்படட்டவர்கஎென ஊகிக்கப்பட்டவர்கள்** - Presumed Victims

குறித்த நேரத்தில் பொருத்தமான முறையில் இனங்காணப்பட்ட ஊகிக்கப்பட்டவர்களுக்கு அவசியமான உதவிகள் பெற்றுக்கொள்ளப்பட்டனவா என்பதை உறுதிப்படுத்திக் கொள்வதோடு குற்றத்துக்கு பொறுப்பான நபர்கள் பற்றிய விசாரணைக்கும் வழக்குத் தொகுப்பதற்கும் முக்கியமானதாக அமையும்.

**பாதிக்கப்படட்டவர்களை இனங்காண்பதிலுள்ள சவால்கள்**

- பாதிக்கப்பட்டவர் ஆட்கடத்தப்பட்டாரா அல்லது மனித வியாபாரத்துக்குட்பட்டாரா என்பதிலுள்ள பொதுவான குழப்ப நிலை.
- மனித வியாபாரத்துக்குட்பட்டவர்கள் ஆயத்தத்துடன் முன்வருவதில்லை மற்றும்;
    - பெரும்பாலும் உதவியளிக்க விரும்புவதில்லை.
    - மனித வியாபாரமானது, பாதிக்கப்பட்டவர்களை இலகுவில் இனங்காணக்கூடிய உடன்படிக்கையுடனான குற்றங்களிலிருந்து வேறுபடுகிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பாதிக்கப்பட்டவர்கள் தம்மை பாதிக்கப்பட்டவர்களென பெரும்பாலும் காண்பதில்லை மற்றும் அதனை ஏற்றுக்கொள்வதிலுள்ள தயக்கம்.
    - அவமான உணர்வு, பயம் அல்லது ஒன்றும் பெற்றுக்கொள்ள முடியாது என்ற உணர்வு.

**இனங்காணுதல் தொடர்பான சவால்களை வெற்றிபெறல்**

மனித வியாபாரத்தால் பாதிக்கப்பட்டவர்களை இனங் காண்பதிலுள்ள சவால்கள் தரப்பட்டுள்ளன. இச்சவால்களை மேற்கொள்ள சில வழிமுறைகளை பின்பற்றி நடைமுறைப்படுத்த வேண்டும்.

**பயிற்சிகளும் விழிப்புணர்வை அதிகரித்தலும்;**

மனித வியாபாரத்தால் பாதிக்கப்பட்டவர்கள் விடயத்தில் முக்கிய பங்காற்றும் நிறுவனங்கள் மற்றும் தனி நபர்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு தேவையான உதவிகளை வழங்குவதற்கு ஏற்றவகையில் சரியான அறிவையும் மனித வியாபாரத்தை இனங்காணும் கருவிகளையும் அறிந்திருக்கும் வகையில் பயிற்சிகளையும் விழிப்புணர்வையும் வழங்குவதாகும். பல்வேறு ஒழுக்க நடவடிக்கை எடுக்கும் குழுக்களுக்கு முடியுமான விதத்தில் பயிற்சிகள் வழங்கப்படும்போது தனிநபர்கள் மற்றும் நிறுவனங்கள் மனித வியாபாரம் தொடர்பான வழக்குகளில் சிறந்த தொடர்பாடலுடன் இணைந்து செயற்படக்கூடியதாக அமையும்.

**பொது ஊடகவியல் விளம்பரமும் வந்தடையும் நிகழ்ச்சிகளும்**

தொலைகாட்சி மற்றும் வானொலியில் விளம்பர நடவடிக்கைகளை மேற்கொண்டு, பொதுமக்களை எட்டக்கூடிய துண்டுப்பிரசுரங்கள், சுவர்க்கடதாசிகளை வழங்குவதனூடாகவும் 24 மணித்தியால உதவி அழைப்பிலக்கம் ஊடாகவும் மனித வியாபார குற்றம் குறித்த விழிப்புணர்வை அதிகரிப்பதோடு, மிக முக்கிய விடயமாவது பாதிக்கப்பட்டவர்கள் பெற்றுக்கொள்ளக்கூடிய சேவைகளை பற்றி அறியத்தருவதாகும். இதன் இலக்காவது மனித வியாபாரத்தை தடுத்தலும், மனித வியாபாரத்துக்கு உட்படக்கூடிய ஆற்றலுள்ளவர்களுக்கு சரியான நேரத்தில் தேவையான உதவிகளை வழங்குவதுமாகும்.

**இனங்காணுதல் மற்றும் வழிப்படுத்தக்கூடிய பொறிமுறைகள்**

இலங்கை அரசாங்கமானது தேசிய மனித வியாபார தடுப்பு படையணி மூலம் 'மனித வியாபாரத்தை இனங்காணல், பாதுகாத்தல் மற்றும் வழிப்படுத்தல்களுடன் கூடிய நியம நடைமுறை செயற்பாடுகளை (SOP) விருத்தி செய்து, உறுதிபடுத்தி, நடைமுறைப்படுத்தியுள்ளது. இதன் மூலம் மனித வியாபாரத்துக்குட்படுபவர்கள் இனங்காணப்படுவதுடன் அவர்களை வழிப்படுத்தவும் உதவியளிக்கப்படுகிறது SOP யை நடைமுறைப்படுத்தி, பாதிக்கப்பட்டோரை இனங்காண்பதை அதிகரிக்கு முகமாக தடுப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுவோர் மற்றும் நிறுவனங்கள் இணைந்து SOP யை நடைமுறைப்படுத்தி பாதிக்கப்பட்டோருக்கு உதவியளிப்பதை வேண்டி நிற்கிறது.

**படையணி**

பல் - ஒழுக்க படையணியானது குற்றத்தை தடுக்கும் நிறுவனங்களை, பிரதிநிதித்துவப்படுத்தி, தொடர்பாடல், இணைப்பாக்கம் மற்றும் தகவல் பகிர்வுக்கு அங்கத்தவர்களிடையே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதவியளிக்கிறது. மேலும் கொள்கைகளை நடைமுறைப்படுத்தவும், முன்னெடுக்கவும் உதவி வழங்குகிறது. தேசிய மனித வியாபார தடுப்பு படையணியாவது நீதி அமைச்சினால் தலைமை தாங்கப்படுவதுடன் படையணியின் அங்கத்தவர்களின் இணைப்பாக்கமுள்ள முயற்சிகள் காரணமாக மனித வியாபாரத்தை தடுப்பதற்கும் உதவியளிக்கின்றது.

## 3.2 பாதிக்கப்பட்டவர்களை இனங்காணக்கூடிய சுட்டிகள்.

மனித வியாபாரத்தால் பாதிக்கப்பட்ட அல்லது பாதிக்கப்படக்கூடிய ஆற்றலுடையவர்களென்பதற்கான சந்தேகம் மற்றும் உண்மைகளை திரட்டுவதே இச்சுட்டியின் நோக்கமாகும். இதன் செயன்முறையாவது பாதிக்கப்பட்டவர் எவரென இனங்காண்பதாகும்.

### சுட்டிகள் நேரடியானவை அல்லது மறைமுகமானவை

- மனித வியாபாரம் பற்றிய நேரடிச்சுட்டிகள் மனித வியாபாரத்தின் கூறுகள் பற்றிய வரைவிளக்கணத்தை உறுதிப்படுத்துவதாய் காணப்படும்.
- மனித வியாபாரம் பற்றிய மறைமுக சுட்டிகள், நடைமுறை ரீதியிலான தரவுகள் மற்றும் உண்மையில் மனித வியாபாரத்தால் பாதிக்கப்பட்டவர்கள் தொடர்பான சமூகவியல் ஆராய்ச்சிகள் என்பவற்றை அடிப்படையாக் கொண்டிருக்கும் (மனித வியாபாரத்துக்குட்பட்ட / உட்படக்கூடிய நபர் தொடர்பான பொதுவான சராசரி சமூக மற்றும் உளவியல் சார் தகவல்கள், சூழ்நிலை, சூழல் என்பவற்றை பொருத்து)

**சுட்டிகளை பின்வரும் சூழ்நிலைகளின் போது பொதுவாக காணக்கூடியதாக இருக்கும்;**

1. தனிநபர் தனது வாழ்க்கை குறித்த அடிப்படை தீர்மானம் எடுப்பதில் கட்டுப்பாட்டை இழந்திருத்தல்.

2. சுரண்டல் தொடர்பான நிலைமை.

**கட்டுப்பாட்டு பொறிமுறைகள் / குறைவான கட்டுப்பாடு (சுட்டிகள்)**

- கடவுச்சீட்டு, பிரயாண, அடையாள அல்லது தொழில் ரீதியான ஆவணங்கள் பிறரிடம் காணப்படுகின்றமை அல்லது பிரதிகள் மட்டும் காணப்படுகின்றமை.
- சம்பளம் அல்லது கூலி கொடுக்கப்படாமை.
- சர்வதேச மனித வியாபாரத்தின் போது, தான் சென்றடைந்த நாட்டின் மொழி மூலமாக தொடர்பாடலை மேற்கொள்ள முடியாதிருத்தல்.
- கட்டுப்பாட்டு நிலைமைகள் அல்லது தாக்குதலினால் காயப்படுத்தல்.
- தொடர்பு கொள்ளவும், தொடர்பு ஏற்படுத்தவும் அனுமதி வழங்கப்படாமை - குடும்பத்துடனோ சமூகத்துடனோ மட்டுப்படுத்தப்பட்ட தொடர்பாடல்.
- மட்டுப்படுத்தப்பட்ட அல்லது நடமாட சுதந்திரமின்மை அல்லது மேற்பார்வையாளர் ஒருவருடன் மாத்திரம் நடமாட அனுமதிக்கப்படல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- உயர்ந்த கட்டுப்பாடும், கடுமையான மேற்பார்வையும் காணப்படுதல். (உடல் உள துஷ்பிரயோகம் அல்லது தண்டப்பணம் முதலியன உள்ளடங்கும்.)
- போக்குவரத்து, தங்குமிடம், உணவு, போன்றவற்றுக்கு மேற்பார்வையாளரிலேயே தங்கியிருத்தல்.
- தொழில் செய்யும் இடத்திலேயே வசித்தல்.

**சுரண்டல் தொடர்பான நிபந்தனைகள் (சுட்டிகள்)**

- மேற்பார்வையாளர் அல்லது முகவருக்கு போக்குவரத்து ஆவணங்கள், தங்குமிடம், உணவு அல்லது பாதுகாப்பிற்கு கடன்பட்ட பணத்தை செலுத்த நேரிடுகின்றமை (கடன் அடிமைத்தனம்)
- சம்பாதிக்க அனுமதிக்கப்படுவதில்லை, குறைந்த சம்பளம் அல்லது சம்பாத்தியத்தின் ஒரு சிறிய பகுதியை மாத்திரமே வைத்திருக்க அனுமதிக்கப்படுதல்.
- தொழில்ரீதியான ஒப்பந்தம் இருப்பதில்லை. அல்லது போலியான ஒப்பந்தம் காணப்படும்.
- தொழிலுக்காக சென்ற நாட்டிலிருந்து ஒப்பந்த அடிப்படையில் வேறு நாட்டிற்கு தொழிலுக்குச் செல்லுதல்.
- விளம்பரப்படுத்திய, வாக்குறுதி அளிக்கப்பட்ட, அல்லது எதிர்பார்க்கப்பட்ட தொழில் அல்லது சேவையிலிருந்து வேறுபட்ட தொழிலொன்றில் ஈடுபடுதல் - ஏமாற்றம் அல்லது மோசடிக்கு ஆளாகுதல்.
- குறித்த தொழிலினால் காயப்படுதல் அல்லது பலவீனப்படுதல்.
- விடுமுறை தினமோ அல்லது ஓய்வு நேரமோ இன்மை.
- மருத்துவ கவனிப்பைப் பெறும் வசதி குறைவு.
- மேலதிக மணித்தியாலங்கள் பணியாற்றுதல்.
- எதிர்பார்த்த நபரை விட பிறிதொருவருக்காக பணியாற்றுதல்.

**வற்புறுத்தப்பட்ட உழைப்பு (நேரடியான சுட்டிகள்)**

**குறித்த நபர்**

- தான் ஒப்புதலளித்ததை விட வேறுபட்ட வேலை கிடைத்துள்ளதா? அப்படியெனில், அதிலிருந்து அவன் / அவளால் வெளியேற முடியுமா?
- ஒப்புதலளித்ததை விட வேறுபட்ட வேலை நிலைமைகள் காணப்படுகின்றனவா? அப்படியெனின், அதிலிருந்து அவன் / அவளால் வெளியேற முடியுமா?
- தேவையான தொழில் விசா உள்ளதா அல்லது, குறுங்கால பயண விசா அல்லது விடுமுறை விசா உள்ளதா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- அதிக மணித்தியால வேலையா? விடுமுறை தினங்கள் உண்டா?
- மிகக் குறைந்த கொடுப்பனவு கிடைக்கின்றதா? அல்லது ஒரு கொடுப்பனவும் வழங்கப்படுவதில்லையா?
- தொழில் புரியும் நிலைமை ஆபத்தானதா? (சரீர ரீதியில் ஆபத்து மற்றும் சுத்தமின்மை)
- ஆபத்தான கருவிகளை அல்லது பொருட்களை உபயோகிக்க நேரிடுகின்றதா?
- குறித்த வேலையை செய்ய எதிர்பார்க்கிற / போதுமான பயிற்சி வழங்கப்பட்டுள்ளதா?
- தனது வேலையை எந்த நேரத்திலும் நிறுத்திக்கொள்ளும் வழிமுறைகள் உள்ளனவா?

**குறிப்பு :**

ஒரு நபர் மனித வியாபாரத்துக்கு உட்பட்டுள்ளாரா என்பதை தீர்மானிக்கும் போது குடிப்பெயர்ந்த பணியாளர் சட்டப்பூர்வ வழியில் குடிப்பெயர்ந்தாரா என்பது தீர்மாணிக்கும் காரணி அல்ல என்பதை கவனத்திற் கொள்ளவும் - சட்டப்பூர்வ முகவர் நிலையத்தினூடாக சென்ற நபரும் கூட மனித வியாபாரத்தால் பாதிக்கப்படலாம். பாதிக்கப்பட்ட நபரை இனங்காண செயல், வழிமுறை மற்றும் சுரண்டுதல் காணப்பட்டதா என்பதை அறிவதே எளிய வழிமுறையாகும். ஒருவர் சட்டவிரோதமான முறையில் புலம்பெயர்ந்திருந்தால் அது மனிதவியாபாரத்திற்கான அறிகுறியாக இருக்கலாம், ஆனால் அது மட்டுமே மனித வியாபாரத்தை தீர்மானிக்கும் காரணியாக அமையாது.

**நிர்ப்பந்திக்கப்பட்ட விபச்சாரம் (அல்லது வியாபார ரீதியான பாலியல் சுரண்டல்)**

**குறித்த நபரால்;**

- தனது சம்பாத்தியத்தை வைத்துக்கொள்ள முடியுமா?
- வாடிக்கையாளரை தாமே தெரிவு செய்ய முடியுமா?
- நேர அட்டவணையை தானே தெரிவு செய்ய முடியுமா?
- தனது விருப்பப்படி தான் ஈடுபட்ட செயற்பாட்டை நிறைவு செய்யலாமா?
- பாதுகாப்பற்ற / முரட்டுத்தனமான பாலியலுக்கு மறுப்பு தெரிவிக்க முடியுமாக உள்ளதா?
- அவன் / அவள் இருக்கும் நாட்டின் விபசாரம் குறித்த ஒழுங்கு முறைகளை அறிந்துள்ளாரா?
- வன்முறை அல்லது தண்டனையை காட்டி பயமுறுத்தப்பட்டாரா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3.3 மனித வியாபாரத்தால் பாதிக்கப்பட்ட சிறுவர்களை இனங்காணுதல்.

மனித வியாபாரத்துக்கு பெரும்பாலும் உட்படுத்தக்கூடியவர்களாக சிறுவர்கள் காணப்படுகின்றனர். ஏனெனில், வேலைக்குச் சேர்க்கும் செயன்முறையின்போது உண்மையை மறைப்பதற்கான முறைகளை குறைவாகவே பயன்படுத்த வேண்டி இருப்பதுடன் பல்வேறு காரணங்களால் பெற்றோரும் பாதுகாவலருமே குற்றம் புரிபவர்களுக்கு உடந்தையாக இருந்து பிள்ளைகளை மனித வியாபாரத்தினுள் தள்ளி விடுகின்றனர். ஏனையவற்றை விட மிக முக்கியமான விடயம் என்னவென்றால், சரியான நேரத்தில் மனித வியாபாரத்தால் பாதிக்கப்பட்ட சிறுவர்களை இனங்காண்பதும், பொருத்தமான உதவிகளை வழங்கி, வழிப்படுத்தி சிறுவர் உரிமை தொடர்பான மாநாட்டின்படியும் மற்றும் சர்வதேச ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட நியமங்களின்படியும் சிறுவர் உரிமையை பாதுகாப்பதுமேயாகும்.

பிள்ளையின் சிறப்பான விருப்பத்தை எப்போதுமே கவனத்திற் கொண்டு அப்பிள்ளையின் கருத்து முடியுமான மற்றும் அவசியமான இடங்களில் பெற்றுக்கொள்ளப்படல் வேண்டும்.

மனித வியாபாரம் தொடர்பாக பாதிக்கப்பட்ட சிறுவரை இனங்காண்பதில் 'வழிமுறைகளை' அறிந்துக்கொள்ளக்கூடிய சுட்டிகள் மூலம் ஏமாற்றப்பட்டதை பார்ப்பது முக்கியமானதல்ல என்பதை நினைவிற்கொள்ளவும். 'செயல்' மற்றும் 'சுரண்டுதல்' போன்றவை காணப்படுவது கட்டாயமாகும்.

## 3.4 பாதிக்கப்பட்ட நபர்களை யாரால் இனங்காண முடியும்?

பயிற்சி பெற்றிருந்தால் மற்றும் வழிப்படுத்தக்கூடிய பொறிமுறை ஒன்று இருப்பின் பெரும்பாலான தனிநபர்கள் அல்லது நிறுவனங்களால் (அரச மற்றும் அரச சார்பற்ற) மனித வியாபாரத்தால் பாதிக்கப்பட்ட நபர்களை இனங்காணக்கூடியதாக இருக்கும். பாதிப்புற்றவர்களை இனம்காணும் சில முக்கிய தனிநபர்கள் அல்லது நிறுவனங்களாவனவு சட்ட நடைமுறைகள், அரச திணைக்களங்கள், உள்ளூர் அரச அதிகார சபைகள், அரச சார்பற்ற நிறுவனங்கள், சமூக நலன்புரி நிறுவனங்கள் மற்றும் மருத்துவப் பணியாளர்கள்.

சட்ட நடைமுறைகளுக்கே மனித வியாபாரத்தால் பாதிக்கப்பட்ட நபர்களுடன் சம்பந்தப்படுவதற்கான சந்தர்ப்பம் அதிகம் உண்டு, முதலில் குற்றம் தொடர்பான முறைப்பாடுகள் அல்லது தகவல்கள் ஆரம்ப கட்ட புலனாய்வுகளின் அல்லது விசாரணைகளின் விளைவாக காவல் நிலையத்துக்கே முதலில் அறிவிக்கப்படும். அதன் விளைவாக சட்ட நடைமுறைகள் மனித வியாபாரத்தால் பாதிக்கப்பட்ட நபர்களை இனங்காணும்.

மேலும், பாதிக்கப்பட்ட நபர்களை இனங்காணுதல் அரச நிறுவனங்களான தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையானது சிறுவர் தொடர்பான முறையீடுகளையும், இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகமானது புலம்பெயர்ந்த தொழிலாளர்களையும், பயண மற்றும் கடவுச்சீட்டு தொடர்பான விபரங்களை குடிவரவு, குடியகல்வு திணைக்களமும் மேற்கொள்ளும். பெரும்பாலும் குறித்த நபரின் குடும்பத்தினரால் அரச சார்பற்ற நிறுவனங்களிடமும் (NGO) சர்வதேச NGO அல்லது சமூக நலன்புரி நிறுவனங்களிடமும் (CBO) உதவியை நாட விரும்புவதுடன் அதன் மூலம் குற்றத்தால் பாதிக்கப்பட்ட நபர்களை இனங்காண்பதற்கான ஆரம்ப செயன்முறைகள் கொண்டுச் செல்லப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4. பாதிக்கப்பட்ட நபர்களை நேர்காணல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பாட நோக்கங்கள்

- ✓ பாதிக்கப்பட்ட நபர்களின் நேர்காணலின்போது சிறந்த செயல்முறைகள் பற்றிய புரிந்துணர்வைப் பெற்றுக்கொள்ளல்.
- ✓ பாதிக்கப்பட்ட நபர்களின் உரிமைகளை பாதுகாக்கும் வகையில் பாதிக்கப்பட்ட நபர்களின் நேர்காணல் இடம்பெறுவதை உறுதிப்படுத்திக்கொள்ளல்.

## 4.1 பாதிக்கப்பட்ட நபர்களை நேர்காணல்

பெரும்பாலான மனித வியாபாரத்தால் பாதிக்கப்பட்ட நபர்கள் உடல் ரீதியாகவும், உள ரீதியாகவும் மிகத் தீவிரமான பய உணர்வுடன் காணப்படுவர். எனவே நேர்காணலில் நீங்கள் ஈடுபடும்போது துக்ககரமான துலங்கலை உணர்வு ரீதியான மனஅழுத்தத்தை, பதட்டத்தை தூண்டிவிடாத வகையில் உணர்வு பூர்வமாகவும் பொறுமையாகவும் இருப்பது அவசியமாகும். அவர்களது நம்பிக்கையை கட்டியெழுப்புவதோடு தன்னம்பிக்கையை அதிகரிப்பதும் அவசியம் ஆகும். இது அவர்கள் மீண்டெழும் செயன்முறைக்கு உதவியளிப்பதோடு, நேர்காணலில் ஈடுபடுவதையும் இலகுவாக்கும்.

பாதிக்கப்பட்ட நபரின் கடந்தகால கசப்பான அனுபவங்களை வெளிக்கொணருவதை கூடுமானவரை தவிர்த்துக்கொள்ள வேண்டும். இதனால் அந்நபர் அவமான உணர்வை, கடும்பயத்தை, வெட்கத்தை, பலவீனத்தை, நம்பிக்கையின்மையை உணரலாம். நீங்கள் உதவவே உள்ளீர்கள் என்பதையும் அந்நபர் மீது உதவியை வற்புறுத்தி திணிக்க முடியாது என்பதையும் கவனத்திற் கொள்ளவும்.

நேர்காணலைத் திட்டமிடும்போது, பாதிக்கப்பட்ட நபரினதும், சம்பந்தப்பட்ட அலுவலர்களினதும் பாதுகாப்பு தொடர்பாக கவனம் செலுத்த வேண்டும். அத்துடன் நேர்காணலுக்கான திகதியையும், நேரத்தையும் பாதிக்கப்பட்டவரே தீர்மானிக்க கூடியதாக சந்தர்ப்பம் வழங்கப்படுமாயின் சூழ்நிலையில் கட்டுப்பாடு குறைந்த தன்மையை உணராது பாதிக்கப்பட்ட நபர் மேலும் பாதிப்படைவதை தவிர்க்கலாம்.

**கவனிக்கவும் :** மனித வியாபாரத்தால் பாதிக்கப்பட்ட நபர் ஏமாற்றப்பட்டு, வலுக்கட்டாயம் பண்ணப்பட்டு பிறரால் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கப்படுவதால், இதில் அதிகாரமுள்ள உத்தியாகத்தர்களும் அடங்குவதால், பிறரால் உதவி வழங்கப்படும் போது அவர்கள் வேண்டா வெறுப்புடன் இருக்கலாம்.

நேர்காணலானது சேவை வழங்கும் அலுவலகம், அல்லது புகலிடம், காவல் நிலையம், குடிவரவு அலுவலகம் அல்லது தடுத்துவைக்கப்படும் ஸ்தானம், வைத்தியசாலை அல்லது மருத்துவ நிலையம் அல்லது குறித்த சட்ட நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான அலுவலகம் என்பவற்றில் இடம்பெறலாம். சூழ்நிலையைப் பொறுத்து மூடப்பட்ட, தனியான இடமொன்று நேர்காணலுக்கு வழங்கப்படுவது உகந்ததாகும். அவ்விடத்தில் பாதிக்கப்பட்ட நபர் ஆறுதல் உணர்வைப் பெற்றுக்கொள்வார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4.2 நேர்காணலுக்கான முன்னேற்பாடுகளை செய்தல்

### ஆயத்தப்படுத்தல்

முன்னேற்பாட்டுடன் மனித வியாபாரத்தால் பாதிக்கப்பட்ட நபரை நேர்காணலுக்கு உட்படுத்துவது மிக முக்கியமானதாகும். நேர்காணலில் ஈடுபடுபவர் ஒழுங்கு முறையில் ஆரம்பம் முதல் இறுதிவரை நேர்காணலை கொண்டுச்செல்ல இது உதவியளிக்கும்.

**முன்னேற்பாட்டில் பின்வரும் விடயங்கள் உள்ளடங்கும்;**

1) நேர்காணலுக்கான சரியான இடத்தையும், நேரத்தையும் தெரிவுசெய்தலும் அதனைப்பற்றி பாதிக்கப்பட்ட நபருக்கு அறிவித்தலும்.
2) ஏனைய வளங்களும் (உதாரணம் - மொழிபெயர்ப்பாளர்கள்) நாற்காலி, மின்விசிறி போன்ற அடிப்படை வசதிகளும் ஒழுங்குப்படுத்தப்பட்டுள்ளமையை உறுதிப்படுத்தல்.
3) பாதிக்கப்பட்ட நபரின் தேவைகள் உடல்/உள தற்போதைய நிலைமைகளை புரிந்துக்கொள்ளுதல்.
4) மிகக்குறைந்தளவான குறுக்கீடுகளை உறுதிப்படுத்திக் கொள்ளுதல்.

**ஆரம்பிக்கும் முன்னர், பின்வருவனவற்றை வினவுங்கள் ..........**

- விபரிக்கப்பட்ட விடயத்தை புரிந்துக்கொண்டனரா?
- தொடர்ந்து நேர்காணலில் ஈடுபட சம்மதமா?
- அவர்களுக்கு விரோதமாக செய்யப்பட்ட குற்றச் செயலை பற்றிய அறிக்கையை அறிவிக்கத் தெரியுமா?
- அவசியமான சட்ட மற்றும் சமூக ஆலோசனைகள், உதவிகள் பற்றி கூறப்பட்டிருத்தல் - சரியான முழுத்தகவல்களையும் பெற்றுள்ளனரா? என்பதை சரி பார்த்தல்.

## 4.3 பாதிப்புக்குள்ளாகக்கூடிய நபரை நேர்காணலுக்கு உட்படுத்தும்போது எதிர்கொள்ளக்கூடிய முக்கிய பிரச்சினைகள்.

- **பாதுகாப்பு நிலைமை** - தனியாள் மற்றும் குடும்ப அங்கத்தவர் அல்லது பிறரின் பாதுகாப்பு.
- **நிலை** - குறித்த நாட்டில் சட்டரீதியான அல்லது சட்டவிரோதமான புலம்பெயர்வாளர் அல்லது பாதிக்கப்பட்டவர் அல்லது வேறொரு நிலையில் இனங்காணப்படுதல்.
- **இரகசியம் பேணப்படுதல்** - பொதுமக்கள் அல்லது பத்திரிகைத்துறையினரால் மானக்கேடு ஏற்படக்கூடும் என்ற பயமும் குடும்பத்தில் ஏற்படக்கூடிய விளைவுகளும்; விசேடமாக பாலியல் ரீதியில் ஏமாற்றப்பட்ட மனித வியாபாரத்தால் பாதிக்கப்பட்டவர்களிடம் இந்நிலைமை அதிகமாக காணப்படும்.
- **பயம்** - மனித வியாபாரிகளால் பழிவாங்கப்படுதல், நீதிமன்ற விசாரணைகளுக்கு செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டால் மனித வியாபாரியின் முன்னிலையில் சாட்சி கூற நேரிடுகின்றமை பற்றிய பயம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- **மின்-அதிர்ச்சி** - துஷ்பிரயோக அனுபவத்துக்கு மறுபடியுமாக உள்ளாகும் நிலைமை.

## 4.4 நேர்காணல் நிலைமைகள்

பாதிக்கப்பட்ட நபர் நேர்காணலின் நோக்கத்தை அறிந்துக்கொள்வது முக்கியமானதாகும். கேள்விகளுக்கு பதிலளிப்பதோ, சில கேள்விகளுக்கு பதிலளிக்காமல் விடுவதோ, நேர்காணலை எவ்விடத்திலாவது நிறுத்திக் கொள்வதோ அவரது உரிமையாகும். பாதிக்கப்பட்ட நபரின் அனுமதியுடனேயே நேர்காணல் இடம்பெற வேண்டும்.

மூடப்பட்ட பேசுவது வெளியே கேட்காத தனியான இடமொன்றில் நேர்காணல் இடம்பெறுவதை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். நேர்காணலானது தடங்களின்றி நடத்தப்பட வேண்டும் "தொந்தரவு செய்ய வேண்டாம்" என்ற அடையாளம் காட்சிப்படுத்தப்பட வேண்டும்.

நேர்காணலின் போது பாதிக்கப்பட்ட நபர், நேர்காணலில் ஈடுபடுபவர்(கள்), உத்தியோகப்பூர்வ மொழிபெயர்ப்பாளர் (தேவையாயின்), திறனுள்ள உதவியாளர் (சட்டத்தரணி, சமூக சேவையாளர் அல்லது உளவியலாளர்) போன்ற அவசியமானவர்கள் மட்டுமே இருக்க அனுமதிக்கப்பட வேண்டும்.

பிரதான காரியாலயத்திலன்றி, நேர்காணலானது வேறொரு நிறுவனத்தில் இடம்பெறுமாயின், நிறுவன அல்லது முகவர் நிலைய அலுவலக உத்தியோகத்தர்கள் இல்லாத வகையில், பாதிக்கப்பட்ட நபருடன் பேசச்கூடியதாக இருக்க வேண்டும். பாதிக்கப்பட்ட நபரின் விசேட வேண்டுகோளின் படி மாத்திரமே பிறரை அனுமதிக்கலாம்.

நேர்காணலில் ஈடுபடுபவர் குற்றம் சுமத்தும் தோரணையில் அல்லது பலவந்தமாக தகவல்களை வெளிக்கொணரும் நிலையில் செயற்படுவதை தவிர்க்க வேண்டும். தனிநபர் கண்ணியத்தோடு நடத்தப்படும் உணர்வை பெற்றுக்கொள்ளும் வகையில் அவருடன் பரஸ்பர நம்பிக்கையை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். அத்தோடு பாதிப்புற்ற பெண்ணொருவரை ஒரு பெண்ணே நேர்காணல் போன்ற கலாச்சார விடயங்களை கருத்தில் கொள்ள வேண்டும். பாதிப்புற்றவர் வெளிநாட்டவராய் இருக்கும் பட்சத்தில் மொழிபெயர்ப்பு தேவை காணப்படின் பாதிப்புற்றவர்களை இனங்காணல் தொடர்பான இலங்கை நியம செயற்படுமுறைகளுக்கு அமைவாக மொழிபெயர்ப்பாளரின் சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கு வெளிவிவகார அமைச்சினதோ சம்பந்தப்பட்ட தூதரகத்தினதோ, இணைத்தூதரகத்தினதோ உதவியை நாட வேண்டும். நியமிக்கப்படும் நேர்காண்பவர் தொழின்மை பண்பு மிக்கவராகவும் அவரது கடமைகளில் பக்கச்சார்பற்றவராகவும் இருக்க வேண்டும்.

**தெளிவுபடுத்தல்**

- உதவி வழங்குவதில் உங்களது பங்கினையும் நேர்காணலின் நோக்கத்தையும் சுருக்கமாக எடுத்துரையுங்கள்.
- சில வினாக்கள் அவர்களது கடந்த காலத்தையும் அவர்கள் கடந்து வந்த செயன்முறையையும் பற்றியதாகும் என்பதை விளக்குங்கள்.
- ஆனால் சில விடயங்களை மறுபடியும் நினைவுபடுத்தும் போது அது குழப்பநிலையையும் துக்கத்தையும் கொண்டு வந்தாலும் நீங்கள் உணர்வு ரீதியில் உதவியளிப்பதை உறுதிப்படுத்துங்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- தேவையான நேரத்தில் இடைவேளை ஒன்றை எடுத்துக்கொள்ள முடியும் என்பதை கூறுங்கள்.
- எந்த நேரத்திலும் வினாக்களைக் கேட்கவோ அல்லது விளக்கத்தை கேட்கவோ முடியும் என்பதை கூறுங்கள்.
- எல்லா விபரங்களும் இரகசியமாக பேணப்படும் என்பது குறித்து உறுதியளியுங்கள்.

**அறிமுகம்**

- உங்களை அறிமுகம் செய்யுங்கள்.
- உங்களது பங்கு, பிரிவு, வெளிநாட்டு பிரதிநிதி அலுவலகம், தூதரகம் பற்றி விபரியுங்கள்.
- அங்கு வருகை தந்துள்ள அனைவரையும் அறிமுகப்படுத்திக் கொள்ளுமாறு கூறுங்கள்.
- வந்துள்ள மக்கள் குறித்து ஏதாவது வினாக்கள் உண்டா என்பதை பாதிக்கப்பட்ட நபரிடம் கேட்டறியுங்கள்.
- பாதுகாப்பையும் இதமான உணர்வையும் அனுபவிக்கின்றனரா என்பதை வினவுங்கள். மலசலகூடம் எங்குள்ளது என்பதை காண்பியுங்கள். சிற்றுண்டிகள் வழங்குங்கள்.
- வலிகள் அசௌகரியங்கள் ஏதேனும் உண்டா? வைத்திய உதவி அவசியமா என்பதை வினவுங்கள்.

**நேர்காணலை நிறைவுக்குக் கொண்டு வருதல்**

- நேர்காணலின் போது பெற்றுக்கொண்ட தகவல்களை சாராம்சமாக்கிக் கொள்ளுங்கள்.
- நேர்காணலில் பெற்ற தகவல்களை மீண்டுமாக கூறுங்கள்.
- பெறப்பட்ட தகவல்கள் பகிரப்படும்போது இரகசியத்தன்மை பேணப்படும் என்பது பற்றி பாதிக்கப்பட்ட நபருக்கு உறுதியளியுங்கள்.
- நேர்காணல் நிறைவடைந்ததும் பாதிக்கப்பட்ட நபரை குடும்ப அங்கத்தவர்கள், புகலிட முகாமையாளர் அல்லது பொருத்தமான நபரிடம் கையளியுங்கள்.
- அவசியமாயின் நேர்காணலுக்கான அடுத்த திகதி, நேரம், இடத்தைப் பற்றி பாதிக்கப்பட்ட நபருக்கு கட்டாயமாக அறிவியுங்கள்.

## பாதிப்புற்ற சிறுவர்களை நேர்காணல்

வயதுவந்தவர்களை நேர்காண்பதற்கான அதே விடயங்களே பிரயோகிக்கப்படும். பாதிப்புற்ற சிறுவர்கள் நலிந்தவர்களாக காணப்படுவர் என்பதால் மேலதிக கவனிப்புக்கள் செய்யப்பட வேண்டும். சிறுவர்கள் அச்சுருத்தல், துஷ்பிரயோகம், நீண்டகால சுரண்டல் என்பவற்றுக்கு முகம்கொடுத்திருந்தால் உண்மைத் தரவுகளை தர்க்க ரீதியில் ஒப்புவிக்க முடியாதவர்களாக காணப்படுவர். இனங்காணப்பட்டு வழக்கு தொடரப்படும் வரை முறைப்பாடு பற்றிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விசாரணைகளின் போது சிறுவர்களுடன் அவர்களின் குடும்பத்தவர் யாரும் உதவிக்கு வராமலிருக்க முடியுமென்பதால்.

நேர்காண தெரிவு செய்யுமிடம் அச்சிறுவர் வாழுமிடமாக அதாவது தனியாரின் இல்லம், தங்குமிடம் அல்லது சிறுவரின் வீடாக இருக்கக்கூடாது. அதே போல் நேர்காணலானது அச்சிறுவர் சுரண்டலுக்கு உற்பட்ட அல்லது கண்டுபிடிக்கப்பட்ட இடமாக இருக்கக்கூடாது. அறைகள் அவர்களுக்கு அந்நியோன்யம் மிக்கதாக அமைக்கப்படல் வேண்டும். உடலியல் ஆபத்தை ஏற்படுத்துபவை, புற தொந்தரவுகள் (தொலைபேசி அழைப்பு, பார்வையாளர்கள்) போன்றவற்றை அப்புறப்படுத்துதல் என அடிப்படை விடயங்களை குறிக்கும். நேர்காணல அறையின் வடிவமைப்பும் தளபாடங்களும் இயன்றவரை வரவேற்புணர்வை ஏற்படுத்த வேண்டும். ஊகிக்கப்பட்ட பாதிப்புற்றவர்களாக அடையாளம் காணப்படும் சந்தர்ப்பத்திலேயே சிறுவர்கள் நேர்காணப்பட வேண்டும். ஒரு பிள்ளையின் அடிப்படை தேவைகள் நிறைவேற்றப்படாதவிடத்து நேர்காணல் இடம்பெறக் கூடாது. அவையாவன அடிப்படை மருத்துவ கவனிப்பு, உணவு, ஓய்வு என்பனவாகும். இவற்றை ஏற்படுத்திக்கொடுப்பது ஒரு பிள்ளையின் உரிமை மட்டுமல்ல அவை உங்களுக்கு தேவையான சிறந்த ஆதாரங்களை பெற்றுத்தரும்.

இயலுமான வரை விசேடமாக பயிற்றப்பட்ட நேர்காணல் நிகழ்த்துவோர் மட்டுமே சிறுவர்களை நேர்காண வேண்டும். இது அச்சிறுவர்களின் விருப்பு, உரிமை, பெற்றுக்கொள்ள வேண்டியவை என்பன பாதுகாக்கப்படுவதை உறுதிப்படுத்தும்.

## 4.5 மனித வியாபாரத்தால் பாதிக்கப்பட்ட நபரை நேர்காணலுக்கு உட்படுத்த செய்யக்கூடியவையும் செய்ய முடியாதவையும்

**நேர்காணலின்போது செய்யக்கூடியவை**

- குறித்த நபர் அனுபவித்த நிலைமைகளைக் குறித்த அவரின் விவரணத்தை செவிமடுங்கள், பல்வேறு கோணங்களில் வினாக்கள் எழுப்ப ஆயத்தமாயிருங்கள். குறித்த நபர் தனது அனுபவத்தை கூறும் போது விளக்கத்தைக் பெற்றுக் கொள்ளுங்கள்.
- இலகுவில் புரிந்துக்கொள்ளக்கூடிய எளிய, நேரடியான வினாக்களை வினவுங்கள்.
- பொருத்தமான இடத்தில் ஆம் / இல்லை என்று பதிலளிக்கக்கூடிய வினாக்களைக் கேட்பதனால், தனது அனுபவத்தை மீண்டுமாக விளக்கமாக கூறுவதை தவிர்த்துக் கொள்ளலாம்.
- வினாக்கள் தொடர்ந்து வினவ அல்லது நேர்காணலை தொடர மனித வியாபாரத்தால் பாதிக்கப்பட்டதை கண்டறியும் குறிகாட்டிகளை ஆதாரமாகக் கொள்ளுங்கள்.
- நேர்காணலின் போது நெகிழ்ச்சித் தன்மை உடையவராகவும், உணர்வு பூர்வமாகவும் பாதிக்கப்பட்ட நபர் பதிலளிக்கும் போது காணப்படுங்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- அந்நபருக்கு வழங்கப்படும் உதவி குறித்த உண்மை நிலையான தகவல்களை வழங்குங்கள்.
- அவருக்கு சுய - தீர்மானம் எடுக்கும் உரிமை உண்டு என்பதை நினைவில் வைத்திருங்கள்.
- பொறுமையை கையாலுங்கள் - நேரமெடுத்து செவிமடுங்கள். குழப்பமடையச் செய்யவோ, முரணான தகவல்களைக் கூறவோ, தடங்கல் ஏற்படுத்தவோ முயற்சிக்க வேண்டாம். பாதிக்கப்பட்ட நபர் உண்மையான தகவல்கள் குறித்த தமது மனநிலையை மாற்றிக் கொள்ளலாம் அல்லது சில வேளைகளில் முக்கிய விபரங்களை மறக்கலாம். அவர்கள் முகங்கொடுத்த அதிர்ச்சியின் காரணமாகவே இந்நிலைமை ஏற்பட்டிருக்கலாம் என்பதைப் புரிந்து கொள்ளுங்கள்.

**நேர்காணலின்போது செய்யக்கூடாதவை**

- மனக்குழப்பம் தமது நிலையை ஆவேசத்துக்குட்படுத்தக்கூடிய அல்லது மறுபடியுமாக தீவிர பயத்துக்குட்படுத்தக்கூடிய வினாக்களை வினவுதல். உதாரணமாக உடல் ரீதியாகவோ அல்லது பாலியல் ரீதியாகவோ பாதிக்கப்பட்ட அனுபவத்தை விபரமாக கூறுமாறு வினவுதல்.
- நேரடியாக தாக்கும் வினாக்களைக் வினாவுதல், உதாரணமாக - நீங்கள் பாதிக்கப்பட்டீர்களா? நீங்கள் தாக்குதலுக்குள்ளாக்கப்பட்டீர்களா?
- அவர்கள் நிலைமைக்கான காரணத்தை குறித்த வினாக்களை வினவுதல் உதாரணமாக உங்கள் கணவர் / குடும்பம் உங்களை பயமுறுத்தியமையாலேயா நீங்கள் இலங்கையை விட்டு வெளியேறினீர்கள்? இவ்வாறான வினாக்களால் நேர்காணலில் ஈடுபடுபவரின் நோக்கத்தை அறிந்துகொள்ள முடியாதிருக்கும்.
- ஒரே கேள்வியை மீண்டும் மீண்டுமாக வினாவுதல் குறித்த நபரை அழுத்தத்துக்குள்ளாக்கி நேர்காணலை விசாரணையை போன்று உணர வைக்கும். இதனால் குழப்பநிலை ஏற்படுவதுடன் நம்பிக்கைத்தன்மை இல்லாமலாகும். வேறுபட்ட கோணங்களில் வினாக்களை வினாவி பதிலைப் பெற்றுக்கொள்ளும் அணுகுமுறையைக் கவனத்திற் கொள்ளவும்.
- நிறைவேற்ற முடியாத நிச்சயமற்ற வாக்குறுதிகள் வழங்குதல்.

➢ பின்னிணைப்பு 1 இலுள்ள மாதிரி படிவத்தை பார்க்க. இப்படிவம் நேர்காணலுக்கு தேவையான வழிகாட்டுதலை பெற உதவியளிக்கும்.

➢ பின்னிணைப்பை 2 பார்க்க. மனித வியாபாரத்தால் பாதிக்கப்பட்ட நபர்களை நேர்முகத்திற்கு உட்படுத்துவது பற்றிய IOM வழிகாட்டல்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5. பாதிக்கப்பட்டவரின் பாதுகாப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**பாட நோக்கங்கள்**

- ✓ பாதிக்கப்பட்ட நபரின் பாதுகாப்புத் தேவையை புரிந்துக்கொள்ளல்.
- ✓ உரிமைகள் தொடர்பான அணுகுமுறை சார்ந்த கொள்கைகள்.
- ✓ பாதிக்கப்பட்ட நபரின் தேவைகளும் அவசியமான விடயங்களும்.
- ✓ ஆரம்ப செயற்பாட்டாளர்களின் கடமைகள்.
- ✓ உடனடி மற்றும் நீண்ட - கால தேவைகள் தொடர்பாக செயலாற்றும் விதம்.
- ✓ நீதிச் செயன்முறையின்போது பாதிக்கப்பட்ட நபரின் பாதுகாப்பு.

## 5.1 பாதிக்கப்பட்டவரின் பாதுகாப்பு தொடர்பான முக்கியத்துவம்

மனித வியாபாரத்தால் பாதிக்கப்பட்ட பெரும்பாலானவர்கள் கடுமையான அல்லது தொடர்ச்சியான உடல் / அல்லது பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்பட்டிருப்பர். மனித வியாபாரத்தால் பாதிக்கப்பட்ட அதிர்ச்சியானது பாதிப்புற்றவரில் ஒரு பெரும் எதிர்மறைத் தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கும். இவ்வதிர்ச்சியானது அவர்கள் முகம்கொடுக்கும் பாகுபாடு, களங்கம் போன்றவற்றால் நிகழும் அபாயம் அத்தோடு குற்றக் குழுக்களின் தொடர் அச்சுறுத்தலுடன் போன்றவற்றுடன் இணைந்து காணப்படுவதால் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு நேரடி உதவி வழங்கும்போது தாம் அனுபவித்த துன்பத்தை தவிர்க்குமாறு அமைய வேண்டுமென்பதில் விசேட கவனம் செலுத்த வேண்டும். எத்தகைய நேரடி உதவி வழங்கலின் போதும், பிரதான நோக்கமாக மீண்டெழுவதை ஊக்குவிக்கும் வகையில் பாதுகாப்பு காணப்பட வேண்டும்.

வேறு நாடுகளைச் சென்றடைந்த பாதிக்கப்பட்ட நபர்களுக்கு அவர்கள் தாய்நாட்டை வந்தடைய உதவிகள் வழங்கப்பட வேண்டும். மேலதிக நேரடி உதவிகளுக்காக பல்வேறு முகவர்களை நாடுவது ஆபத்தான நிலையாக காணப்படுவதால் பாதிக்கப்பட்டவர் மீண்டெழ அவசியமான பின்தொடர் உதவிகள் வழங்கப்படுவது முக்கியமானதாகும்.

## 5.2 பாதிக்கப்பட்டவரின் பாதுகாப்புத் தேவையை புரிந்துக் கொள்ளுதல்

மனித வியாபாரத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடித் - தேவைகளும் நீண்ட காலத் - தேவைகளும் காணப்படும்.

- உடனடித் தேவை (வீடு, உணவு, மருத்துவம், பாதுகாப்பு மற்றும் பாதுகாப்பு உணர்வு, மொழிப் பெயர்ப்பு மற்றும் சட்ட உதவிகள்)
- உள நல உதவி (ஆலோசனைக்கூறல்)
- வருமான உதவி (பணம், வாழ்வாதார உதவி)
- சட்ட நிலைமைகள் (உறுதிப்படுத்தல், குடியகல்தல்)

மனித வியாபாரத்தால் பாதிக்கப்பட்ட நபர்கள் தொடர்பான சில முக்கிய கரிசனைகள் கீழே தரப்பட்டுள்ளன.

- **பாதுகாப்பு** - தனியாள் மற்றும் குடும்ப அங்கத்தவரின் பாதுகாப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- **நிலை** - வெளிநாட்டவர் பாதிப்புற்றவராக காணப்படுமிடத்து, அவர் இருக்கும் நாட்டில் அவரது நிலை.
- **இரகசியத் தன்மை** - குற்ற விசாரணைகளின் போது பாதிப்புற்றவரின் அடையாளம் தெரியப்படுத்தப்படுமெனில் பொதுமக்கள் அல்லது பத்திரிகைத் துறையினரால் மானக்கேடு ஏற்படக்கூடும் என்ற பயமும் குடும்பத்தில் ஏற்படக்கூடிய விளைவுகளும்ளூ விசேடமாக பாலியல் ரீதியிலான மனித வியாபாரத்தால் பாதிக்கப்பட்டவர்களிடம் இந்நிலைமை அதிகமாக காணப்படும்.
- **பயமும் மீள் அதிர்ச்சி நிலையும்** - மனித வியாபாரிகள் அல்லது அவருக்கு உதவியளித்தவரின் முன்னிலையில் அவனோ / அவளோ நீதிமன்ற விசாரணைகளின் எந்த ஒரு கட்டத்திலும் சாட்சியமளிக்க அவசியமில்லை.

## 5.3 உரிமை தொடர்பான அணுகுமுறை

### 5.3.1 மனித உரிமை தொடர்பான பாதுகாப்பும் மதிப்பளித்தலும்.

பாதிக்கப்பட்ட நபரின் மனித உரிமையை மீறிய கடுஞ்செயலாக மனித வியாபாரம் காணப்படுவதுடன் பாதிக்கப்பட்ட நபரின் உரிமைகள் மேலும் மீறுவதற்கு வழிகாட்டுவதாகவும் அமைவதால், எல்லா உதவி மற்றும் பாதுகாப்பு முயற்சிகளும் பாதிக்கப்பட்டவரின் உரிமைகளை மீண்டும் பெற்றுக்கொடுப்பதாகவும் மேலதிக உரிமை மீறல்களை தடுப்பதாகவுமே அமைய வேண்டும். பாதிக்கப்பட்ட நபருக்கு உதவி வழங்கும் நிறுவனங்களானது உதவி வழங்கும் பாதிக்கப்பட்ட நபரின் அடிப்படை மனித உரிமைகள் தொடர்பாக மதிப்பளிக்கும் வகையில் செயற்பட வேண்டும். மனித உரிமைகள் தொடர்பாக பிரதானமாக சர்வதேச மற்றும் பிராந்திய மனித உரிமை கருவிகளான விசேடமாக பெண்கள் மற்றும் பிள்ளைகள் குறித்தான மனித வியாபாரத்தை தடுத்தல், இல்லாமலாக்குதல் மற்றும் தண்டனை வழங்குதல் தொடர்பான ஐக்கிய நாட்டு அரசியற் கொள்கை, சிறுவர் உரிமை தொடர்பான மாநாடு, பெண்களுக்கெதிரான எல்லா வடிவங்களிலுமான வன்முறைகளை நீக்குவதற்கான மாநாடு, மற்றும் OHCHRஇன் மனித உரிமைகள் மற்றும் மனித வியாபாரம் தொடர்பாக விதந்துரைக்கப்பட்ட கொள்கைகள் முதலியன காணப்படுகின்றன. தரப்பட்ட கருவிகளின் கீழ் தமது உரிமைகள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக பாதிக்கப்பட்ட நபர்களுக்கு விழிப்புணர்வை வழங்குவதும் முக்கியமானதாகும்.

**தகவல் தெரிவிக்கப்பட்ட ஒப்புதல்**

பாதிக்கப்பட்ட நபரின் முழுமையானதும் மற்றும் தகவல் தெரிவிக்கப்பட்டதுமான ஒப்புதலின் அடிப்படையிலேயே எல்லா உதவிச் செயன்முறைகளும் கொண்டுச்செல்லப்பட வேண்டும். ஆரம்ப உதவி வழங்கலில் இருந்து மீண்டுமாக பழைய நிலைமையில் சமுதாயத்துக்கு செல்வது வரையிலும் பாதிக்கப்பட்ட நபருடன் செயலாற்றும் போது முன்மொழிவு அல்லது செயற்பாடுகளுக்கு பாதிக்கப்பட்ட நபரின் ஒப்புதலை பெறுமுன்னர், பாதிக்கப்பட்ட நபரால் புரிந்து கொள்ளக்கூடிய வகையில், உதவி வழங்கும் நிறுவனங்கள் மற்றும் உதவி நிறுவனங்களால் பொருத்தமான செயற்பாடுகள், கொள்கைகள், முன்னெடுத்துச் செல்லும் வழிமுறைகள் முதலியன விளக்கப்படுத்தப்பட வேண்டும். கல்வியறிவு பெற்றவராக இருப்பின் செயன்முறையின் சில கட்டங்களில் உதவி வழங்கும்போது எழுத்து மூலமாக தமது ஒப்புதலை பாதிக்கப்பட்டவரால் வழங்கக்கூடியதாக இருக்கும். பாதிக்கப்பட்ட நபரால்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரிந்துக்கொள்ளக்கூடிய மொழியில் அலுவலர்களால் தொடர்பேறப்படுத்த முடியாதிருப்பின், மொழிபெயர்ப்பாளர் ஒருவரின் உதவியுடன் வாய்மூல மற்றும் எழுத்து மூல தொடர்பேறப்படுத்தும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

பாதிக்கப்பட்ட நபர் சிறுவரெனின் பாதுகாவலருடன் தொடர்பு கொண்டு எல்லா செயற்பாட்டு விடயங்கள் தொடர்பாகவும் ஒப்புதல் பெறப்பட வேண்டும். சிறுவர் உரிமை தொடர்பான மாநாட்டின் (CRC) குறிப்பு இல. 12 இன்படி, சிறுவர் தொடர்பான எண்ணங்கள், விருப்பங்கள் தொடர்பாக கவனம் செலுத்தப்பட வேண்டும். தமது எண்ணங்கள், விருப்பங்களை வெளிப்படுத்த அனுமதியளிக்கும் வகையில், சிறுவர்களின் கரிசனை தொடர்பான எல்லா பொருத்தமான தகவல்களும் வழங்கப்பட வேண்டும். உதாரணமாக, அவர்களுக்கு உரித்துடையவைகள், தொடர்பாடல் உள்ளடங்கலான சேவைகள், புகலிட செயன்முறைகள், குடும்ப அங்கத்தவர்களை தேடுதல் மற்றும் தாய்நாட்டு நிலைமைகள் முதலியன {CRC குறிப்புகள் 13, 17 மற்றும் 22(2)}, தங்குமிட வசதிகள், சட்ட பிரதிநிதித்துவம் மற்றும் சிறுவர்களின் கருத்துக்களும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். ஒவ்வொரு பிள்ளையினதும் முதிர்ச்சி மற்றும் புரிந்துணரும் பக்குவம் என்பவற்றின் அடிப்படையில் பொருத்தமான முறையில் தகவல்கள் வழங்கப்பட வேண்டும். நம்பிக்கையான தொடர்பாடல் முக்கியம் என்றபடியால், அவசியமெனின், செயன்முறையின் எல்லாக் கட்டங்களிலும் மொழிபெயர்ப்பாளர் இருப்பதை கட்டாயமாக உறுதிப்படுத்திக் கொள்ளவும்.

**பக்கச்சார்பற்ற தன்மை**

பால், பாலியல் நிலை, வயது, குறைப்பாடு, நிறம், சமூக வகுப்பு, இனம், சமயம், மொழி, அரசியல் நம்பிக்கை அல்லது ஏனைய நிலைகளை கருத்திற் கொள்ளாது பாதிக்கப்பட்ட நபருக்கு பக்கச்சார்பற்ற முறையில் உதவிகள் வழங்கப்பட வேண்டும். உதவி வழங்கும் நிறுவனங்களானது பங்காளி நிறுவனங்கள் மற்றும் ஏனைய நிறுவனங்கள் பாதிக்கப்பட்ட நபர் தொடர்பாக செயலாற்ற வழிப்படுத்தும் போது பக்கச்சார்பற்ற தன்மையுடன் செயலாற்றுவதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

**அந்தரங்கமும் இரகசியம் பேணும் உரிமையும்**

பாதிக்கப்பட்ட நபர் தொடர்பான எல்லா தகவல்களும் தொடர்பாடல்களும் பாதிக்கப்பட்ட நபரின் அந்தரங்கம் மற்றும் இரகசியம் பேணும் உரிமையை கருத்திற்கொண்டே கையாளப்பட வேண்டும். பாதிக்கப்பட்ட நபருடனான ஆரம்ப சந்திப்பில் இருந்து உதவி வழங்கும் செயன்முறையின் இறுதி வரையிலும், பாதிக்கப்பட்ட நபரால் வழங்கப்படும், மனித வியாபாரி தொடர்பானதும் குறித்த விசாரணைகள் தொடர்பானதுமான தகவல்கள் இரகசியமாக பேணப்படும் என்பது தொடர்பில் அலுவலர்கள் உறுதியளிக்க வேண்டும். இரகசியமான தகவல்கள் என்பதில் பின்வருவன உள்ளடங்கும், ஆனால் இது வரையறைக்குட்பட்டதல்லஞ பாதிக்கப்பட்ட நபரால் வழங்கப்படும் தகவல்கள், சுகாதார மற்றும் ஏனைய சேவை நிறுவனங்களால் வழங்கப்படும் தகவல்கள் மற்றும் பாதிக்கப்பட்ட நபரின் சட்ட நிலைமைகள் தொடர்பான தகவல்கள் ஆகும். சேவை வழங்கும் நிறுவனங்களால், பாதிக்கப்பட்ட நபர் தொடர்பாக சேகரிக்கப்படும் தரவுகள் பொறுப்பான அலுவலகர்களால் கையாளப்படுமெனவும், தெரிந்துக் கொள்ள - தேவையான தகவல் எனும் கொள்கையுடன் குறிப்பிட்ட எல்லைக்குள் தேவையான தகவல்கள் மட்டுமே பெறப்படும் மற்றும் பகிரப்படும் எனவும், பாதிக்கப்பட்ட நபருக்கு தகவலளிக்கப்பட்டு ஒப்புதலுடனேயே செயற்படுவர் என்பதையும் உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

IOM ஆனது நிறுவனங்களுக்கு உறுதியான கொள்கையொன்று காணப்படவேண்டுமென பரிந்துரைக்கின்றது. அதாவது பாதிக்கப்பட்ட நபரினதும் ஏனையோரினதும் பாதுகாப்பு தொடர்பான பிரச்சினை ஏற்பட்டாலன்றி மற்றெந்த விதத்திலும் பாதிக்கப்பட்டவரின் முன்னறிவு மற்றும் தகவலளிக்கப்பட்டு பெறப்பட்ட சம்மதத்தை கவனத்திற் கொண்டு அல்லாது எவ்வித தகவல்களும் வெளியிடப்படக்கூடாது என்பதாகும்.

மனித வியாபாரத்தால் பாதிக்கப்பட்டவர்கள் சிறுவர்கள் எனின், சிறுவர் உரிமை தொடர்பான நிர்வாகக்குழுவின் 29-30 பந்திகளில் இல. 6 பொது குறிப்புரையில், அரசுகளும் செயற்பாட்டுக் குழுக்களும் துணையற்ற அல்லது வேறு பிரிக்கப்பட்ட பிள்ளை தொடர்பான தகவல்களின் இரகசியத்தன்மை பாதுகாக்கப்பட வேண்டுமெனவும், இரகசியம் பேணும் உரிமை உள்ளடங்களான சிறுவர் சார்ந்த உரிமைகள் யாவும் சிறுவர் உரிமையை பாதுகாக்கும் விதத்தில் செயலாற்ற வேண்டுமெனவும் குறிப்பிடுகிறது (கட்டுரை 16)

மேலும், பிள்ளை காணப்படும் இடம் தொடர்பான தகவல்கள் மற்றும் பிள்ளையின் பெற்றோரால் பிள்ளையின், பாதுகாப்பு தொடர்பாக வேண்டப்படுமாயின் மாத்திரம் விசா தடுத்து நிறுத்தி வைக்கப்படும் அல்லது பிள்ளையின் சிறப்பான விருப்பத்தின் அடிப்படையில் பாதுகாப்பு பேணப்படும்.

**சுய தீர்மானமெடுத்தலும் பங்கேற்றலும**

பாதிக்கப்பட்டவர்களின் உரிமை மற்றும் தேவைகள் கண்டறியப்பட்ட பின்னர் தமது சொந்த தகவலளிக்கப்பட்ட தெரிவு மற்றும் தீர்மானமெடுக்க வழியேற்படுத்த வேண்டும். சேவை வழங்கும் நிறுவன அலுவலர்கள் அவர்களைப் பற்றிய தீர்மானம் மேற்கொள்ளும் செயன்முறையின் போது அவர்களும் பங்கேற்கும் வகையில் ஊக்கமளிக்க வேண்டும். அலுவலர்கள் பாதிக்கப்பட்ட நபர்களுடன் இணைந்து சுய-மதிப்பை மீள பெற்றுக் கொள்ளவும், தன்னிலைக்கு வரவும், தம்முடைய பொறுப்புக்கள் குறித்த நம்பிக்கைத்தன்மையை பலப்படுத்தவும், தம்முடைய வாழ்வு மற்றும் எதிர்காலம் பற்றிய கட்டுப்பாட்டை மேற்கொள்ளவும் கூடிய வகையில் பெரு முயற்சியுடன் செயலாற்ற வேண்டும். சிறுவர்களின் குறிப்பான உரிமைகள், தேவைகள் தொடர்பாக, தயவு செய்து தகவலளிக்கப்பட்ட ஒப்புதல் என்ற பகுதியை வாசிக்கவும்.

**தனிப்பட்ட ரீதியிலான சிகிச்சை முறையும், ஆதரவும்**

மனித வியாபாரத்தால் பாதிக்கப்பட்ட நபர்கள் பொதுவான பல அனுபவங்கள், சூழ்நிலைகளைப் பற்றி பகிர்ந்துக் கொள்கின்றமையைப் பற்றி புரிந்துக் கொள்கின்ற அதே வேளையில், அலுவலர்கள் பாதிக்கப்பட்ட நபர்களின் தனித்தன்மையை ஏற்றுக்கொள்ள வேண்டும். அவையாவன தனிப்பட்ட, கலாச்சார, பால் மற்றும் வயது வேறுபாடுகள் மற்றும் மனித வியாபார நிலைமைக்கு முன்பும், பின்புமான வேறுபட்ட அனுபவங்கள் முதலியன. எனவே கூடுமானவரையில் தனிப்பட்ட ரீதியான ஆதரவும் உதவியும் வழங்கப்பட வேண்டும். உதவி வழங்கும் செயன்முறையின்போது, அலுவலர்கள் பெரு முயற்சியுடன் மிகப்பொருத்தமான பாதுகாப்பு, உதவி மற்றும் ஆதரவினை தனிப்பட்ட நபரின் தேவை மற்றும் சூழ்நிலையின் அடிப்படையில் பெற்றுக்கொடுக்க முயல வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அனைத்தும் உள்ளடக்கப்பட்ட தொடர்ச்சியான நிலையான ஆதரவு**

வழங்கப்படும் சேவைகள் அனைத்தும் மனித உயிர் மேலானது என்ற அணுகுமுறையுடன் பாதிக்கப்பட்ட நபர் மீண்டெழ உதவி புரிவதாக அமைய வேண்டும், எனவே அவர்களது உடல், உள மற்றும் சமூக நிலைமைகளை அடிப்படையாகக் கொண்ட அனைத்தும் உள்ளடக்கப்பட்ட தொடர்ச்சியான நிலையான ஆதரவு வழங்கப்பட வேண்டும். பொருத்தமான தன்மை மற்றும் தரத்திலான உதவி பாதிக்கப்பட்ட நபர்களுக்கு வழங்கப்பட்டதா என்பதை உறுதிப்படுத்திக் கொள்வதற்காகவும், பாதிக்கப்பட்ட நபரின் தேவைகள் கூடுமானவரையிலும் பூர்த்தி செய்யப்பட்டது என்பதை உறுதிப்படுத்திக் கொள்வதற்காகவும், உதவி வழங்கும் நிறுவனங்கள் ஏனைய அனுபவமிக்க உதவி வழங்குநர்களுடன் இணைந்து கூட்டுறவு ஒப்பந்தங்களை ஏற்படுத்தி இலங்கையில் பாதிக்கப்பட்ட நபர்களை இனங்காணல், பாதுகாத்தல் மற்றும் வழிப்படுத்தல் தொடர்பான நியம நடைமுறை செயற்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு பொருத்தமானதும், அனைத்தும் உள்ளடங்கியதுமான சேவைகளை பாதிக்கப்பட்ட நபர்களுக்கு பெற்றுத்தர வேண்டும்.

**குற்றத்தால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகளுக்கு வழங்கப்படக்கூடிய உதவியும் பாதுகாப்பும்.**

2015 சட்ட இல. 4 இல் மனித வியாபாரம் தொடர்பான குற்றத்தால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகளுக்கு வழங்கப்படக்கூடிய சட்ட ரீதியான உதவிகள், பாதுகாப்பு முறை பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. இச்செயன் முறையின் இலக்காவது, குற்றத்தால் பாதிக்கப்பட்டோரின் உரிமைகளை மதித்து நிலைப்படுத்துவதாகும். பொறிமுறை ஒன்றை வழங்கி பாதிக்கப்பட்டோரின் உரிமைகள் மற்றும் அவர்களுக்கு உரித்துடையவற்றை பற்றி எடுத்துக்கூறவும், பாதுகாக்கவும், நடைமுறைப்படுத்தவும், தேவையான உதவிகள், சேவைகளை பெற்றுத்தரவும், தங்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட குற்றம் தொடர்பாக, மீள் வாழ்வு, நட்டஈடு, திருத்தம், மீள் குடியமர்த்தல் என்பவற்றை பாதிக்கப்பட்டோருக்கு பெற்றுக்கொடுப்பதும் இலக்குகள் ஆகும்.

மேலே குறிப்பிடதற்கமைய பாதிக்கப்பட்டோருக்கு உதவி வழங்கும்போது, சட்டப்படி பாதிக்கப்பட்டவருக்கு உள்ள உரிமைகளாவனளு சமமாக நடத்தப்படல், தனித்தன்மை மற்றும் அந்தரங்கத்தை மதிப்பதும், நீதியுடன் செயலாற்றுதலும் ஆகும். பாதிக்கப்பட்டவர் சிறுவர் எனின், அவன் ; அவளது சிறப்பான விருப்பத்தை மனதிற் கொண்டவாறே செயற்பட வேண்டும். மேலும் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு ஏற்படக்கூடிய பயமுறுத்தல், பழிவாங்குதல், காயங்கள், ஒடுக்கப்படுதல் என்பவற்றிலிருந்து பாதுகாப்பளிக்கப்பட்டு, அவர்களுக்கு எதிரான குற்றத்தினால் ஏற்படக்கூடிய உடல் ரீதியான காயம், பாதிப்பு, குறைபாடு, ஆற்றலின்மை என்பவற்றுக்கு மருத்துவ ரீதியில் சிகிச்சை வழங்கப்பட வேண்டும்.

சட்ட நடவடிக்கைகளுக்காக நிறுவப்பட்ட அதிகார சபையிடமிருந்து ஒதுக்கப்பட்டிருக்கும் கிடைக்கக்கூடிய வளங்களில் இருந்து பாதிக்கப்பட்ட நபருக்கு குறிப்பிட்ட பணத்தொகையை பெற்றுக்கொள்ளும் உரிமையும் காணப்படுகிறது. சட்ட நடைமுறையின் கீழ் தமக்கெதிராக குற்றம் இழைக்கப்பட்டமை காரணமாக ஏற்பட்ட பின்வரும் செலவுகள் உள்ளடங்கலாக அதாவது நீதிமன்ற செயன் முறைகளில் கலந்துக்கொண்டமை, அல்லது அரசினால் கேட்கப்படும் மருத்துவ அறிக்கை, புனர்வாழ்வு மற்றும் வழிக்காட்டற் சேவை தொடர்பான செலவுகள் ஆகும். 'குற்றத்தினால் பாதிக்கப்பட்டோரையும் சாட்சிகளையும் பாதுகாத்தலுடன் தொடர்புடைய தேசிய அதிகார சபை' யானது பாதிக்கப்பட்டோரின் உரிமைகளை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதுகாக்கும் வகையில் உதவியளிக்கும் மற்றும் முன்னேற்பாடுகளைக் கொண்டுள்ளது. மனித உரிமையை பாதுகாக்கும் முகமாக செயற்படும் கடமைகளைக் கருத்திற்கொண்டு சட்ட நடவடிக்கைகளை செயல்படுத்தக் கூடியதாக அமைந்துள்ளது.

### 5.3.2 OHCHR (The office of the United Nations High Commissioner For Human Rights) மனித உரிமைகள் தொடர்பான ஐக்கிய நாடுகள் தாபனத்தின் உயர் ஸ்தானிகர் அலுவலகம்

**பாதுகாப்பு மற்றும் உதவி வழங்கற் கொள்கைகள்**

மனித வியாபார முறையின் எல்லா சூழ்நிலைகளிலும் மனித உரிமை மீறல்கள் இடம்பெறுவதை புரிந்துக்கொண்ட பின்னர் சர்வதேச மனித உரிமைச் சட்டங்களின் கீழ் ஒவ்வொரு அரசும் பாதிக்கப்பட்ட நபரின் உரிமைகளை பாதுகாக்க உடன்பட்டுள்ளது. பின்வரும் கொள்கைகள் எல்லா (அரச மற்றும் அரச சார்பற்ற) நிறுவனங்களும் உரிமையை அடிப்படையாகக் கொண்ட மனித வியாபாரத்தை தடுத்தல் மற்றும் பாதிக்கப்பட்ட நபர்களைப் பாதுகாத்தல் என்ற அணுகுமுறையை விருத்தி செய்யும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது.

- பாதிக்கப்பட்ட நபர்களை தடுத்து நிறுத்தவோ, குற்றஞ் சாட்டவோ, வழக்கு தொடுக்கவோ கூடாது.
- பாதுகாப்பான மற்றும் பொருத்தமான தங்குமிடம் மூலம் பாதிக்கப்பட்ட நபரின் தேவைகள் பூர்த்தி செய்யப்பட வழியேற்படுத்த வேண்டும்.
- கட்டுப்பாடுடன் கூடிய பாதுகாப்பும், ஆதரவும், சட்ட செயன்முறைக்கு பாதிக்கப்பட்ட நபர் வழங்கும் உள்ளடக்கம் மற்றும் விருப்பை அடிப்படையாகக் கொண்டு வழங்கப்படக்கூடாது.
- மனித வியாபாரத்தில் ஈடுபடுத்தியோர் தொடர்பில் சந்தேகப்படுபவர்களுக்கு எதிரான குற்ற, குடியியல் மற்றும் ஏனைய செயன்முறைகள் தொடர்பில் மனித வியாபாரத்தால் பாதிக்கப்பட்ட நபருக்கு சட்டரீதியான மற்றும் ஏனைய உதவிகள் வழங்கப்பட வேண்டும்.
- பாதிக்கப்பட்ட நபரின் விபரங்கள் பகிரங்கப்படுத்தப்படக்கூடாது. அவர்களின் அந்தரங்கத் தன்மைக்கு மதிப்பளிக்க வேண்டும், மனித வியாபாரத்தால் பாதிக்கப்பட்ட நபருக்கு தேவையாக எச்சரிப்புக்கள் ஆரம்பத்திலேயே வழங்கப்பட்டு, சட்ட ரீதியான செயன்முறையில் பாதிக்கப்பட்ட நபரின் அடையாளத்தை பாதுகாப்பதிலுள்ள சிரமங்கள் எடுத்துக்கூறப்படுவதுடன், சட்ட நடைமுறைகள் தொடர்பான உண்மையற்ற எதிர்பார்ப்புகள் வழங்கப்பட்டக்கூடாது.
- அவர்கள் சார்பான தேசியத்துவத்தில் கல்வி பாண்டித்துவம் உள்ள அல்லது அயல்நாட்டு பிரதிநிதித்துவம் தொடர்பானவர்களை பயன்படுத்திக் கொள்வதில் உள்ள உரிமைகள் தொடர்பாக உறுதிப்படுத்திக் கொள்ளவேண்டும்.
- ஆரம்ப சுகாதார பாதுகாப்பு, ஆலோசனை சேவைகளைப் பெற்றுக்கொள்ளுதல் - மனித வியாபாரத்தால் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு அவ்வாறான உதவிகளைப் பெற்றுக் கொள்ள வற்புறுத்தக் கூடாது உதாரணம் : எயிட்ஸ் உள்ளிட்ட நோய் தொடர்பான கட்டாய சோதனைகள் காணப்படுவதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பாதிக்கப்பட்ட நபர் ஈடுபடுத்தப்படும் சட்ட நடவடிக்கைகள் அவர்களது உரிமை, கண்ணியம். ஊடல் அல்லது உள நலனுக்கு ஊறு விளைவிக்காத வகையில் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.
- மனித வியாபாரத்தால் பாதிக்கப்பட்டு திருப்பி அனுப்பப்படும் நபர்களுக்கு அவசியமான உடல் மற்றும் உள சுகாதார உதவிகள், இருப்பிடம், கல்வி மற்றும் தொழில் வாய்ப்புச் சேவைகள் குறித்து உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

**பின்னிணைப்பாக ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் தொடர்பான உயர் ஸ்தானிகரின் அறிக்கையில் முன்வைக்கப்பட்டுள்ளது.** (E/2002/68/ Add 1)

**மனித உரிமைகள் தொடர்பான உயர் ஸ்தானிகர் அலுவலகம் (OHCHR) மனித வியாபாரத்தால் பாதிக்கப்பட்ட நபர்களுக்கான மனித உரிமைகள் தொடர்பாக கொள்கைகள் மற்றும் வழிகாட்டல்களானது பொருளியல் மற்றும் சமூக சபையில்**

**சாராம்சம்; பாதிக்கப்பட்ட நபருடன் செயலாற்றும் போது;**

- **தவிர்க்க வேண்டியது:** ஊகித்தல்.
- **தவிர்க்க வேண்டியது:** கட்டுப்பாடற்ற பத்திரிகைத்துறை வெளிப்படுத்தலை அனுமதிக்க வேண்டாம்.
- **மீள உறுதிப்படுத்த வேண்டியது:** பாதிக்கப்பட்டவரின் பாதுகாப்பு.
- நேர்மையாக நடந்துகொள்ளவும்: ஏமாற்றப்படுவதை பாதிக்கப்பட்டவர்களால் அறிந்து கொள்ள முடியும்.
- **செய்ய வேண்டியது:** கிடைக்கக்கூடிய உதவிச் சேவைகள் பற்றிய விபரங்களைக் கூறுதல்.
- **செய்ய வேண்டியது:** விசாரணையின் முன்னரும் விசாரணையின் பின்னரும் சந்திப்புக்களை ஏற்படுத்துங்கள். காரணம் அவன்;அவள் வாக்குமூலம் அளித்த பின்னர் அபாய நிலைமை அதிகரித்துக் காணப்படும்.
- **குறைந்தளவு வாக்குறுதிகளை வழங்குங்கள்:** ஆனால் அதிக விடயங்களைப் பெற்றுக்கொடுங்கள்.
- **பின்பற்றுங்கள்:** முறையான விசாரணை முறைகள்.
- **அவதானியுங்கள்:** மனித வியாபாரத்தால் பாதிக்கப்பட்ட பெண்களை நேர்காணலுக்கு உட்படுத்துவது தொடர்பான ஒழுக்க வழிகாட்டல்கள்.

பாதிக்கப்பட்ட நபர்களுக்கு உதவி வழங்குவது தாமதிக்கும் போது பாதிக்கப்பட்ட நபர் தொடர்ச்சியாக மோசடிகளுக்கு முகங்கொடுக்க வேண்டிய விளைவுகள் உருவாகலாம். உடனடி மற்றும் ஏனைய உதவிகள் வழங்குவது தோல்வி அடையும்போது அல்லது விசாரணைகளுடன் ஒத்துச்செல்ல மற்றும் / அல்லது அவசியமான உதவிகள் தொடர்புபடுத்தப்படப்படாதபோது பாதிக்கப்பட்ட நபருக்கு ஏற்கனவே செய்யப்பட்ட துன்புறுத்தலானது மேலும் அதிகரிக்கும் நிலைமை உருவாகலாம். பாதிக்கப்பட்ட நபர் தங்கியுள்ள அரசாங்கமானது அவன் ; அவளுக்கு அவசியமான பாதுகாப்பு மற்றும் உதவிகள் வழங்குவது தொடர்பில் பொறுப்புடையதாகும். தமது சட்டரீதியான அதிகார எல்லைக்குள் மனித வியாபாரத்தால் பாதிக்கப்பட்ட நபர் உள்ளாரென (நாட்டிற்குள் / நாடு கடந்து) அரசொன்று அறிய வந்ததும் அவர்களது பொறுப்பு தொடர்பில் செயலாற்றப்பட வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6. பங்களிப்பும் பொறுப்புக்களும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பாட நோக்கங்கள்

மனித வியாபாரத்தால் பாதிக்கப்பட்டவர்களை இனங்காணல், பாதுகாத்தல் மற்றும் பரிந்துரைத்தலில் முக்கிய பங்காற்றும் குற்றத்தைத் தடுப்பவர்களின் பல்வேறு பங்களிப்புகளும் பொறுப்புகளும் பற்றிய புரிந்துணர்வை பங்குபற்றுவோருக்கு வழங்குதல்.

## பங்களிப்பும் பொறுப்புக்களும்

மனித வியாபாரத்தால் பாதிக்கப்பட்டவர்களென இனங்காணப்பட்ட நபர்களை பாதுகாத்து, நலன்புரி சேவைகளை வழங்கி, தேவையான பாதுகாப்பை உறுதிப்படுத்துவது இலங்கை அரசாங்கத்தின் கடமையாகும்.

முக்கிய பங்கு வகிப்பவர்களான சட்ட நடைமுறை, தேசிய, மற்றும் உள்நாட்டு மட்டத்திலுள்ள அரசாங்க அதிகாரங்கள் மற்றும் நிறுவனங்கள் முதலியன மனித வியாபாரத்தால் பாதிக்கப்பட்ட நபர்களை இனங்கண்டு உதவி வழங்குவது தொடர்பாக தமது பங்களிப்பையும் பொறுப்புக்களையும் உணர்ந்துக் கொள்ள வேண்டிய தேவையிலுள்ளனர்.

## காவற்துறையினர் (பொலிஸ்)

மனித வியாபாரத்தால் பாதிப்புக்கு உள்ளாகக்கூடியவர்களுடன் மற்றும் பாதிக்கப்பட்டவர்களென ஊகிக்கப்படுபவர்களுடன் ஆரம்ப தொடர்பேற்படுத்தும் முதன்மை பங்குதாரராக செயல்படுவது சட்டத்தை நடைமுறைப்படுத்துபவர் என்ற ரீதியில் பொலிசாரே ஆவர். ஏனைய குற்றங்கள் தொடர்பான விசாரணைகளின் போது, முறைப்பாடுகள் கிடைக்கும்போது / பொலிஸ் நிலையத்தில் பதிவுகள் மேற்கொள்ளும்போது மற்றும் / அல்லது முன் விசாரணைகளின்போதும் மற்றும் ரோந்து நடவடிக்கைகளின் போதும் மனித வியாபாரம் பற்றிய தகவல்களை பெற்றுக்கொள்ளலாம். அவர்களுடைய முக்கிய பங்களிப்பாவது விசாரணைகளை மேற்கொள்வதும் மனித வியாபாரம் தொடர்பான வழக்குகளை மேற்கொள்ள உதவி செய்வதுமே ஆகும். எனினும் மனித வியாபாரம் தொடர்பாக இனங்கண்டு பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி செய்வதை விட மேலான பங்களிப்பும் பொறுப்புக்களும் பொலிசாருக்கு காணப்படுகின்றன.

மனித வியாபாரத்தால் பாதிக்கப்பட்ட நபர்களை இனங்காணல், பாதுகாத்தல் மற்றும் வழிப்படுத்தல் செயன் முறைகளை நியம நடைமுறை செயற்பாடுகள் (SOP) மூலம் மேற்கொள்ளும் போது, மனித வியாபாரம் என்பது ஏற்றுக்கொள்ளப்பட்டால் காவல்துறையினரால் பின்வரும் படிகள் பின்பற்றப்படும்.

1 மனித வியாபாரத்துக்கு உள்ளாகக்கூடியவர்கள் பற்றிய தகவல்கள் கிடைத்தவுடனேயே, பயிற்சி பெற்ற பொலிஸ் அதிகாரி ஒருவர் நியம மதிப்பீட்டு பத்திரத்தைப் பயன்படுத்தி மதிப்பீடொன்றை மேற்கொள்வார். மதிப்பீடானது மனித வியாபாரத்துக்கு உள்ளாகக்கூடிய நபர்களை குறிகாட்டிகள் மூலம் இனங்காண உதவியளிக்கும். (வயது, பால், மாவட்டம் / பிரதேசம், நாடு கடந்த இடமொன்று இருப்பின், துஷ்பிரயோகம் அல்லது கடும் பயத்துக்கான குறிகாட்டி, மோசடிகளுக்கான சாட்சிகள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

02. நியமிக்கப்பட்ட பொலிஸ் செயன்முறைகளுக்கு அமைய மதிப்பீடு மூலம் பெற்றுக்கொண்ட தகவல்களை உறுதிப்படுத்தி அதற்கேற்ற வகையில் செயற்படும்.

03. கைதுசெய்யப்பட்ட குற்றவாளி(கள்) மற்றும் பாதிக்கப்பட்டவர்(கள்) நீதிபதியின் முன் ஆஜர்படுத்தப்படுவ(ா)ர். மேற்கொண்டு எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கையைப் பற்றி நீதிபதி தீர்மானிப்பார். சந்தேக நபர்கள் பிணை வழங்கப்படும் வரையிலும் சிறையிலடைக்கப்படுவார்கள்.

04. ஆரம்ப மதிப்பீட்டு நேர்காணலானது பயிற்சிபெற்ற அதிகாரியால் நடத்தப்பட்டு (தேவையாயின் பெண்) பாதிக்கப்பட்டவரினதும் / அல்லது குடும்ப அங்கத்தவர்களினதும் உடல் ரீதியான பாதுகாப்பு மற்றும் பாதிக்கப்பட்டவரின் பாதுகாப்பு மற்றும் தேவைகள் குறித்து தீர்மானிக்கப்படும்.

05. பாதிக்கப்பட்டவரின் தேவைகளான மருத்துவம், புகலிடம், உணவு மற்றும் உடைகள் முதலியன ஏனைய உதவி வழங்குநர்களின் உதவியுடன் அதாவது அரச சார்பற்ற நிறுவனங்கள் உள்ளடங்கலாக பெற்றுக்கொடுக்கப்படும்.

06. பாதிக்கப்பட்டவர்களில் உள்நாட்டவர் அல்லது வெளிநாட்டவர் மற்றும் சிறு பிள்ளை என்பதைப் பொறுத்து தேவைகள் வேறுபட்டவையாக காணப்படுவதால் அத்தேவைகள் அவதானத்துடன் கையாளப்பட வேண்டும்.

07. பாதிக்கப்பட்டவர் வெளியு'ரைச் சேர்ந்தவர் எனின், காவல்துறையினரால் வெளிநாட்டு விவகார அமைச்சு மற்றும் பொருத்தமான பிரதிநிதி அல்லது தூ தரகம் மூலம் மொழிபெயர்ப்பாளர் பெற்றுக்கொடுக்கப்பட வேண்டும்.

08. காவல்துறையால் பொருத்தமான நீதிமன்றம் மூலம் அறிவுறுத்தல் / கட்டளைகளை, பாதிக்கப்பட்ட நபரை அரசாங்க புகலிடம் ஒன்றுக்கு அல்லது அரச சார்பற்ற பாதுகாப்பான புகலிடம் ஒன்றுக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கு முன்னர் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும். எந்த சூழ்நிலையிலும் பாதிக்கப்பட்ட நபர்களை பொலிஸ் நிலையம் அல்லது புலம்பெயர்வு நிறுவனங்களில் தடுத்து நிறுத்தி வைக்க கூடாது.

## குடிவரவு அதிகார சபை

சட்ட விரோத செயலுக்கான சட்டத்தொகுப்பாக, மனித வியாபாரம் குறித்த ஆரம்ப விசாரணைகள் பொலிசாரால் மேற்கொள்ளப்படும். எனினும் குற்றத்தை தடுத்தல் தொடர்பாக செயற்படும் முக்கியத்தவர்களான குடிவரவு அதிகார சபைக்கும் பாதிக்கப்பட்ட நபரை இனங்காண்பதில் மிக முக்கிய பங்களிப்புண்டு.

1 குடிவரவு அதிகாரசபை அதிகாரி ஒருவர் இலங்கைக்கு / இலங்கையிலிருந்து குடிவந்த அல்லது குடியேறிய நபரொருவர் மனித வியாபாரம் அல்லது ஆட்கடத்தலில் ஈடுபடுபவராக அல்லது உட்படுபவராக இருக்கலாம். என சந்தேகப்படுவாரெனின், அந்நபரை உடனடியாக சிரேஷ்ட பதவியிலுள்ள அதிகாரமுள்ள அலுவலகர் ஒருவரிடம் மேலதிக தகவல்கள் மற்றும் இரண்டாந்தர மதிப்பீடுகளை மேற்கொள்ள வழிப்படுத்த வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. சிரேஷ்ட அதிகாரமுள்ள உத்தியோகத்தரால் குறித்த நபரின் பங்களிப்பு மனித வியாபாரம் தொடர்பானதாக காணப்படுகிறது என சந்தேகத்துக்குட்பட்டால், உடனடியாக பொலிஸ் விசாரணைப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டு மேலதிக விசாரணைகள் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

3. நாட்டினுள் இருக்கும் முறையற்ற குடிவரவுகள் தொடர்பான பரிசோதனை அல்லது மதிப்பீட்டின் விளைவாக மனித வியாபாரத்துக்குட்பட்ட நபரை குடிவரவு அதிகார சபை அலுவலகரால் அறிந்துக் கொள்ள முடியுமாக இருக்கலாம். முறையற்ற குடிவரவில் மனித வியாபாரத்துக்குட்படக்கூடிய ஆற்றலுள்ளவர்களை இனங்கண்டுக்கொள்ள ஆரம்ப மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டு உடனடியாக உதவிகள் பெற்றுக்கொடுக்கப்படுவது அவசியமாகும்.

4. ஆரம்ப மதிப்பீடுகளின் போது மனித வியாபாரத்துக்கு உட்படக்கூடியவர்களை தெரிவுக்காட்டிகள் மூலம் கண்டறிந்த பின்னர் எந்த சூழ்நிலைகள் காரணமாகவும் அவன் / அவள் குடிவரவு தடுப்பு நிலையத்தில் தடுத்து வைக்கப்படாமல், அரச புகலிடம் அல்லது கிடைக்கக்கூடிய ஏனைய புகலிடம் ஒன்றில் அவசியத்தைப் பொறுத்து தங்க வைக்கப்பட வேண்டும்.

## இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் (SLBFE)

உதவி நாடும் நிலையிலுள்ள புலம்பெயர்ந்த தொழிலாளர் மற்றும் / அல்லது அவரது குடும்ப அங்கத்தவர்கள் உதவி நாடும் முதல் நிறுவனமாக பெரும்பாலும் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகமே காணப்படுகிறது. (ளுடுடீகுநு) இதில் இலங்கையின் அனைத்து கிளைகளிலும் உள்ள அலுவலர்களும், இலங்கை வெளிநாட்டு தூதுக்குழுவும் உள்ளடங்கும்.

வெளியூரில் தொழில் புரியும் அல்லது இலங்கையில் தொழிலுக்கென ஆட்சேர்க்கப்பட்ட நபரால் அல்லது நபர் சார்பாக முறைப்பாட்டை பெற்றுக்கொள்ளும் முக்கிய நிர்வாக அலகாக SLBFE காணப்படுகிறது. நிபந்தனையுடனான ஒழுங்கு முறைகளின்படி SLBFE அலுவலர், தொழில் தருநரால் நியமிக்கப்பட்ட தொழிலாளர் தொடர்பான விதிமுறைகள் பின்பற்றப்படவில்லையா அல்லது புலம்பெயர்ந்து நபரை தொழிலுக்கென உட்சேர்த்த அங்கீகாரம் பெற்ற முகவர் நிலையமானது அவன் / அவளுக்குரிய ஒப்பந்தத்தை மீறி அவசியமான படிமுறைகளை எடுக்கத் தவறியுள்ளதா? தொழிலாளர் தொடர்பான விதிமுறைகள் தொழில் தருநரால் பின்பற்றப்பட்டுள்ளதா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

எனினும், முறைப்பாடு தொடர்பான விசாரணைகளின் போது SLBFE அலுவலரால் மனித வியாபாரம் தொடர்பான முறைப்பாட்டை உறுதிப்படுத்திக்கொள்ள மதிப்பீடு மேற்கொள்வது அவசியமானதாகும்.

பாதிக்கப்பட்டவர்களை இனம்காண்பது தொடர்பாக புலம்பெயர்ந்த பணியாளர் குடும்ப அங்கத்தவர்களால் கொண்டுவரப்படும் முறைப்பாடு அல்லது மனக்குறைகளுக்கு செவிமடுப்பதும் பதிவுசெய்வதுமே, பொருத்தமான அலுவலரால் எடுக்கப்படும் மிகச் சிக்கலான படிமுறையாகும்.

SLBFE அலுவலகர் அல்லது ஊழியர் நலன்புரி உத்தியோகத்தரால் முறைப்பாடுகளை பதிவு செய்யும் இரு சந்தர்ப்பங்களின் போதும், புலம்பெயர்ந்த பணியாளர் மனித வியாபாரத்தால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதிக்கப்பட்டுள்ளாரா என்பதை நிர்ணயிக்குமுகமாக சுருக்கமான மதிப்பீடொன்றை மேற்கொள்ள முடியும். பாதிக்கப்பட்டவர்களை இனங்காணுதல் தொடர்பாக முன்னைய அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சில குறிகாட்டிகள் இந்த நிர்ணயிப்பில் உதவியாக அமையும். குறிகாட்டிகளான - சம்பளம் வழங்கப்படாமை, உடல் மற்றும் உளரீதியான துன்புறுத்தல்கள், போலி ஆவணங்கள், சுற்றுலா வீசா மூலமாக ஒரு நாட்டினுள் பிரவேசித்தல் போன்றவற்றில் அலுவலர்கள் எச்சரிப்புடனிருந்து, மனித வியாபாரத்துக்குட்படக்கூடிய நிலை காணப்படுகின்றதா என்பதை நிர்ணயிக்கும் வகையில் மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

தொடர்பேற்படுத்திய முதல் நிலையில் பதிவு செய்யப்பட்ட தகவல்களை ஆதாரமாகக் கொண்டே முறைப்பாட்டின் வகையை தீர்மானிக்க முடிவதோடு, செயன்முறையின் அடுத்த படிகளையும் கொண்டுச்செல்ல முடியுமாக இருக்கும். எனவே மனித வியாபாரம் தொடர்பான சூழ்நிலையை அறிந்து இனங்காணக்கூடிய பயிற்றப்பட்ட அலுவலகர்கள் இருப்பது மிக முக்கியமானதாகும்.

SLBFE அலுவலகர்கள் தமது சொந்த பொலிஸ் பிரிவு மற்றும் / அல்லது ஏனைய பொலிஸ் பிரிவுகளுடன் இணைந்து மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு மனித வியாபாரத்தால் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு உதவி வழங்குவதில் செயற்படுவர். மேலும், புதிதாக நிலைநிறுத்தப்பட்டுள்ள SLBFEயின் மனித வியாபார தடுப்புப் பிரிவின் உதவியை பெற்றுக்கொள்ள பாதிக்கப்பட்டவர்களை வழிப்படுத்த முடியும். அதன் மூலமாக புகலிடம், மருத்துவம், ஆலோசனைக்கூறல் முதலிய உதவிகள் வழங்கப்படும்.

## தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை

பாதிக்கப்பட்டவர் சிறுவர் போன்ற தோற்றத்துடன் இருப்பாரெனில், (18 வயதுக்கு கீழ்ப்பட்டவர்) அவன் / அவள் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைக்கு அல்லது சிறுவர் மற்றும் பெண்களுக்கான பொலிஸ் திணைக்களத்துக்கு வழிப்படுத்தப்பட வேண்டும். மருத்துவ பரிசோதனை பாதிக்கப்பட்டவரின் வயதை நிர்ணயிக்க உதவியாக அமையும் வயதைப் பற்றிய சந்தேகம் இருப்பின், பாதிக்கப்பட்டவர் சிறுவரென ஊகிக்கப்பட வேண்டும். சிறுவர் மற்றும் வளர்ந்தோர் தொடர்பான எல்லா விடயங்களிலும் (வயதை அறிந்த அல்லது அறியாதவர்கள் மற்றும் முறைப்பாட்டை முன்வைப்பவர்கள்) யாவற்றையும் உள்ளடக்கிய மருத்துவ பரிசோதனை ஒன்றுக்கு உட்படுத்தவேண்டும். ஆராய்தல், அறிக்கை ஆவணப்படுத்தல் முதலியன நீதித்துறை மருத்துவ அலுவலகரால் (JMO) முன்வைக்கப்பட வேண்டும்.

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரி ஒருவரால் ஆரம்ப மதிப்பீடுகள் மூலம் பாதிக்கப்பட்ட சிறுவர் இனங்காணப்பட்டவுடன் உடனடியாக, பிள்ளையின் உடனடித் தேவைகள் இனங்காணப்பட்டு பொருத்தமான உதவிகளுக்கு வழியேற்படுத்தலாம். பெற்றோர் அல்லது பாதுகாவலருக்கு அறிவிக்கப்பட வேண்டும். அறிவிக்குமுன்னர் அனுமதி கேட்டுக்கொள்ளப்படவும் அவசியமானதா என்பதும் கண்டறியப்பட வேண்டும். ஏனெனில் சில சந்தர்ப்பங்களில் மனித வியாபார குற்றத்துக்கு அவர்களும் உடந்தையாக இருந்து பாதிக்கப்பட்ட பிள்ளையை பயமுறுத்தலாம். எல்லா வேளைகளிலும் பிள்ளையின் சிறப்பான விருப்பம் கவனத்திற் கொள்ளப்பட வேண்டும்.

மனித வியாபாரத்தை இனங்காண்பதில் வேறு பல முக்கியஸ்தர்களும் முக்கிய பங்காற்றலாம். ஆரம்ப தகவலே குற்றத்தை கண்டறிந்து பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவியளிக்க முதல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படியாக அமையும். மனித வியாபாரத்தால் பாதிக்கப்பட்ட நபர்களை இனங்காணவும் சிறப்பான உதவி வழங்கவும், குற்றத்தை ஒழிப்பதில் ஈடுபடும் நிறுவனங்களும் அதிலுள்ள பொருத்தமான அதிகாரிகளும், அரச சார்பற்ற நிறுவனங்கள் உள்ளடங்கலாக பயிற்சி பெற்றவர்களாக இருக்க வேண்டியது மிக முக்கியமாகும்.

**மனித வியாபார குற்றம் தொடர்பான ஆரம்ப தகவல்களை பெற்றுக்கொள்ளக்கூடிய தனிநபர்கள் / நிறுவனங்களுக்கான உதாரணங்கள் பின்வருமாறு;**

- காவற்துறை (வெளியூரில் மனித வியாபாரத்தால் பாதிக்கப்பட்ட ஆண்கள் / பெண்களுக்கான குற்றவியல் விசாரணை திணைக்களம் / பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கான மகளிர் மற்றும் சிறுவர் திணைக்களம்)
- வெளிநாட்டு பணியகத்துக்கான இலங்கைத் திணைக்களம் (SLBFE - மனித வியாபார தடுப்பு பிரிவு, ஒப்புரவாக்கற் பிரிவு, விசேட, விசாரணைப் பிரிவு)
  சட்ட ரீதியில் புலம்பெயர்ந்தவர்கள் வெளியு'ரில் ஏமாற்றப்படும் நிலை ஏற்படும்போது.
- குடிவரவு, குடியகல்வுத் திணைக்களம் (விசாரணைப் பிரிவு).
- தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிபார சபை (NCPA - பாதிக்கப்பட்ட சிறுவர்க்கான விசேட பொலிஸ் விசாரணைப் பிரிவு).
- தூதரகங்களும் வெளிநாட்டு பிரிதிநிதிகள் அலுவலங்களும்.
- உதவியகங்கள் (பொலிஸ் / SLBFE / NCPA / IOM நிறுவனங்களால் இயக்கப்படுபவை).
- உதவியகம் (மகளிர் விவகார அமைச்சினால் இயக்கப்படும் இலங்கை பெண்கள் திணைக்களம்).
- சர்வதேச நிறுவனங்கள் (உதாரணம் IOM).
- அரச சார்பற்ற நிறுவனங்கள் (இலங்கை மற்றும் வெளியூர் நிறுவனங்கள்).
- பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி சேவைகள் வழங்கும் ஏனைய நிறுவனங்கள் (பாதிக்கப்பட்டவர் வளர்ந்தோர் எனின் அவரின் ஒத்துழைப்புடன் ஏற்றுக்கொள்ளப்பட்ட உடன்படிக்கையொன்று பொருத்தமான செயற்பாட்டிற்கு காணப்படுமெனின், பொருத்தமான சட்ட நடைமுறை முகவருக்கு அறிவிக்கப்படும்).
- மருத்துவ அதிகாரிகளும் வைத்தியசாலை உத்தியோகத்தர்களும்.
- பொது மக்கள்.

**அலுவலகர் / ஊழியர் ஒருவர் மனித வியாபரத்துக்கு உட்படக்கூடியவரை இனங்காணக்கூடிய பயிற்சியைப் பெற்றவுடன் பின்வரும் உதவிகளை வழங்கக்கூடியதாக இருக்கும்.**

**மனித வியாபாரத்துக்குட்படாதவாறு மக்களைத் தடுக்கலாம்;** மனித வியாபாரத்தால் பாதிக்கப்படக்கூடிய ஒருவரை உதவி வேண்டி முன்வைக்கப்பட்ட விண்ணப்பம், குடும்பத்தினர் / நண்பர்கள் மூலம் பெறப்பட்ட தகவல் இனங்காணல்.

**மனித வியாபாரத்தால் பாதிக்கப்பட்ட நபர்களை பாதுகாத்தல்;** பாதிக்கப்பட்ட நபருக்கு மொழிப் பெயர்ப்பதில், பிரயாண ஆவணங்கள் தொடர்பில் உதவி வழங்குதல், புகலிடம், மருத்துவ தேவை, உளரீதியான சேவைகளையும் சட்ட ரீதியான உதவிகளையும் வழங்குதல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதிக்கப்பட்ட நபருடன் செயலாற்றும் அல்லது கண்டறிய நேரிடும் அலுவலகர்கள் விழிப்புடனிருந்து அவசியமான நிறுவனங்கள், ஒழுங்கமைப்புகள் குறித்த தகவல்களை தம்வசம் வைத்திருந்து பாதிக்கப்பட்டவர்களுக்கு அதன் மூலம் உதவி கிடைக்க வழி வகுக்க வேண்டும். பாதிக்கப்பட்ட நபருக்கு அவசியமான தேவைகளான உள மற்றும் சட்ட உதவிகளை உடனடியாக வழங்க வேண்டியது மிக முக்கியமானதாகும். இலங்கை அரசாங்கத்தின் இனங்காணல், பாதுகாப்பு மற்றும் உதவி வழங்குவதற்கு நியமிக்கப்பட்ட நடைமுறை செயற்பாடுகள் (SOP) மூலம் உதவிச் சேவைகள் வழங்க அவசியமான மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

**குற்றத்தில் ஈடுபட்ட நபர்களுக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தல்;** தேவையான தகவல்களைப் பகிர்ந்துக் கொள்வதுடன், சட்ட நடைமுறை நிறுவனங்கள் தொடர்பாக பாதிக்கப்பட்டவரின் தகவலளிக்கப்பட்ட சம்மதம் பெற்றுக்கொள்ளப்பட்டிருப்பின் குற்றவியல் நடவடிக்கைகளுக்கு உதவி வழங்கலாம்.

பாதிக்கப்பட்ட நபர், குடும்பம் அல்லது நண்பர்களினால் வழங்கப்படும் தகவல்கள் பாதிக்கப்பட்ட நபரை காப்பாற்ற மிக முக்கியமானதாக அமையும். இத்தகவல்களே மனித வியாபாரத்திலீடுபட்ட நபர்களை இனங்கண்டு விசாரணைகளை முன்னெடுத்துச் செல்லவும் வழியமைக்கும்.

பொலிசுக்கு தகவல் வழங்க கால தாமதம் ஏற்படும்போது, மனித வியாபாரத்திலீடுபட்டவர்களின் சரியான இடத்தை நிர்ணயிக்கவும் உதவி வழங்கும் சான்றுகளைப் பாதுகாப்பதிலும் பிரச்சினைகள் ஏற்படும்.

எல்லா முறைப்பாடுகளும் மனித வியாபாரம் குறித்தானதாக அமைவதில்லை. எனவே முறைப்பாட்டையும், மனக்குறையையும் பதிவு செய்யும் மற்றும் செயல்படுத்தும் அதிகாரிகள் மனித வியாபாரம் தொடர்பான தெரிவுக்காட்டிகளைப் புரிந்துக்கொண்டு பாதிக்கப்பட்ட நபர்களை இனங்காண வேண்டும். இனங்காண்பதானது பாதிக்கப்பட்ட நபருக்கு உதவியளிப்பதாக மட்டும் அமையாது, குற்றச்செயலில் ஈடுபட்டவர்கள் தொடர்பான குற்றவியல் நடவடிக்கைகளுக்கும், அதற்கொத்த மனித வியாபார சம்பவங்கள் இடம்பெறுவதை தடுக்கவும் உதவியாக அமையும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடய ஆய்வுகள்

## விடய ஆய்வு - 1

26 வயதுடைய திலினி ஐந்து பெண்களைக் கொண்ட மிக வறுமையான குடும்பத்தைச் சேர்ந்தவள். அவளது தந்தை ஒரு குடிகாரர் என்பதோடு அவளது தாயை தினமும் சரீர ரீதியில் துன்புறுத்துபவர். தொடர்ச்சியான துன்புறுத்தல்களைத் தாங்க முடியாத தாய், தந்தையையும் பிள்ளைகளையும் விட்டுவிட்டு வேறொரு மனிதனுடன் வாழச்சென்றுவிட்டாள். திலினியின் தந்தை பிள்ளைகளை சிறுவர் நிறுவனமொன்றில் தன்னால் பராமரிக்க முடியாதென ஒப்படைத்துவிட்டார். சில நாட்களின் பின்னர் திலினி இந்நிறுவனத்திலிருந்து தப்பிச்செல்ல முயற்சித்து பொலிசாரிடம் அகப்பட்டுக்கொண்டாள். திரும்பவும் தாயிடம் ஒப்படைக்கப்பட்டாள். பின் திலினி ஆடைத்தொழிற்சாலை ஒன்றில் வேலையொன்றைத் தேடிக்கொண்டதோடு ஓரிளைஞனோடு உறவை வளர்த்துக்கொண்டு அவனுடன் வாழச்சென்றுவிட்டாள். மூன்று மாதங்களின் பின் அவ்விளைஞன் விலகிச் சென்றுவிட திலினி அவனை பல கிழமைகளாகத் தேடித்திரிந்த போதும் கூட கண்டுபிடிக்க முடியவில்லை. இக்காலகட்டத்தில் திலினிக்கு அனோமா என்ற பெண்ணுடன் சிநேகம் ஏற்பட்டது. அவள் திலினிக்கு சிங்கப்பூரில் இலத்திரனியல் நிறுவனமொன்றில் விற்பனைப்பணியாளராக வேலையொன்றைப் பெற்றுத்தருவதாக வாக்களித்தாள். திலினியும் சம்மதித்தாள். அனோமாவுடனும் அனோமா தனது கணவனென அறிமுகப்படுத்திய நபருடனும் திலினி சிங்கப்பூருக்கு பயணப்பட்டாள்.

சிங்கப்பூரில் ஹோட்டலொன்றில் அவளுக்கு அறையொன்றும் அவள் அணிந்து பழக்கப்பட்டிராத உடைகளும் வழங்கப்பட்டன. அனோமா அவற்றை அணிந்துக்கொண்டு அறையிலிருந்து வெளியே வருமாறு திலினியை வற்புறுத்தினாள். திலினி வெறுப்புடன் சம்மதித்து வெளியே வந்த போது அங்கிருந்த ஒரு மனிதன் எவ்வளவு? என்று கேட்க அவளுக்குப் புரியாமல் அனோமாவைப் பார்த்த போது அம்மனிதன் திலினியை அறையினுள் தள்ளிவிட்டு, பாலியல் உறவிலீடுபடுமாறு வற்புறுத்தினான். அதன் பின்னரே தன்னை விபச்சாரத்துக்கென அனோமா விற்றுவிட்டமையை திலினி உணர்ந்து கொண்டாள். அநேக முறை திலினி தன்னால் இங்கிருக்க முடியாது என அனோமாவுடன் சண்டையிட்டாலும் கூட, அவள் திலினியின் கடவுச்சீட்டு தன்னிடம் இருப்பதால் தான் கூறுபவற்றை செய்தே ஆக வேண்டும் என கூறிவிட்டாள். திலினி ஒரு நாளில் 10 ஆண்களுடன் விபச்சாரத்தில் ஈடுபடவேண்டிய சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டாள். இறுதியாக ஒரு மாதத்தின் பின்னர் திலினி இலங்கைக்குத் திரும்பிச்செல்ல அனுமதிக்கப்பட்டாள். அவள் திரும்பிச்செல்லும் போது அவளுக்கு பணமும், நகைகளும் வழங்கப்பட்டன.

## விடய ஆய்வு - 2

வடமேல் மாகாணத்தைச் சேர்ந்த 30 வயதுடைய சுவர்ணலதா ஆடைத் தொழிற்சாலை ஒன்றில் வேலை செய்பவர். குடும்ப பொருளாதார சிக்கல்களை கருத்திற்கொண்டு புலம்பெயர்ந்து தொழில் செய்ய தீர்மானித்தாள். அவள் குவைத் நாட்டிற்கு வீட்டுப்பணிப்பெண்ணாக வேலைக்குச் சென்று மூன்று வருடங்களில் திரும்பி வந்தாள். மூன்று வருடங்களில் அவள் சம்பாதித்த பணமானது குடும்பத்துக்கு பெரிய அளவில் உதவியாக இருந்தது. குவைத்திலிருந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்து சில மாதங்களின் பின் மீண்டும் புலம்பெயர தீர்மானித்தாள். இம்முறை தொழிலைப் பெற்றுத்தர வெளிநாட்டு முகவரால் ரூபா 24,000/= கேட்கப்பட்டது. அவளிடம் அவ்வளவு பணம் இருக்கவில்லை என்றபடியால் தனது மாதாந்த சம்பளத்தில் இருந்து அத்தொகையை கழித்துக்கொள்ளுமாறு வெளிநாட்டு முகவரிடம் உடன்பட்டாள். பிரயாணப்படும் நாளில் விமான நிலையத்தில் வைத்தே தான் கட்டார் செல்ல முகவரிடம் கேட்டிருந்த போதும் இப்போது ஜோர்தானுக்கு அனுப்பப்படுகின்றமை பற்றி அறிந்துக்கொண்டாள். அந்த நேரத்தில் காலதாமதம் காரணமாக அவளால் எதுவுமே செய்து கொள்ள முடியவில்லை. ஜோர்தானைச் சென்றடைந்ததும் அங்குள்ள முகவரால் வெளிநாட்டு முகவர் கட்டிடத்தில் வேலைதருநர் வரும்வரையிலும் அடைத்து வைக்கப்பட்டாள். வேலைதருநர் ஒருவர் இரு நாட்களின் பின் வந்து நான்கு மாடி வீட்டிற்கு அழைத்துச் சென்றார். முழு வீட்டையும் தினமும் சுத்தம் செய்து அவர்களுடைய 6 பிள்ளைகளையும் கவனித்துக் கொள்ளவேண்டியது அவளது நாளாந்த கடமையாக இருந்தது. தினமும் காலை 4 மணி முதல் அடுத்த நாள் காலை 2 மணி வரையிலும் வேலை செய்ய நேரிட்டது. இரு மணித்தியாலங்களே உறங்க முடிந்ததோடு மிகவும் குறைவாகவே உணவும் வழங்கப்பட்டது.

ஒரு நாள் அவள் தனியாக வீட்டைச் சுத்தம் பண்ணிக் கொண்டிருந்த போது, அவள் இனம்கண்ட வகையில் அவளது எசமானின் இரு நண்பர்கள் வீட்டினுள் வந்து அவளை கற்பழித்தனர். அவள் வீட்டினுள் அடைக்கப்பட்டு தனியாக இருந்தமையால் உதவி கேட்கவோ, தப்பிக்கவோ முடியவில்லை. எனவே எசமான் வரும்வரையிலும் காத்திருந்து அவருக்கு அறிவித்தாள். அவரால் பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டதோடு இலங்கை வெளிநாட்டு தூதரகத்தில் ஒப்படைக்கப்பட வேண்டுமென சிபாரிசு செய்யப்பட்டது. எனினும் எசமான் அவளை முகவர் நிலையத்துக்கு அழைத்துச்சென்றார். அங்கு அவளை அடைத்து வைத்து அடித்து துன்புறுத்தினர். மீண்டும் இலங்கைக்கு செல்லவேண்டுமெனின் முகவர் நிலையத்துக்கு அமெரிக்க டொலர்கள் 2000 வரையிலும் செலுத்துமாறு வேண்டப்பட்டாள்.

சுவர்ணலதாவால் குறித்த பணத்தை வழங்க முடியாமையால், வேறொரு தொழில்தருநரிடம் ஒப்படைக்கப்பட்டாள். இந்த வீட்டிலும் அவளுக்கு பாரிய வேலைப்பளு காணப்பட்டதுடன் அடிக்கடி சுகவீனமுற்றாள். எனவே மீண்டும் முகவரிடம் ஒப்படைக்கப்பட்டாள். இம்முறை சுவர்ணலதா தான் கர்ப்பிணியாக இருப்பதை உணர்ந்து கொண்டாள். சுவர்ணலதா ஒருவாறு இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியக அலுவலர் ஒருவருடன் தொடர்பை ஏற்படுத்திக்கொண்டதுடன், சுவர்ணலதாவின் நிலையைக் கவனிக்குமாறு அவ்வலுவலரால் முகவர் நிலையத்துக்கு அறிவிக்கப்பட்டது. முகவர் நிலையத்தால் அவள் கர்ப்பிணி என்பது உறுதிப்படுத்தப்பட்டதுடன், இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்துக்கு அவள் ஒப்படைக்கப்பட்டு இலங்கைக்கு திரும்பிச்செல்ல அனுமதிக்கப்பட்டாள். இலங்கையை வந்தடைந்ததும் குழந்தையை தத்தெடுக்க அனுமதிக்குமாறு ஆலோசனை வழங்கப்பட்டாலும் அவள் குழந்தையை தானே வைத்திருக்க தீர்மானித்ததுடன் தன் கிராமத்துக்கு திரும்பிச் சென்றாள். கிராமத்தவர்களால் அவள் ஒதுக்கிவைக்கப்பட்டாள். ஆனாலும் தனது தாயுடனும், சகோதரியுடனும் தொடர்ந்து வாழ்க்கையைக் கொண்டுச் செல்வதுடன் தன்னால் முடிந்தவரையிலும் சிறப்பாக தனது மகனை வளர்த்தெடுப்பேனென திடசங்கற்பம் பூண்டுள்ளாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விடய ஆய்வு - 3

சேபாலி ஊவா மாகாணத்தைச் சேர்ந்தவள். அவளுடைய பெற்றோர் கூலித்தொழில் செய்பவர்கள். அவளுக்கு இரு மூத்த சகோதரிகளும் ஒரு இளைய சகோரனும் உள்ளனர். அவளது குடும்பம் பல பொருளாதார பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்தது. ஏனெனில் பெற்றோருக்கு நிரந்தர தொழில் இருக்கவில்லை. சேபாலி 17 வயதில் படிப்பை இடைநிறுத்திவிட்டு ஆடைத்தொழிற்சாலை ஒன்றில் வேலைக்குச் சேர்ந்தாள். அங்கு ஒரு ஆணுடன் சிநேகம் ஏற்பட வீட்டிலிருந்து ஓடிச்சென்று அவனுடன் வாழ்ந்துவந்தாள். சில காலங்களின் பின்னர் அவளது நண்பன் அவளிடம் தான் தொழிலுக்கென புலம்பெயர இருப்பதாகவும் தனக்கு பணம் தேவைப்படுவதாகவும் கூறியபோது, அவள் தனது காதணிகளை அடகுவைத்து பணத்தைப் பெற்றுக் கொடுத்தாள். பின்னர் அவன் சேபாலிக்கு வேறொரு தொழிலொன்று நல்ல சம்பளத்தில் கிடைத்தால் சிறப்பாக இருக்கும் என கூறினான். அவளும் அதற்கு இசைந்து ஆடைத்தொழிற்சாலை வேலையினின்று விலகிவிட்டாள். அவளது ஆண் நண்பன் ஹோட்டலொன்றில் அவர்கள் இருவருக்குமென தொழிலொன்றை தேடிக்கொண்டான். எனவே இருவரும் அங்கு தங்கியிருந்து தொழில் புரிந்தனர். மூன்று நாட்களின் பின்னர் அவளது ஆண் நண்பன் காணமற் போய்விட்டான் என்பதை அவள் உணர்ந்துக் கொண்டாள். சென்றவன் அவளை சந்திக்க ஹோட்டலுக்கு திரும்பிவரவேயில்லை. இத்தருணத்தை பார்த்து ஹோட்டல் சொந்தக்காரர் அவளை விபச்சாரத்தில் ஈடுபட வற்புறுத்தினார். தப்பிச்செல்ல முடியாத நிலையில் ஹோட்டல் சொந்தக்காரர் கூறியதை செய்யவேண்டிய நிலைக்கு சேபாலி உள்ளானாள். அவளது ஆண் நண்பன் அவளை ஹோட்டலுக்கு விற்றுவிட்டதாக அவளுக்குக் கூறப்பட்டது. ஆறு மாதங்களின் பின்னர் ஒருவாறு தப்பி வெளியேறிய சேபாலி தனக்கு நிகழ்ந்த துயரத்தை வெட்கம் காரணமாக யாரிடமும் கூறவில்லை.

## விடய ஆய்வு - 4

நிமல் என்ற இலங்கையர் திருமணம் முடித்து மனைவியையும் மூன்று பிள்ளைகளையும் உடைய 32 வயதுடையவர். 2014ம் ஆண்டில், உள்ளுவூரிலுள்ள வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் ஒருவரால் 'X' நாட்டிலுள்ள கட்டுநிர்மாண தொழிற்சாலை ஒன்றில் வேலையொன்று பெற்றுக்கொடுக்கப்பட்டது. 'X' நாட்டிற்கு செல்ல அவசியமான முழுப்பணத்தையும் நிமலால் திரட்டமுடியவில்லை. விசா, போக்குவரத்துச் செலவு எல்லாவற்றுக்குமாக முகவர் நிறுவனம் 2,500 அமெரிக்க டொலர்களை அறவிட்டது. இதன் நிமித்தம் தொழில் முகவரால் மாதாந்த வட்டி 10%இற்கு வழங்கப்பட்ட கடன்தொகையை நிமல் ஏற்றுக்கொண்டார்.

நிமல் என்ற நபர் 'X' என்ற நாட்டை அடைந்த பின்னர் அவரது இரு மாத சம்பளங்கள் வழங்கப்படவில்லை. அவரது கடவுச்சீட்டு, மற்றும் ஏனைய ஆவணங்களும் தொழில் வழங்குநரால் எடுத்துக்கொள்ளப்பட்டன. தொடர்ந்து வந்த மாதங்களும் ஒழுங்காக சம்பளம் வழங்கப்படவில்லை. வாக்களிக்கப்பட்டிருந்த சம்பளத்தின் அரைவாசியே வழங்கப்பட்டது. ஒவ்வொரு நாளும் நிமல் 12 மணித்தியாலங்களுக்கு மேல் வேலை செய்கிறார். அவர் தொழில்புரியும் கட்டுநிர்மாண வேலைத்தளம் கடினமானதும் ஆபத்தானதுமாகும். அதிக வெப்பம், உடல் வறட்சி காரணமாக அவரது இரு நண்பர்கள் கோடை காலத்தில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். மற்றொருவர் கான்கிரீட் பாளம் தற்செயலாக பாரந்தூக்கியிலிருந்து விழுந்தமையால் இறந்துவிட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிமல் உடனடியாக வேலையை விட்டுவிட்டு இலங்கைக்கு திரும்ப விரும்பினார். ஆனால் தனது சம்பளமின்றி திரும்பினால் வெளிநாட்டு முகவருக்கு செலுத்த வேண்டியிருந்த கடனை செலுத்த முடியாதென அஞ்சினார். தொழில் விசா மற்றும் கடவுச்சீட்டு முதலியன தொழில் தருநரிடம் இருப்பதால் தொழிலை விட்டு ஓடிவிடவும் அச்சப்பட்டார். அவர் தொடர்ந்தும் தனது நிலையை குறித்தும் தனது சம்பளத்தை நம்பி இருக்கும் தனது குடும்பத்தைக் குறித்தும் கவலையுடனேயே இருக்கிறார்.

**வினாக்கள்**

1. இவ்விடய ஆய்வில் மனித வியாபாரத்தின் முக்கியப்பகுதிகள் காணப்படுகின்றனவா? ஆம் எனின் அவை யாவை? செயல், வழிமுறை, நோக்கம் என்ற முக்கிய பகுதிகளாக அவற்றை பிரித்துக் காட்டுக.

2. இந்த சம்பவம் உங்களிடம் அல்லது உங்களின் நிறுவனத்திடம் கொண்டுவரப்பட்டால் நீங்கள் அவ்விடயத்தில் எவ்வாறு உதவுவீர்கள்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பின்னிணைப்பு 1 :

### சட்ட விரோத மனித வியாபாரம் தொடர்பான மதிப்பீடு

நேர்காணலில் ஈடுபடுபவரின் பெயர் ..........................................................................................

முறைப்பாடு செய்பவரின் அடிப்படை தகவல்கள்: ..............................................................................

முறைப்பாடு குறித்த அடிப்படைத் தகவல்கள் ....................................................................................

..........................................................................................

1. பெயர் : ..........................................................................................
2. ஆண் / பெண் : ..........................................................................................
3. பிறந்த இடமும் திகதியும் : ..........................................................................................
4. வயது (வளர்ந்தோர் / இளம்பிள்ளை) : ..........................................................................................
5. விலாசம் : ..........................................................................................

..........................................................................................

6. நேர்காணல் நடைபெறும் திகதி : ..........................................................................................

| செயல் | வழிமுறை | சுரண்டல் |
|---|---|---|
| உங்களின் வீட்டை / கிராமத்தை விட்டுச் சென்ற மைக்கான காரணம் யாது?<br>• தொழில்<br>• கல்வி<br>• திருமணம்<br>• வியாபாரம்<br>• ஏனையவை (குறிப்பிடவும்)<br><br>மேற்குறிப்பிட்ட விபரத்தை நிறைவேற்ற எவராவது வாக்களித்தனரா? ஆம் எனின் யார்?<br>• முகவர்<br>• குடும்பம் ; உறவினர<br>• நண்பர்<br>• ஏனையவை (குறிப்பிடவும்)<br><br>உங்களின் பயணத்துக்கான ஏற்பாட்டை/ ஆவணங்களை ஒழுங்கு செய்தவர் யார் (யாருமிருந்தால்)? | இல்லம் / கிராமத்தை விட்டுச் சென்றவுடன் பின்வரும் கெட்ட அனுபவங்களை அனுபவித்தீர்களா? (பொறுத்தமானதை சுற்றி வட்டமிடவும்)<br>• பயமுறுத்தல்<br>• மோசடி<br>• பொய்யான வாக்குறுதி<br>• ஏமாற்றம்<br>• கடத்தல்<br>• வலுக்கட்டாயப்படுத்தப்படல்<br>• ஏனையவை | உங்களுக்கு வாக்களிக்கப்பட்ட பணத் கிடைக்கப் பெற்றதா? ஆம் / இல்லை<br>இல்லை எனின், எவ்வாறான செயல்களில் நீங்கள் ஈடுபட்டீர்களா?<br>• வீட்டு வேலை<br>• பாலியல் வேலை<br>• கட்டு நிர்மாண வேலை<br>• விவசாய வேலை<br>• ஏனையவை<br><br>பின்வருவனவற்றில் ஏதாவதொன்றுக்கு முகம் கொடுத்தீர்களா?<br>• இணங்கிய சம்பளம் தருதல் ஆம் / இல்லை<br>• நடமாட்டம் கட்டுப்படுத்தப்படல் ஆம் / இல்லை<br>• சரீர ரீதியில் துஷ்பிரயோகத்துக்கு உட்படல் ஆம் / இல்லை<br>• வார்த்தை ரீதியில் துஷ்பிரயோகத்துக்கு உட்படல் ஆம் / இல்லை<br>• பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படல் ஆம் / இல்லை<br>• பிரயாண ஆவணங்கள் பறிமுதல் செய்யப்படுதல் ஆம் / இல்லை<br>• எதிர்பார்த்த / சம்மதித்ததை விட வேறுபட்ட தொழில் ஒன்று செய்ய வற்புறுத்தப்படல் ஆம் / இல்லை |

**சுருக்கமான காலவரிசையும் ஏனைய குறிப்புக்களும்:**

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பின்னிணைப்பு - 2

### பாதிக்கப்பட்ட நபரை நேர்காணலுக்கு உட்படுத்தும் போது கவனிக்க வேண்டிய விடயங்கள்

மனித வியாபாரத்துக்கு உட்பட்ட நபர் பல்வேறு துலங்கல்களை வெளிப்படுத்தக்கூடும். தனிநபரின் உணர்வுகள் நாளுக்கு நாள், மணித்தியாலத்துக்கு மணித்தியாலம், அல்லது நிமிடத்திலேயே பல்வேறு மாற்றங்களுக்குள்ளாகலாம். சில விளைவுகளை நேர்காணலில் ஈடுபடுபவரால் வெளிப்படையாக அவதானிக்க கூடுமாக இருக்கும். அவையாவன நடுக்கம், பயம், கலக்கம், சுகவீனம் (காய்ச்சல், இருமல்) மந்தம், உணர்ச்சியின்மை, மற்றும் பதிலளிக்க முடியாத தன்மை துலங்கல் எவ்வாறு இருப்பினும், பாதிக்கப்பட்ட நபரின் உணர்வுகளையும் நடத்தையையும் கண்டறிவது முக்கியமானதாகும். அவர்கள் கஷ்டத்தை ஏற்படுத்துபவர்களாகவோ அல்லது ஒத்துழைக்க முடியாதவர்களாகவோ இருக்க முயற்சிக்கவில்லைஃ மாறாக தாம் அனுபவித்த மனித வியாபார தாக்கத்தை கையாளும் தனிப்பட்ட முறையாகவே இதனை கருதலாம்.

பின்வரும் பட்டியலானது பாதிக்கப்பட்ட நபரை நேர்காணலுக்கு உட்படுத்தக்கூடிய சில நுட்பங்களைக் குறிப்பிடுகிறது. நேர்காணலில் ஈடுபடுபவர் தனிப்பட்டோரையும், சூழ்நிலையையும் கவனத்திற்கு கொண்டு தனது அணுகுமுறையையும் கையாளும் நுட்பங்களையும் சரிப்படுத்திக் கொள்ளக்கூடியவராக இருக்க வேண்டும் என்பதை தயவுசெய்து கவனத்திற் கொள்ளவும், தரப்பட்ட குறிப்புகள் முழுமையானவை எனக் கூற முடியாது. ஆனால் கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய சரியான முறைகள் பற்றிய வழிகாட்டலை தருகிறது. எனினும் குறித்த தனிநபர் மற்றும் சூழ்நிலை தொடர்பாக தம்மை சரிப்படுத்திக் கொள்வது நேர்காணலில் ஈடுபடுபவரை பொறுத்த விடயமாகும்.

நேர்காணலானது சிறிய இடைவேளைகளைக் கொண்டமைய வேண்டும் (ஆகக்கூடியது ஒரு மணித்தியாலம்) தொடர்ச்சியான இடை வேளைகளைக் கொண்டதாகவோ அல்லது பாதிக்கப்பட்ட நபர் விரும்பும் வகையிலோ அமைய வேணடும். கீழே தரப்பட்ட குறிப்புகள் ஒரு குறிப்பிட்ட ஒழுங்கு முறையையோ அல்லது முன்னுரிமையைக் கொண்டதாகவோ அமையவில்லை.

**கலந்துரையாடலை ஊக்குவிக்க அவசியமான பொதுவான குறிப்புகள்:**

- பாதிக்கப்பட்டோரின் வசதிக்கு முக்கியத்துவமளித்து அமைதியான சூழ்நிலையை உருவாக்கிக் கொடுக்கவும். நீங்கள் அவருக்கு உதவியளிக்கவே வந்துள்ளீர்கள் என்பதை அவர்கள் உணரச்செய்ய வேண்டும்ஃ உங்களுடன் உரையாடலில் ஈடுபடுவது அவரின் தன்னிச்சையான செயலாகும்.
- கடினமான தன்மையை தவிர்த்து தனிப்பட்ட சூழலை உருவாக்க முயற்சியுங்கள், உணவருந்தவோ அல்லது பானமருந்தவோ அழைப்பு விடுங்கள். முடியுமாயின் நபருடன் இணைந்து தேநீர் அல்லது கோப்பி அருந்துங்கள் அல்லது பகலுணவு உண்ணுங்கள்.
- அந்நபருக்கு அசௌகரிய உணர்வை ஏற்படுத்துமாயின் குறிப்புக்கள் எடுப்பதை தவிருங்கள்.
- பொதுவான கலந்துரையாடலில் ஈடுபடுங்கள் உதாரணமாக, அந்நபரின் பொழுதுபோக்குகள் பற்றிஃ அனுபவித்த பயங்கர அனுபவம் பற்றி முதலில் பேச வேண்டாம்.
- அந்நபர் இயல்பு நிலைக்கு திரும்பும்போது, அவர் எவ்வாறு குறித்த இடத்தை அடைந்தார். அங்கு நடந்தது என்ன போன்ற அடிப்படை தகவல்களை பெற முயற்சியுங்கள் (தொடர்ச்சியான கணிப்பீடு மூலமாக) அவர்களுடைய உணர்வுகள் பற்றி விழிப்புணர்வுடன் மிகக் கவனமாக செயற்பாட்டை முன்னெடுங்கள்.
- அந்நபர் கதைக்க ஆயத்தமாக உள்ளார் என்பதைக் கண்டறிந்தப் பின்னர், கலந்துரையாடலில் ஈடுபடுங்கள், ஆனால் கேள்விகளுக்கு பதிலளிக்குமாறு வற்புறுத்த வேண்டாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நேர்காணலுக்கு உட்படுபவர் கதைக்காவிடில்?**

கதைக்கக்கூடிய உடல் நிலையில் இருந்தாலும் கூட பாதிக்கப்பட்ட நபர் சிலவேளைகளில் பேசாது இருக்கலாம். தனது பயங்கர அனுபவத்தின் மூலமான பல்வேறு காரணங்களால் அமைதியைக் காக்கலாம். அமைதியாயிருப்பதற்கான சில காரணங்களாவன :

- நம்பிக்கை - நேர்காணலில் ஈடுபடுபவர் மீது நம்பிக்கையின்மை.
- பயறுத்தல்களிலிருந்தும் வன்முறைகளிலிருந்தும் சுய - பாதுகாப்பு - கடத்திய நபரால் 'அமைதி' காக்க நிர்ப்பந்திக்கப்படல் அல்லது தண்டனைக்குள்ளாகலாம் என்ற பயம்.
- மன அழுத்தத்தை சமாளிக்கும் முயற்சி.

**பேசுவதை ஊக்குவிக்க பின்வருவனவற்றை முயற்சி செய்யவும்.**

- பேசுவதற்கு முயற்சிக்கு முன்னர் அந்நபர் அமைதி அமைதியடையவும், பிரதிபலிக்கவும் நேரம் வழங்குங்கள்.
- அந்நபர் பேச ஆயத்தமாகும்வரையும் பொறுமையாக இருக்கவும் (கலந்துரையாடலில் ஈடுபட வற்புறுத்துவதற்கு பதிலாக) இதனால் விளக்கமான, பயனுள்ள தகவல்களை அந்நபரால் வழங்கக்கூடியதாக இருக்கும்.
- பாதிக்கப்பட்ட நபர் பற்றிய தகவல்களேதும் நீங்கள் அறிந்திருந்தால் (உதாரணமாக பாதிக்கப்பட்ட பிறிதொரு நபரிடமிருந்து) இப்போது அதனைப்பற்றி கதைக்க வேண்டாம். குறித்த நபர் தானே தன்னைப் பற்றி கதைக்க விடுங்கள். ஏற்கனவே அறிந்த தகவலுடன் அதனை சோதித்துப் பாருங்கள்.
- சரியாக இருப்பின், கடதாசி, பேனை ; பென்சில் வழங்குங்கள். தமது உணர்வுகளுடனும் அனுபவத்துடனும் தொடர்புபட்ட விடயங்களை எழுதவோ அல்லது வரையவோ அவர்கள் விரும்பக் கூடும்.
- தற்போதும் கதைக்க விருப்பமின்றியே அந்நபர் இருப்பின், வற்புறுத்த வேண்டாம். உங்கள் மீதுள்ள நம்பிக்கையை தொடர்ந்தும் கட்டியெழுப்புமுகமாக அட்டை விளையாட்டு, சீட்டாட்டம், சித்திரம் கீறுதல், புதிரொன்றை செய்தல் அல்லது தோட்ட வேலையில் ஈடுபடுதல், நடத்தல் போன்ற ஏதாவதொரு பொழுது போக்கில் ஈடுபடுங்கள்.

**நேர்காணலுக்கு உட்படுபவர் கட்டுப்படுத்த முடியாது அழுதுக் கொண்டிருப்பதால் கதைக்க முடியாது இருப்பின் செய்வது யாது?**

கட்டுப்பாடின்றி அழுபவர்கள் பயமடைந்தவர்களாகவும் அவசர உதவி தேவைப்படுபவர்களாகவும் இருக்கலாம். மன அழுத்தம், பயம் என்பவற்றின் அடையாளமாக இவ்வழுகை காணப்படலாம். குணமடைவதற்கான ஆரோக்கியமான மற்றும் நேர்ப்பாங்கான குறிகாட்டியாக இது அமையலாம்.

**இவ்வாறான நிலைமையை கையாள அவசியமான சில முறைகளாவன :**

- அந்நபரை அழவிட்டு பொறுமையாகவும், உதவியளிப்பவராகவும் இருக்க முயற்சியுங்கள்.
- கைக்குட்டை அல்லது பானமொன்று வழங்க முயற்சியுங்கள்.
- சூழ்நிலைக்கும், கலாசாரத்திற்கும் ஒத்துப்போகுமெனின் சரீர ரீதியான தொடுகைக்கு உட்படுத்தி (தோளில், கையில், தலையில்) நீங்களும் அவர்களுடன் சேர்ந்து கவலைப்படுகின்றீர்கள் என்பதையும் காட்டுங்கள்.
- அவர்கள் தனிமையில் இல்லை. நீங்கள் உதவுவதற்கு உள்ளீர்கள் என்பதை விளக்குங்கள்.
- அவர்களுக்கு உதவி செய்ய உங்களுக்கு தகவல்களைப் பெற வேண்டும் என்பதை கூற முயற்சியுங்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- அந்நபர் அமைதியடைந்து பேச ஆயத்தமாகும் வரையிலும் உங்களால் காத்திருக்க முடியுமென கூறுங்கள். அந்நபர் பேச ஆயத்தமானவுடன் உங்களிடம் வரமுடியுமெனவும், பகிர்ந்து கொள்ள விரும்பும் எதைப்பற்றியும் பேசலாம் என்பதையும் விளக்குங்கள். அவர்களுக்கென யாதாயினும் ஒருவர் இருக்கிறார் என்பதை விளங்கிக் கொள்வதை உறுதிப்படுத்துங்கள்.
- தமது அனுபவம் குறித்த விபரமொன்றை வைத்துள்ளாரா என்பதை வினவுங்கள் (உதாரணமாக தினக்குறிப்பேடு அல்லது குறிப்பு புத்தகம்) அதனை உங்களுடன் பகிர்ந்துக் கொள்ள முடியுமா என்பதை கேட்டறியுங்கள்.

**குறித்த நபர் கோபமடைந்து, கத்தினால் / வன்முறையிலீடுபட்டால் செய்வது யாது?**

இத்துலங்கல் பொதுவானதாகும். தமக்கு நேரிட்ட காரியம் குறித்து அநேகர் கோபமடைவதுடன், இதுவே அவர்களது கோபத்தை வெளிப்படுத்தக்கூடிய பொருத்தமான சூழலாக, முதன்முறையாக அவர்கள் கண்டிருக்கக்கூடும். நேர்காணலில் ஈடுபடுபவர் சகித்துக் கொள்ளக்கூடிய பயங்கரமான செயன்முறையாக இது அமையலாம் என்பதை கவனத்திற் கொள்ள வேண்டும். உங்களுடைய ஆவல் பகுதியை தெரிந்து கொள்ளுங்கள். தம்மைப்பற்றி வெளிப்படுத்தும்போது இக்குணமானது அதிகரிக்கலாம். அமைதியாகவும், தன்னம்பிக்கையுடனும், எப்போதும் நேர்மையாகவும் இருப்பது மிக முக்கியமானதாகும்.

**சில குறிப்புகள் :**

- ஒரு நபர் கோபமடைவது சாதாரணமானது என்பதை நினைவுபடுத்திக் கொள்ளுங்கள். அவர்களுடைய கோபத்தையும், அந்நிலைமைக்கான காரணத்தையும் விளங்கிக் கொள்ளுங்கள்.
- தம்மையோ அல்லது பிறரையோ தீங்கிழைக்காத வரையில் அவசியமாயின், கோபத்தை தொடர்ந்து வெளிப்படுத்த சந்தர்ப்பமளியுங்கள்.
- செவிமடுங்கள், பாருங்கள், அந்நபரை புரிந்துக் கொள்ளுங்கள். பேச்சற்ற செய்கைகள் (தலையை ஆட்டுதல்) மற்றும் குறைவான பேச்சு (சரி, அப்படியா) என்பன சிறப்பான நுட்பங்களாகும்.
- எனக்குப் புரிந்துவிட்டது என்ற சொற்றொடரை உபயோகிப்பதில் மிக்க கவனமாக இருங்கள். அவ்வனுபவத்திற்கு உட்பட்ட ஒருவராலேயே உண்மையிலேயே அந்நபர் கடந்து வந்த உணர்வுகளை உணர்ந்துக்கொள்ள முடியும் இச்சொற்றொடரானது பாதிக்கப்பட்ட நபரை மேலும் கோபமூட்டலாம்.
- உங்களுடைய கேள்விகளுக்கு குறிப்பிட்ட நபர் பதிலளிக்க வேண்டிய கட்டாயமில்லை. கோப உணர்வு ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒன்றே ஆகும் என்பதை அந்நபர் உணர உதவிசெய்ய முயற்சியுங்கள். இவ்வுணர்வினூடாக சேர்ந்து அவருடன் பணியாற்ற முடியுமா என்பதையும் கோபமடைந்தாலும் அவருக்கு எவ்வாறு உங்களால் உதவ முடியும் என்பதையும் கண்டறியுங்கள்.
- செயல்முறை தொடரும்போது, அந்நபருக்கு இடைவேளை அவசியமா அல்லது செயல்முறையை தொடரலாமா என்பதை கேட்க மறக்கவேண்டாம். அவர்களுடைய உணர்வுகளை வெளிக்காட்ட போதுமான அவகாசம் அளியுங்கள்.
- அந்நபர் வன்முறையிலீடுபடுபவராக மாறுவாராயின் தம்மையோ அல்லது பிறரையோ காயப்படுத்தக்கூடும். அவருக்கு உதவி செய்ய முன்வருபவர்களும் பாதிக்கப்படலாம். துலங்கலை வெளிப்படுத்தும் மட்டம் மற்றும் காலத்தைப் பொறுத்தளவில், மனநல நிபுணர் ஒருவரை ஈடுபடச் செய்வது சிறப்பானதாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- சில தனிநபர் விடயங்களில் அவர்கள் தமது செயல்களை கட்டுப்படுத்த முடியாமல் (வன்முறை) இருப்பர். அவர்களை மனநல வைத்தியசாலைக்கு கொண்டுச் செல்வது அத்தியாவசியமானதாகும். தேவையாயின் மனநல நிபுணர் ஒருவரே நேர்காணலை சிறப்பாக செய்ய சரியான நபராக இருப்பார்.

**பின்னிணைப்பு - 3**

## பயிற்றுவிப்பாளர் வழிகாட்டற் குறிப்புகள்

**பின்னணியும் ஊக்கமும்**

இலங்கை நாடானது மனித வியாபாரத்தை தடுக்கவும், வழக்குத்தொடுக்கவும், பாதிக்கப்பட்டோரை பாதுகாப்பதற்கும் முக்கிய படிகளை எடுத்துள்ளது. தேசிய செயற்பாட்டு திட்டமானது 2015 - 2019 வரை விருத்தி செய்யப்பட்டுள்ளதுடன், தேசிய மனித வியாபார தடுப்புப் படையணி மூலம் மனித வியாபாரத்தை மறுபடியும் அறிமுகப்படுத்த வேண்டிய தேவை அதிகரிப்பின் காரணமாக உறுதிபடுத்தும் வகையில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இப்பயிற்சி கையேடானது மனித வியாபாரத்தால் பாதிக்கப்பட்ட நபர்களை இனங்காணவும் பாதுகாக்கவும் குற்றத்தில் ஈடுபட்டவர்கள் தொடர்பாக கண்டறிந்து தண்டனை வழங்குவது பற்றிய நடைமுறை அறிவை விருத்தி செய்யும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. பயிற்சியாளர் இக்கையேட்டைப் பயன்படுத்துவதன் மூலம் சமீபத்திய தகவல்களையும், குற்றத்தில் ஈடுபடும் பிரதான நபர்கள் தொடர்பான சிறந்த நடைமுறைகளையும் மனித வியாபாரத்தை தடுப்பது தொடர்பான அறிவையும் பெற்றுக்கொள்வர்.

### 1. பயிற்சி நெறி கட்டமைப்பு

குற்றத்தை தடுப்பதில் ஈடுபடும் அரச, அரச சார்பற்ற சமூக அமைப்புகளுக்கென பயிற்சி பாடவிதானம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இப்பயிற்சி நெறியானது ஒரு நாள் பயிற்சி நெறியாகவும், பாடவிதானமானது ஆறு ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்ட பாடங்களையும், விடய ஆய்வுகளையும் உள்ளடக்கி 8 மணித்தியாலங்களை அடிப்படையாகவும் கொண்டுள்ளது. இக்கலைத்திட்டமானது தேசிய மனித வியாபாரத் தடுப்பு படையணி அங்கத்தவர்களையும், ஆலோசகர் ஒருவரையும் கொண்டு வினைத்திறனுள்ள முறையில் உருவாக்கப்பட்டுள்ளது.

**பாடவிதானத்திலுள்ள பாடங்கள் பின்வருமாறு :**

| | | | |
|---|---|---|---|
| பாடம் 1 | - மனித வியாபாரத்தை புரிந்துக் கொள்ளல் | - | 60 நிமிடங்கள் |
| பாடம் 2 | - சட்ட நடைமுறை | - | 45 நிமிடங்கள் |
| பாடம் 3 | - மனித வியாபாரத்தால் பாதிக்கப்பட்ட நபர்களை இனங்காணுதல் | - | 60 நிமிடங்கள் |
| பாடம் 4 | - பாதிக்கப்பட்ட நபர்களை நேர்காணல் | - | 60 நிமிடங்கள் |
| பாடம் 5 | - பாதிக்கப்பட்டவரின் பாதுகாப்பு | - | 45 நிமிடங்கள் |
| பாடம் 6 | - பங்களிப்பும் பொறுப்புக்களும் | - | 30 நிமிடங்கள் |
| பாடம் 7 | - விடய ஆய்வுகள் | - | 60 நிமிடங்கள் |

### 2. பங்குபற்றும் பயிற்சியாளர்களாக தெரிவு செய்யப்பட்டோர்

இப்பயிற்சிக்கென பங்குபற்ற சிபாரிசிக்கப்பட்டவர்களாக பொலிஸ் நிலைய செயற்பாட்டு அதிகாரிகள், பிரதேச செயலக அபிவிருத்தி அதிகாரிகள், ஆலோசகர்கள், பயிற்சி அதிகாரிகள். தேசிய சிறுவர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதுகாப்பு அதிகாரசபை அலுவலர்கள், அரச சார்பற்ற நிறுவனங்களின் ஊழியர்கள் மற்றும் மனித வியாபாரம் தொடர்பான பிரச்சினை குறித்து செயலாற்றும் சிவில் சமூகத்தவர்கள் காணப்படுகின்றனர்.

### 3. பயிற்சி முறைகளும் வளங்களும்

கலைத்திட்டமானது தற்போதைய பயிற்சி முறைகளான கீழே தரப்பட்டுள்ள முறைகளைக் கொணடு கற்பிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

- Power point முன்வைப்புகள்
- குழுப்பயிற்சிகளும் விடய ஆய்வுகளும்
- சிறுகுழுக்களைக் கொண்ட கலந்துரையாடல்
- வினா, விடை மற்றும் கலந்துரையாடல் முறைகள்

### 4. பயிற்சி கையளிப்பு

**பாடம் 1 - மனித வியாபாரத்தை புரிந்துக் கொள்ளல்.**

பாடம் 1 இன் இலக்காவது பங்குபற்றுவோர்க்கு மனித வியாபாரக் குற்றம் தொடர்பான புரிந்துணர்வு மற்றும் செயற்பாட்டு அறிவைப் பெற்றுக் கொடுப்பதாகும். பங்குபற்றுவோரின் மனித வியாபாரத்தையும் ஏனைய குற்றங்களையும் வேறுபடுத்தி இனங்காணும் ஆற்றல் இதன் மூலமாக உறுதிப்படும்.

- மனித வியாபாரம் தொடர்பாக பங்குபற்றுவோர் அறிந்திருப்பது பற்றிய கலந்துரையாடலொன்றுடன் ஆரம்பமாகும்.
- மனித வியாபாரம் எவ்வாறு இடம்பெறுகிறது என விளக்கும்போது, பங்குபற்றுவோரிடம், இலங்கையில் எவ்வாறு மனித வியாபாரம் இடம்பெறுகிறது என ஊடகங்கள் மற்றும் வழக்கு அறிக்கைகள் மூலம் அவர்கள் அறிந்துள்ள தகவல்கள் குறித்து கலந்துரையாடுங்கள்.
- ஆட்கடத்தல் பற்றி விளக்கும் போது, பங்குபற்றுவோரிடம் ஆட்கடத்தல் பற்றி அவர்கள் அறிந்துள்ளவற்றை சுருக்கமாக கூறுமாறு வினவுங்கள். அத்துடன் தற்போது மனித வியாபாரம் குறித்து அறிந்திருப்பதால் ஆட்கடத்தலுக்கும் மனித வியாபாரத்துக்கும் இடையிலான வேறுபாடுகளை எவ்வாறு அறிந்துக்கொள்வர் என வினவவும்.

**பாடம் 2 - சட்ட நடைமுறை**

பாடம் 2 இன் இலக்காவது பங்குபற்றுவோர்க்கு மனித வியாபாரம் குறித்த சட்ட நடைமுறைகள் (தேசிய, பிராந்திய, மற்றும் உள்ளூர்) தொடர்பான புரிந்துணர்வை பெற்றுக் கொடுப்பதாகும்.

- மனித வியாபாரத்தை ஒழிப்பது தொடர்பில் இலங்கையில் உள்ள சட்டக் கருவிகள் குறித்த விழிப்புணர்வை பெற்றுக்கொள்வதுடன், சர்வதேச மற்றும் பிராந்திய ரீதியில் இலங்கைக்குள்ள பொறுப்புக்கள் பற்றிய அறிவைப் பெற்றுக்கொடுத்தல்.
- ஐக்கிய நாடுகள் சபையின் மாநாடுகள் மற்றும் நெறிமுறைகளில் கையொப்பமிட்டு உறுதிப்படுத்தியுள்ளமை தொடர்பில் இலங்கையின் பொறுப்புக்கள் குறித்த முக்கியத்துவத்தை விளக்குங்கள்.
- நாடுகளுக்கிடையில் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றத்துக்கு எதிரான ஐக்கிய நாட்டு கொள்கையை, மற்றும் துணைக்கொள்கைகளை சுருக்கமாக விளக்கவும். நாடுகளுக்கிடையிலான ஒழுங்கமைக்கப்பட்ட குற்றம் தொடர்பில் மற்றும் மனித வியாபார குற்றம் தொடர்பில் பங்குபற்றுவோர் அறிந்துள்ளவற்றை பற்றி கலந்துரையாடவும்.
- சட்டத்தொகுப்பு பிரிவு 360ஊ யிலுள்ள தண்டனை சட்டங்கள் மற்றும் மனித வியாபாரமும் சட்ட ஒழுங்குகளும் பற்றி கலந்துரையாடவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- இரு குற்றங்கள் தொடர்பான வேறுபட்ட தடுப்பு முறைகள் பற்றிய விழிப்புணர்வை பங்கு பற்றுவோர் பெற்றுக்கொள்வதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

**பாடம் 3 - பாதிக்கப்பட்ட நபர்களை இனங்காணுதல்**

இப்பாடத்தின் இலக்காவது பங்கு பற்றுவோர்க்கு மனித வியாபாரத்தால் பாதிக்கப்பட்ட நபர்களை இனங்காணுவதன் முக்கியத்துவத்தை உணர்த்துவதாகும்.

- பாதிக்கப்பட்ட நபரை இனங்காணுவதன் முக்கியத்துவத்தையும் சவால்களையும் பற்றி கலந்துரையாடவும்.
- குறிகாட்டிகள் மூலம் பாதிக்கப்பட்ட நபரை எவ்வாறு இனங்காணலாம் என்பதை பற்றி விளக்கவும்.
- பயிற்சி கையேட்டில் பகிரப்பட்ட மதிப்பீட்டு பத்திரம் மூலம் பாதிக்கப்பட்ட நபர்களை இனங்காணக்கூடிய பயன் பற்றி விளக்கவும்.

**பாடம் 4 - பாதிக்கப்பட்ட நபர்களை நேர்காணல்**

பாடம் 4 இன் இலக்காவது பங்குபற்றுவோர் பாதிக்கப்பட்ட நபர்களை நேர் காண்பது தொடர்பான பயிற்சியை பெறுவதாகும்.

- பாதிக்கப்பட்ட நபரை நேர்காண்பது தொடர்பான பாத்திரமேற்று நடித்தல் தொடர்பான பல்வேறு குழுப்பயிற்சிகளை வழங்கி பயிற்சியளிக்கவும்.
- பங்குபற்றுவோர் நேர்காணலின்போது செய்யக்கூடியவை மற்றும் செய்யக்கூடாதவை பற்றிய புரிந்துணர்வைப் பெற்றுக்கொள்வர்.
- பாதிக்கப்பட்ட நபர்களை நேர்காணும்போது காணப்படும் உணர்வுபு'ர்வ நிலை பற்றிய விழிப்புணர்வை பயிற்சியாளர் அதிகரிப்பார்.

**பாடம் 5 - பாதிக்கப்பட்டவரின் பாதுகாப்பு**

பாடம் 5 இன் இலக்காவது பங்குபற்றுவோரிடையே பாதிக்கப்பட்டவரின் பாதுகாப்பு தொடர்பான புரிந்துணர்வை வழங்குவதாகும்.

- பாதிக்கப்பட்ட நபரின் பாதுகாப்பு தேவை குறித்தும், உடனடி மற்றும் நீண்ட கால தேவைகள் குறித்தும் எவ்வாறு செயலாற்றலாம் என்பதை கலந்துரையாடவும்.
- பாதிக்கப்பட்ட நபருக்கு ஏனைய உதவி வழங்குநர்களுடன் இணைந்து எவ்வாறு உதவிச் சேவைகள் வழங்கி வழிப்படுத்தலாம் (SOP) நியம நடைமுறை செயற்பாட்டை கவனிக்கவும்.

**பாடம் 6 - பங்களிப்பும் பொறுப்புக்களும்.**

மனித வியாபாரத்தால் பாதிக்கப்பட்ட நபர்களை, இனங்காணல், பாதுகாத்தல் மற்றும் வழிப்படுத்தல் தொடர்பில் பிரதான பங்களிப்போரின் பங்களிப்பையும் பொறுப்புக்களையும் புரிந்துக்கொள்ள உதவியளிப்பதே இறுதி பாடத்தின் இலக்காகும். பல்வேறு பிரதான பங்களிப்பு நிறுவனங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பங்கு பற்றுவோரின் உதவியுடன் நடைமுறை கலந்துரையாடலாக இப்பாடமானது நடத்தப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீதி அமைச்சு

International Organization For Migration (IOM)

The UN Migration Agency

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ISBN 978-955-0152-09-4